14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கதர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

THIRU PRABHUDAS PATWARI.

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan and Ex-servicemen, Mines and Minerals, Village Industries and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme, Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries Registration, Forest including cinchona and youth Service Corps.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister-in-charge of Education including Technical Education, Official Language, Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. The Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister-in-charge of Transport, Nationalised Transports, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas and Refugees and Evacuees, and Correctional Administration (Approved Schools and Vigilance Service).

13. The Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarr, Handloom, and Khadi.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜெ. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்.

திரு. பி. கே. இலக்குமிநாராயணன்

எஸ்டேட் அதிகாரி.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	ஹரூர் (செ.வ.).
2	அப்துல் ரஜாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா. ..	பெண்ணாகரம்.
5	அமிர்த ராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
6	அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
7	அய்யாசாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.).
8	அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ.வ.).
9	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
10	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி.
11	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) ..	கோயம்புத்தூர் (மேற்கு).
12	அருணாசலம் திரு. இரா. ..	நாமக்கல் (செ.வ.).
13	அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன் திரு. க. ..	புரசவாக்கம்.
16	அன்பழகன், திரு. தி.	நாட்றாம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதிசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
22	ஆறுமுகம், திரு. மு.	சேலம்-2.
23	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
26	இராசரத்தினம், திரு. து. ..	பூந்தமல்லி.
27	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
28 இராமசாமி, திரு. க.ந.க. ..	கோபிச்செட்டிபாளையம்.
29 இராமசாமி, திரு. எஸ். ஜே.	சோளிங்கர்.
30 இராமசாமி, திரு. எஸ். வி. ..	பெரம்பலூர் (செ.வ.).
31 இராமசாமி. திரு. டி.	இராமநாதபுரம்.
32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ..	சாத்தூர்.
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) ..	அருப்புக்கோட்டை.
34 இராமச்சந்திரன், திரு. என். ..	செஞ்சி.
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) ..	பண்ருட்டி.
36 இராமச்சந்திரா ரெட்டி, திரு. என். ..	ஹோசூர்.
37 இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்.
38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. ..	தல்லி.
39 இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. ..	அம்பாசமுத்திரம்.
41 உக்கிரபாண்டியன், திரு. க. ..	பரமக்குடி (செ.வ.).
42 உச்சி, திரு. கே. ..	கூடலூர்.
43 உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
44 உமாநாத், திரு. ரா. ..	நாகப்பட்டிணம்.
45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. ..	ஆற்காடு.
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) ..	திருநெல்வேலி.
47 எத்ராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.).
48 ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பேட்.
49 ஐசரி வேலன், திரு.	டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.
50 கணேசன், திரு இ.	எடப்பாடி.
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.)
53 கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
54 கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
55 கபாலி, திரு. டி. கே. ..	மயிலாப்பூர்.
56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. ..	திருவாடானை.
57 கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58 கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
59 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.).
60 கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62 கலியமூர்த்தி, திரு. துரை ..	சிதம்பரம்.
63 காத்தமுத்து, திரு. கி. பெ. ..	தொட்டியம்.
64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) ..	திருப்பரங்குன்றம்.
65 காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
66 காளியப்பன், திரு. இரா. ..	ஏற்காடு (ஆ. வா.).
67 கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
68 கிட்டு, திரு. ப. கோ. ..	பல்லடம்.
69 கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
70 கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.).
72 கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. ரா. ..	வாசுதேவநல்லூர் (செ.வ.).
74 குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
75 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.).
76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) ..	உடுமலைப்பேட்டை
77 கோதண்டராமன், திரு. வி. கே. ..	குடியாத்தம்.
78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி.	முசிறி.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80 கோவிந்தராசன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு.
82 கோவேந்தன், திரு. மு. ரெ. ..	பேராவூரணி.
83 சங்கரய்யா, திரு. என்.	மதுரை கிழக்கு.
84 சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
85 சண்முகம். திரு. ப.உ. ..	திருவண்ணமலை.
86 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
87 சண்முகம். திரு. ச. ..	கூத்தக்குடி, திருப்பத்தூர்.
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89 சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90 சந்திரன், திரு. ப.	பெரணமல்லூர்.
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. ..	தியாகராயநகர், சென்னை.
92 சமரசம், டாக்டர் கே. ..	காவேரிப்பட்டிணம்.
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) ..	திருமங்கலம்.
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபநாசம்.
95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96 சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.).
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.).
102 சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103 சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.).
104 சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. ..	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
108 சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
109 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113 சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
114 சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
115 சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
116 சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
117 சுப்பிரமணியன், திரு. வ. மு. ..	மானாமதுரை (செ. வ.).
118 சுப்பிரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ. வ.).
119 சுப்பு, திரு. க. ..	வில்லிவாக்கம்.
120 சுப்புலட்சுமி, திருமதி ..	மொடக்குறிச்சி.
121 சுப்பையா, திரு. ச. ..	சங்கரநாயினார் கோவில் (செ. வ.).
122 சுவாமிதாஸ், திரு. எ. ..	பத்மநாபபுரம்.
123 செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124 செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125 செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ. வ.).
126 செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127 செல்வராஜ், திரு. சினி. ..	சமயநல்லூர் (செ. வ.).
128 செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129 சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ. வ.).
130 சோமசுந்தரம், திரு. ஒ. ப. ..	பொள்ளாச்சி.
131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.).
132 சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2.
133 சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
134 சௌந்திரராஜன், திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்.
135 ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
137 தங்கவேலு, திரு. ர. ச.	வால்பாறை (செ. வ.).
138 தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ.	பேரணும்பட்டு (செ.வ.)
140 தனசேகரன், திரு. ந.	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ.	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ், (பேரவைத் துணைத்தலைவர்.)	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. அரசாங்க தலைமைக்கொறடா	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு.	சங்கராபுரம்.
149 துரை முருகன், திரு.	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம.	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ.	உளுந்தூர்பேட்டை (செ. வ.).
152 தைலப்பன், திரு. டி. எம்.	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. அ.	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு.	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க.	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பெ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா.	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராமன், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவம், திரு. அ. மா.	மேலூர்.
162 பரமசிவம், திரு. மொ.	வானூர் (செ. வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. ந. ..	அவினாசி (செ. வ.).
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.).
168 பாண்டியன், திரு.	சேரன்மாதேவி.
169 பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர் (செ. வ.).
172 பாலாஜி, திரு. க.	காஞ்சீபுரம்.
173 பாலுசாமி, திரு. அ.	நிலக்கோட்டை (செ. வ.).
174 புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.).
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. மு.	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ. வ.).
180 பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்
181 பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம்.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) ..	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், மாண்புமிகு (அமைச்சர்) திரு. கி. ..	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்கரெட் எலிசபெத் ..	பிலிக்ஸ் நியமன உறுப்பினர்.
191 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ..	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமிகரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ..	வந்தவாசி, (செ. வ.).
200 முனிரத்தினம், திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, மாண்புமிகு திரு. .. (பேரவைத் தலைவர்)	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். எ. ..	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. இ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ. வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
220 வரதராஜன், திரு. என்.	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223 வின்சென்ட், திரு. மி. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ.	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஐ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
230 ஜகதீசன், திரு. ஆனூர் ..	செங்கல்பட்டு.
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம். ஏ. ..	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்— அமைச்சர்.

3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்— அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5 திரு. வி. பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977, ஜுலை 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நியமன உறுப்பினர், திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள்.

* திருமதி மார்கெரட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்.

2. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. வீ. இராமசாமி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை நாமக்கல் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு கே. வி. இராமசாமி அவர்கள் 19—7—1977ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் வருத்தத்தையும் இரங்கலையும் அன்னாரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுன மாக எழுந்து நின்றனர்.)

* ஆங்கிலத்தில் கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

3. வினுக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

சிந்தாமணி சிறப்பங்காடி, கோவை.

*2. குறுகிய கால வினு:— திரு. கு. ரமணி, திரு. ரா. வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டில் பணி புரியும் குமாஸ்தாக்கள் உட்பட சுமார் 1,500 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிருர்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: சூப்பர் மார்க்கெட்டில் வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. அமைச்சர் இல்லையென்று சொல்கிருர். இப்போது முடிவாகி இருக்கலாம். அதனுல் அப்படிச் சொல்கிருரோ, என்னவோ தெரியவில்லை. ஆனுல் அங்கே இப்போது தனி அதிகாரி ஒருவர் ஏற்படுத்தப்பட்ட பிறகு, தொழிலாளர்களது நிலைமைபற்றி சரியான நடவடிக்கைகள் எடுக்காததன் விளைவாக, பத்து வருஷமாக நல்ல பெயரோடு செயல்பட்டுவந்த சிந்தாமணி சூப்பர் மார்க்கெட், இன்றைக்கு மக்களுக்குப் போதுமான அளவில் சேவை செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே அந்தத் தனி அதிகாரி தொழிலாளர்கள் விஷயத்தில் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கையை எடுக்கச் செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே நான் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்று முழுமையாகச் சொல்லவில்லை. கேள்வி சூப்பர் மார்க்கெட்டில் பணி புரியும் குமாஸ்தாக்கள் உட்பட சுமார் 1,500 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிருர்களா என்பதாகும். அதற்கு இல்லையென்று சொன்னேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மொத்தம் 1,318 பேர்கள் தான். வேலை நிறுத்தம் சம்பந்தமாக தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, ஒரு சமரசம் ஏற்பட்டு, ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிருர்கள்.

1977 ஜூலை 23]

திரு. கு. ரமணி: அவர்கள் ஏற்கனவே இந்த விவரங்களைக் கொடுத்திருந்தால் எனது கேள்வியே அப்படிப் போட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஊழியர்கள் வேலைக்குத் திரும்பி இருப்பதும் கூட அவர்களது கோரிக்கைகள் பூராவும் ஏற்கப்பட்டு திரும்பியிருக்கிறார்களா? அல்லது கோரிக்கைகளை ஏற்பது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் பேரில் திரும்பியிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ? இல்லையென்றால் மறுபடியும் அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் சங்கடமான கசப்பான நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே. உடனடியாக அந்தத் தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள அந்த விசேஷ அதிகாரி உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பங்காடியில் 1,318 தொழிலாளர்கள் 16 கோரிக்கைகள் வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தத்திற்கான தாக்கீதை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு 6—7—1977 இல் பதினொன்றே முக்கால் மணிக்கு அனுப்பினார்கள். உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரி தொழிலாளர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். என்றாலும் பேச்சு வார்த்தைக்குப்போகாது பன்னிரண்டரை மணிக்கு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள். பின்னால் 12 ஆம் தேதி பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. அவர்களது கோரிக்கைகளில் 14 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களும் திருப்தி அடைந்து வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஒரு சில கோரிக்கைகள் பற்றி 25 ஆம் தேதி மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள். 25 ஆம் தேதி பேச்சுவார்த்தையில் எந்த விதமான முடிவும் ஏற்படவில்லை என்றால் ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பிவைப்பதைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்தப் பேரங்காடியில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குமுன் அவர்கள் வைத்த கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கைகள் எவை? அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட்: அவர்கள் 16 கோரிக்கைகள் வைத்தார்கள். அவைகளில் முக்கியமான கோரிக்கைகள் எவை என்பதை முடிவு செய்ய வேண்டியது தொழிலாளர்களே தவிர வேறு யாரும் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும். தொழி

லாளர்கள் இன்றைக்குத் திருப்தி அடைந்து வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்திருக்கிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: கோவை சிந்தாமணி சூபர் மார்க்கெட் தொழிலாளர்கள் பிரச்சினை ஏற்கனவே, டெபுடி லேபர் கமிஷனர் முன்னிலையில் இந்த 1,500 தொழிலாளர்களது சம்பளம், பஞ்சப்படி கோரிக்கைகள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இந்த உடன்பாட்டின் அடிப்படையில் அமலாக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உ(ர்)ரா. எட்மண்ட்: அவர்களது கோரிக்கைகள் அமலாக்கப்பட்டிருப்பதனால்தான் அவர்கள் திரும்ப வேலைக்கு வந்து ஒழுங்காக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சில கோரிக்கைகள் பற்றி மீண்டும் 25 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது.

திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இந்த 16 கோரிக்கைகளில் எவை எவை முக்கியமான கோரிக்கைகள்? அவைகளை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. உ(ர்)ரா. எட்மண்ட்: ஊதிய உயர்வு கேட்டு ஒரு கோரிக்கை இருக்கிறது. அதை அதிகாரி ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது அல்ல பிரச்சினை. சமரச உடன்பாட்டை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இப்படிப்பட்ட சிறப்பங்காடிகளில் உள்ள தொழிலாளர்கள் கோரிக்கைகளைக் கொடுத்தவுடன் வேலை நிறுத்தம் ஏற்படாமல் தவிர்க்க, உடனடியாக அந்தக் கோரிக்கைகள் பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உ(ர்)ரா. எட்மண்ட்: இந்தக் கேள்வி பொதுவானதாக இருக்கிறது. குறிப்பிட்ட இந்தச் சிறப்பங்காடியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், தொழிலாளர்கள் பதினொன்றேமுக்கால் மணிக்கு அறிவிப்புக் கொடுத்தார்கள். பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்தும் வராமல் பன்னிரெண்டரை மணிக்கு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுதான் அங்கு ஏற்பட்ட நிலை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1977 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்கிற நிலையில் அடுத்த வினாவிற்குப் போகிறேன்.

அடுத்த வினாவையொட்டி ஒரு கவன ஈர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டிற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிட்டால் அதனையொட்டி துணை வினாக்கள் போட வாய்ப்பு இருக்கும். இரண்டையும் எடுத்துக்கொள்ளலாமா?

திரு. கோ. இளங்கோவன்: கவன ஈர்ப்பை எடுத்துக் கொண்டுவிட்டால், அதன் மீது கவன ஈர்ப்புத் கொடுத்த உறுப்பினர்களைத் தவிர மற்றவர்களும் துணை கேள்வி போட அனுமதிக்கப்படுவார்களா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் ஏகமனதான முடிவாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் இதே கருத்துக்கள்தான் அடங்கியிருக்கின்றன. கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற விளக்கங்கள் இந்தக் கேள்வியோடு இணைந்திருப்பதால் அதையும் படித்துவிட்டு, குறுகிய கால வினாவையும் எடுத்துக்கொண்டால் பின்னர் யார் வேண்டுமானாலும் துணைக் கேள்விகள் கேட்கலாம். இதற்கு அவையின் அனுமதி கேட்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நானும் இன்னொரு நண்பரும் கொடுத்திருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் இதோடு சேர்த்து எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் யார் கையெழுத்து போட்டுக்கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் மட்டும்தான் கேள்விகள் கேட்கலாம் என்று விளக்கத்தில் இருக்கிறது. கேள்வி நேரம் என்றால் மற்ற உறுப்பினர்களும் துணைக் கேள்விகள் கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் கேட்கக் கூடிய சந்தர்ப்பம் தரவேண்டும் என்றுதான் இதைச் சொல்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

கல்லூரி பள்ளிப் பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதில் ஏற்பட்ட கால தாமதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எஸ். சிவசாமி ஆகியோர் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ''கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்களை அச்சிட்டு வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் அவர்கள் அடைந்துள்ள இடர்பாடுகள் குறித்து'' மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்துப் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நாட்டுடைமை ஆக்கப் பெற்ற பாட நூல்களை வெளியிட்டு வருகிறது. 1-2-1976-ல் தமிழ்நாட்டில் குடியரசு ஆட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு, பாட நூல் நிறுவனம் வெளியிட்ட புத்தகங்களை ஆய்வு செய்வதற்காக (நால்வர் கொண்ட) ஒரு குழுவை அரசு 20-3-1976-இல் நியமித்தது. இக்குழு பாடநூல்களைப் பரிசீலித்து நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு ஆகியவற்றை பாட நூல்களில் சேர்க்கவும், சில பகுதிகளை நூல்களில் இருந்து நீக்கவும் அறிக்கை அளித்தது. இந்த அறிக்கையில் அடிப்படையில், புதிய பாடங்களை நூல்களில் சேர்ப்பதற்காக பள்ளி கல்வி இயக்குநர் தலைமையில் 12-11-1976-இல் அரசு சில குழுக்களை நியமித்தது.

2. குழுக்களின் கருத்துக்களை எல்லாம் ஆய்ந்து எந்தெந்த பாடங்களை சேர்க்க வேண்டும்; எந்தெந்த பாடங்களை நீக்க வேண்டும் என்று அரசு 24-2-1977-இல் ஆணை பிறப்பித்தது. இதற்குப் பிறகும் 11-4-1977-இல் சில மாற்றங்கள் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணைகளுக்கு ஏற்ப தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிட்டு இவ்வாண்டு பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது. சென்னையிலும், சிவகாசியிலும் உள்ள அச்சகங்களுக்கு பதிப்பு வேலைகளை வழங்கி பள்ளிகள் திறப்பதற்கு முன்பு பாட நூல்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டது. சென்ற ஆண்டு இருந்ததைப் போல பாட நூல்களை விற்பனை செய்ய கூட்டுறவு நிறுவனங்களை (மொத்த வியாபாரிகளாகவும் சில்லறை வியாபாரிகளாகவும்) அரசு நியமித்துள்ளது.

3. பாட நூல்கள் 30-5-1977 முதல் வெளியூர்களிலும், 6-7-1977 முதல் சென்னையிலும் விற்பனையாகி வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை பாட நூல் நிறுவனம் சில்லறை வியாபாரிகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இது வரை வெளியூர்களுக்கும் சென்னைக்கும் அனுப்பப்பட்ட நூல்களின் மொத்த எண்ணிக்கை $2\frac{1}{4}$ கோடியாகும். அவைகளின் மதிப்பு ரூபாய் மூன்று கோடியே நாற்பது லட்சத்திற்கும் மேலாகும். இவ்வளவு நூல்கள் அனுப்பிய பிறகும், ஒரு சில இடங்களில் புத்தகங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது. ஏனெனில் பழங்குடி மக்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு அரசு இந்த ஆண்டு முதல் படிப்பு உதவித் தொகையை பள்ளிக்குச் செலுத்த வேண்டிய தொகை போக மீதமுள்ள பணத்திற்குப் பாட நூல்களாகக் கொடுக்க வேண்டும் என்று 23-3-1977 இல் சமூக நலத்துறையில் ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய நூல்கள் என்னென்ன என்பதை 28-4-1977 இல் அரசு தெளிவு படுத்தியுள்ளது. இந்த ஆண்டு உதவித் தொகையை புத்தகங்களாக வழங்கு வதாலும் இதற்கென்று தனியாக மனுச் செய்து சான்றிதழ் பெறுவதிலும் மாணவர்களுக்கு சில தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. இந்த உதவித் தொகைக்கு அருகதை உள்ள எல்லா மாணவர்களுக்கும் நூல்கள் கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான பட்டியல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து பெற்று பாட நூல்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் புத்தகங்களின் தேவையும் அதிகமாகி உள்ளது. அதிகப்படித் தேவையான பாட நூல்களையும் அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

4. கல்லூரிகளுக்குத் தேவையான எல்லா நூல்களையும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடவில்லை. ரூபாய் ஒரு கோடி திட்டத்தின் கீழ் மைய அரசு வழங்கும் மானியத் தொகையைப் பெற்று பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பயன்படும் சில நூல்களை மட்டும் பாடநூல் நிறுவனம் தமிழில் வெளியிட்டு வருகிறது. கல்லூரிப் பாட நூல்கள் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைக்குப் பதிலாக, நூல்களாகவே வழங்கப்பட்டு வருகிறது. இந்நூல்கள் கல்லூரி மாணவர்கள் கல்லூரியில் சேரும் கடைசி நாளான 31-7-1977க்குப் பிறகு கல்லூரி முதல்வர்களிடம் இருந்து பட்டியல் பெறப்பட்டு அளிக்கப்பட்டு வருகின்றது. மற்ற கல்லூரி நூல்களை பல்கலைக் கழகங்களும், தனியார் நிறுவனங்களும் அசிட்டு வெளியிடுகின்றன.

5. பாடநூல்களைத் தயாரிக்க மத்திய அரசு மலிவு விலையில் காகிதம் தந்து உதவுகிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய காலாண்டுக்கு உரிய மலிவு விலைக் காகிதம், காகித ஆணையில்

இருந்து குறிப்பிட்ட காலத்தில் வந்து சேரவில்லை. இதுவும் பாட நூல்கள் வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாட நூல்கள் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று திருவாளர்கள் ஜே.ஜேம்ஸ் எம். எல். ஏ., வில்சன் அப்போலஸ், எம். எல். சி., ஆகிய இருவரும் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும், அரசுக்குத் தெரிவித்தார்கள். பாட நூல் நிறுவனத்திடம் இது பற்றி அறிக்கை பெறப்பட்டது. இந்த அறிக்கையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 5–7–1977 வரை ரூ. ஒன்பது லட்சத்து 63 ஆயிரத்து 419.45 மதிப்புள்ள பாட நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. சென்ற ஆண்டு முழுவதும் இந்த மாவட்டத்தில் விற்பனையான நூல்களின் மதிப்பு ரூ. 8 லட்சத்து 36 ஆயிரத்து 306.24 தான். மேற்படி உறுப்பினர்களுக்கு இது சம்பந்தமாக விபரமான பதில் 13–7–1977 அன்று அனுப்பப்பட்டு உள்ளது.

3. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

பள்ளிப் பாட புத்தகங்கள்

*3 குறுகிய கால வினா :—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பள்ளிக்கூடங்கள் திறந்து வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம், எனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ & இ) :—பாட நூல்களைப் பரிசீலித்து நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, முதலியவற்றை நூல்களில் சேர்க்கும் பொருட்டு, அரசு நியமித்த குழுக்களின் பரிந்துரைகள் மீது, 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிடும் பணியை மேற்கொண்டது. மலிவு விலையில் அச்சிடும் தாள் உரிய காலத்தில் காகித ஆலையிலிருந்து வந்து சேரவில்லை. எனவே மொத்த விற்பனையாளர்களாகிய தாலுக்கா கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு நூல்களை அனுப்புவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது.

1977 ஜுலை 23]

திரு. சோ. அழகர்சாமி :—தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி போட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகிறது. ஆகவே, இப்போது புத்தகங்கள் எந்தெந்த பள்ளிக்கூடங்களுக்குப் போய் சேரவில்லை என்று சொல்லப்பட்டதோ அந்தப் பள்ளிகளுக்கு எல்லாம் புத்தகங்கள் போய் சேர்ந்து விட்டதா ?

இன்னொன்று பாட புத்தகங்கள் வாங்குவதில், இதற்கு முன்னுல் புத்தகங்களை முன்னுலேயே வாங்கிவிட்டால், உதவித் தொகை கொடுக்கும்போது, இதற்கான பணத்தையும் சேர்த்து கொடுத்துவிடுவதுண்டு. இப்போது, உதவித் தொகைக்கு பதிலாக பாட புத்தகங்களை வாங்கி கொடுத்துவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் மாணவர்கள் தாங்களாகவே புத்தகங்களை வாங்கிவிட்டார்கள் என்ற தகவல் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப் புத்தகம் வாங்கியவர்களுக்கு, மீண்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுக்காமல், உதவித் தொகையைக் கொடுத்துவிட்டால், நலமாக இருக்கும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிருர்கள் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுவரை புத்தகங்கள் சேராத இடங்களுக்கு எல்லாம் உடனடியாக சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்களை வாங்கிவிட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையை கொடுத்துவிடலாம் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த இந்தப் பதிலில் அரசாங்கத்திற்குள்ள சிக்கல்களை ஒத்துக்கொண்டார்கள். அதே நேரத்தில் பள்ளிகளில் மாணவர்கள் புத்தகங்கள் வாங்கவில்லை என்ற காரணத்திற்காக மாணவர்களை பள்ளிகளிலிருந்து வெளியேற்றி விடுகிருர்கள். இது அரசாங்கத்திற்கும் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமை இருப்பதின் காரணமாக பல சிக்கல்களும் சங்கடங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்பட்டு காலையிலேயே காட்டுக்குச் சென்றி மூன்று அல்லது மூன்றரை ரூபாய்க்கு காட்டுக் கருவல்விறகு சேகரித்து விற்று மாணவர்களுக்கு புத்தகங்களை வாங்கிக் கொடுக்கிருர்கள். இப்படியிருந்தும் சில மாணவர்கள் புத்தகங்கள் வாங்கவில்லை என்ற காரணத்திற்காக மாணவர்களை வெளியே வீட்டுக்குஅனுப்பிவிடுகிருர்கள். ஆகவே................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்வியைச் சுருக்கமாக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: இந்த நிலைமை பரமக்குடி பகுதியில் இருந்து வருவதால், மாணவர்களைப் பள்ளிகளில் இருந்து வெளியே அனுப்பக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியில் இந்த மாதிரி செய்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவித்தால், அதுபற்றி தேவையான நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலிலே இருந்து, 11—4—1977-ல் பாட நூல் சம்பந்தமாக அரசாங்கத்தின் இறுதி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது என்றிருந்தாலும்கூட, இப்போது ஜூலை மாதம் இறுதியாகி விட்டபோதிலும்கூட, இதுவரை மாணவர்களுக்குப் போதுமான புத்தகங்கள் இன்னும் கிடைக்கக்கூடிய வகையில் வழி செய்யப்படவில்லை. சாதாரணமாக ஜூன் மாதம் முதலில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும். இப்படிப் பள்ளிக்கூடங்கள் திறந்து 2 மாதங்கள் ஆகியும், போதுமான பாடநூல் பிள்ளைகளுக்கு இன்னும் கிடைக்க ஏற்பாடு செய்யவில்லை. கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் இம்மாதிரியான நடவடிக்கைகள் அதற்கு இடையூறாக உள்ளன என்பதை இந்த அரசாங்கம் உணருமா? அதோடு, இந்தப் பாட நூல்களை விநியோகிப்பதிலே இப்போது நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விநியோகிக்கும் முறையைக் கையாண்டு வருகிறோம். இவைகளின் மூலம் விநியோகிப்பதால், காலதாமதமும், பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஆகவே தனியார் மூலமாகவும் விநியோகித்தால் இந்தக் கஷ்டம் ஓரளவு குறைய முடியும். இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை அடுத்து வருகின்ற ஆண்டில் ஏற்படாது. பாடநூல்களில் நீக்கம், சேர்த்தல் பற்றிய இறுதி ஆணை 11—4—1977-ல் போடப்பட்டது. அதற்குப் பிறகுதான் புத்தகங்கள் அச்சிட திருத்திய படிகள் அச்சகங்களுக்கு அனுப்பப்பட்டன. ஆகவேதான் இதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. நாங்கள் எல்லாம் பொறுப்பேற்றுக்கொண்டது ஜூன் 30 ஆம் தேதி தான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள்.

1977 ஜூலை 23]

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, அப்படி அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட புத்தகங்களில் பிழைகளும், தவறுகளும் நிறைய இருக்கின்றன. உதாரணமாக, ஒன்பதாம் வகுப்புத் தமிழ்ப் பாட புத்தகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய பிறந்த நாள் பிப்ரவரி 23 ஆம் தேதி என்று போடப்பட்டிருக்கிறது. அவருடைய பிறந்த தேதி, 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் தேதி. அதேபோல் அவர் வெளிநாட்டில் தனியாக தற்காலிக அரசாங்கம் அமைத்தது 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி. அதையும் மாற்றி அச்சடித்திருக்கிறார்கள். இப்படி பல பிழைகள் இருக்கின்றன. இவைகளைத் திருத்துவதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளைத் திருத்துவதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாட நூல்கள் தஞ்சை மாவட்டத்திலே, மன்னார்குடி பகுதியில் போதுமான அளவு கிடைப்பதில்லை. பாட நூல்களை கூட்டுறவுத் துறைகள் மூலம் துரிதமாக விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இந்த ஆண்டு இருப்பதைப் போலவே, கூட்டுறவுத்துறைகள் மூலம் விநியோகிக்கப்பட்டுத் தனியார் துறை தவிர்க்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தவிர, மத்திய அரசாங்கம் பத்திரிகைக் காகிதம் அனுப்புவதற்கு காலதாமதம் ஆனதற்கான காரணம் என்ன? இனி வரும் ஆண்டுகளிலாவது பொறுப்போடு, பிள்ளைகள் படிப்பதற்கு காலதாமதம் ஆகாமல், உரிய காலத்தில் காகிதம் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகங்களை விநியோகம் செய்கின்ற ஒரு பொறுப்பை இப்போது கூட்டுறவுத் துறையினர் மூலமாகத்தான் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தனியார் துறையினரிடம் தந்ததில், ஊழல்கள் நடந்திருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ, தனியார் துறைக்குத் தரலாம் என்று யோசனை சொல்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தனியார் துறைக்கு விற்பனை உரிமை கொடுக்கக்கூடாது என்று தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நன்றி. கூட்டுறவுத் துறை மூலம் விநியோகம் செய்வதை நல்ல முறையிலே விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே, பள்ளிகளிலே மாணவர்களுக்குக் கொடுத்த புத்தகங்களைத் திருப்பிப் பெறுகின்றார்கள். அப்படித் திருப்பிப் பெற்றுவிட்டு, மாணவர்களைப் புத்தகங்கள் வாங்காவிட்டால், பள்ளிக்கு வரவேண்டாம் என்று சொல்கிறார்கள். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வருமான வரம்புக்கு உட்பட்டவர்களுக்குத்தான் இந்த உதவி அளிக்கப்பட வேண்டுமென்ற அரசு ஆணைக்கு மாறாக பல பேருக்குப் புத்தகங்களைத் தந்து விட்டதாகத் தெரிந்ததன் பேரில் அப்படிக் கொடுத்த புத்தகங்களைத் திரும்பப் பெறும் முயற்சியில் தலைமையாசிரியர் ஈடுபட்டார். அப்படிக் கொடுத்த புத்தகங்களைத் திரும்பப் பெற வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : கூட்டுறவு விற்பனை அங்காடிகளில் இந்தப் புத்தகங்கள் விற்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பெறுவதில் எல்லா மாணவர்களுக்கும் இடர்ப்பாடு இருக்கிறது என்றாலும், அரசு உதவி பெறுகிறவர்கட்கென சமூகநலத் துறையிலிருந்து உரிய தொகை கூட்டுறவு அங்காடிகளுக்கு அனுப்பாததால் இந்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் புகார் பொதுவாகவே இருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையாத் தேவர் குறிப்பிட்டது போல் இன்னொரு வகுப்பு சரித்திரப் புத்தகத்தில் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய பாடத்தில் பெரியார் வைக்கத்தில் ஆலயப் பிரவேசத்திற்காகப் போராட்டம் நடத்தினர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வைக்கத்தில் நடத்திய போராட்டம், ஒரு குறிப்பிட்ட தெருவில் அரிசன மக்கள் செல்லுவதைத் தடுத்ததை எதிர்த்து நடத்திய போராட்டமாகும். இது திருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தத் தவறைப் பார்த்துத் திருத்துகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. சொ. வேலுச்சாமி : இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்கக்கூடிய தொகையைவிட, அந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் வருமான வரம்பு பற்றிய சான்றிதழ்களைப் பெறுவதற்கும், பிற்பட்டவர்கள் போன்ற சான்றிதழ்களைப் பெறுவதற்கும் செலவழிக்கக்கூடிய தொகை சில நேரங்களில் அதிகமாகி

1977 ஜுலை 23]

விடுகிறது. இவ்வாறு அவர்கள் சார்ந்துள்ள சமூகம், வருமானம் ஆகியவற்றுக்காக பெற்றோர்களைச் சான்றிதழ்கள் பெற்றுத் தரும்படி சொல்வதற்குப் பதிலாக தலைமையாசிரியர்கள் அவர்களே தாசில்தாரிடத்தில் தொடர்பு கொண்டு அந்தந்த மாணவர்களுக்கு நேரடியாகச் சான்றிதழ் பெற்றுத் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர்கள் வருமானம் சாதி சம்பந்தமான சான்றிதழ் பெறுவதில் இருக்கக்கூடிய சங்கடங்கள் இந்த அரசு உணருகிறது. அதுபற்றிய நிலைமைகளைப் பரிசீலித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாடப் புத்தகங்கள் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற திட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூட ரெக்கார்டுகளிலேயே அவர்கள் அரிசனங்கள் என்பதற்கான அத்தாட்சி இருந்தும் கூட, அவர்களை அரசு அதிகாரிகள் எம்.எல்.ஏக்களிடம் அத்தாட்சி வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது தேவையில்லை என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இருந்து வருகிற நடைமுறை இது. ஏற்கனவே இருந்த அரசால் நடத்தப்பட்டு வந்த நடைமுறையில் வேண்டிய மாற்றங்களை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர்கள் பொறுப்பை 30 ஆம் தேதியன்று ஏற்றுக் கொண்டிருந்தாலும் இந்தத் துறை தொடர்ந்து நடை பெற்று வருகிற துறை. கல்வியாண்டு தொடங்குகிற ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிந்து வைத்திருக்கிற துறை. அதிலே தாமதத்திற்கும் அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் தொடர்பு இல்லை. இந்தக் குறைகளை நீக்கும் வகையில் இந்தத் துறையில் பாடப் புத்தகங்களுக்கான பாடத் திட்டங்களை வகுக்கின்ற கட்டத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது அச்சகத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா, அச்சு முடிந்த பிறகு வினியோகத்துறையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கி அப்படி ஏற்படுகிற தாமதத்திற்குக் காரணங்கள் யாவை, யார் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் ? எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தாமதத்திற்கு மிக முக்கியமான காரணம்—தேச பக்தியைக் கடைப்பிடிக்கிறோம் என்ற அடிப்படையில் இதற்கு முன்னால் இருந்த பாடப் புத்தகங்

களில் மாறுதல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு சில பரிசீலனைகள் செய்து சேர்க்க வேண்டியவற்றைச் சேர்க்கவும், நீக்க வேண்டியவற்றை நீக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்போது புதிதாக நாங்கள் பொறுப்பேற்று தாமதத்தைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிலைமை நிச்சயமாக எதிர் காலத்தில் இருக்காது.

திரு. செ. சிவசாமி: பாடப் புத்தகங்களை வாங்கக்கூடிய சிக்கல்கள் இருப்பதோடு, பாடப் புத்தகங்களுக்கான நோட்ஸ், மற்றும் நோட்டுப் புத்தகங்களின் விலைகள் கடந்த இரு வாரங்களாக 10-ல் இருந்து 20 சதவிகிதம் வரை உயர்ந்திருக்கிறது; அதோடு மாணவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய எல்லாவிதமான பொருள்களும் சன்னஞ்சன்னமாக விலையேறிக் கொண்டிருக்கிறது. இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்திலே குடியரசுத் தலைவர் ஆட்சியில் பாடப் புத்தகங்களில் நீக்கப்படவேண்டியவைகள் நீக்கப்பட்டுள்ளன என்ற கருத்துப்படப் பதிலளித்தார்கள். அப்படியானால் தந்தை பெரியார் பற்றிய கருத்துக்கள் நீக்கப்பட்டிருக்கின்றன, அவைகளும் நீக்கப்பட வேண்டியவை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் சொன்னது குடியரசுத் தலைவர் ஆட்சியில் அவர்கள் செய்த ஒன்றைத்தான். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள், நானும் சொல்லியிருக்கிறேன், தந்தை பெரியார் அவர்கள் பற்றிய கருத்துக்களைப் பாடப் புத்தகங்களில் இப்போது அனுபந்தமாகச் சேர்க்க உத்திரவிடப்பட்டிருக்கிறது என்று. இதற்கு மேலும் நான் ஒன்றை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுடைய வரலாற்றுக் கருத்துக்கள், தி.மு.க. ஆட்சியில் 8-ஆம் வகுப்பு வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பெறாத தந்தை பெரியார் அவர்களின் வரலாற்றுப் பகுதியும் இப்போது இடம்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்).

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரிசன மாணவர்கள் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் பெறுவதற்கு சான்றிதழ்கள் பெறவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனல் இலங்கையிலிருந்து வந்த அகதிகள், பர்மாவிலிருந்து வந்த அகதிகள் இவர்கள் எல்லாம் தங்களுடைய பேமிலி கார்டு, பாஸ் போர்ட் இவைகள் வைத்திருந்தாலும் அதிலே அவர்கள் எந்த சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படாமல் இருக்கிற காரணத்தால் தாசில்தார்கள் சான்றிதழ்கள் வழங்க மறுக்கிருர்கள். ஆகவே, பர்மா அகதிகள், இலங்கை அகதிகள் இவர்கள் எல்லாம் அங்கிருந்து இங்கே வந்திருக்கின்ற காரணத்தால் சான்றிதழ் பெருமலேயே பாஸ் போர்ட்டை வைத்தே அவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் பெறக்கூடிய வழியைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. அவையுரிமைப் பிரச்சினைகள் :

(அ) "மெயில்" நாளேடு குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13—7—1977 அன்று இப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் '' மெயில் '' ஆங்கில நாளேட்டின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினர். 7—7—1977 அன்று '' மெயில் '' பத்திரிகையின் தலையங்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப்பேரவையில் 4—7—1977 அன்று நிகழ்த்திய உரையின் மீது கருத்துத் தெரிவித்து எழுதி உள்ளது என்றும், ஆனல் அதில் அவரது உரையைத் தவருகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அத் தலையங்கம் அமைந்திருக்கிறது என்றும் இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து மெயில் பத்திரிகை ஆசிரியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர் எழுதியுள்ள பதிலில் கூறியிருப்பதாவது :—

". . . The matter in question does not refer to a news item but an editorial comment, based on the reported speech of the Chief Minister which gave me the impression that Mr. Latheef claimed

to be sole representative of the Muslim community. The comment was made in good faith without malafide or malicious intentions, nor was it motivated

The comment was based on the impression gained that he was claiming to be the sole representative of the Muslim community. If this comment infringes the privileges of the member in the Assembly, I am sorry. I make it once again clear that the comment was bonafide and not motivated."

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4—7—1977 அன்று ஆற்றிய உரையையும், '' மெயில் '' பத்திரிகையின் தலையங்கத்தையும் நான் கூர்ந்து கவனித்தேன். உறுப்பினர், தான் கொடுத்த அறிவிப்பிலேயே ''எங்கள் கட்சியின் சார்பாக 10 பேர்கள் போட்டியிட்டு நான் ஒருவன்தான் சிறுபான்மை சமுதாயத்தின் ஏகப் பிரதிநிதியாக வந்துள்ளேன் '' என்று கூறியுள்ளார்.

திரு. லத்திப் அவர்கள் பேசிய கருத்தை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதாவது ''............ சில கருத்துக்கள் மாறுபட்டு இங்கே சொல்லப்பட வேண்டிய அவசியம் ஏற்படலாம் '' என்றும் '' முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன்தான் வந்திருக்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த அமைச்சரே இருக்கிறார். இன்னும் மூன்று இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இங்கே உறுப்பினர்களாக எங்கள் பக்கத்தில் வந்திருக்கிறார்கள் என்பதை நான் வற்புறுத்திக் கூறும்போது ஒரு மதத்திற்கு, ஒரு சாதிக்கு, ஒரு வர்க்கத்திற்கு மட்டும் நாங்கள் பிரதிநிதிகளாக வரவில்லை என்பதையும், எல்லோருக்கும் பிரதிநிதிகளாக—மக்கள் அனைவருடைய எண்ணத்தின் பிரதிநிதிகளாக—நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்ற நிலையில் எங்களுடைய கடமையைச் செய்து உங்களுக்கு ஒத்துழைப்புத் தருவோம் '' என்றும் கூறியுள்ளார்கள்.

இத்துறையிலிருந்து உறுப்பினருக்கு 4—7—1977 அன்று நடந்த விவாதத்தில் உறுப்பினர் ஆற்றிய உரையின் படிவத்தை திருத்துவதற்காக 5—7—1977 அன்று அனுப்பியிருந்தும், இது வரை எந்த விதமான திருத்தமும் வரவில்லை.

பத்திரிகையின் தலையங்கத்திலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துத்தான் சரியானது என்பதை வலியுறுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இந்தத் தலையங்கம் உறுப்பினர் கருதுவதுபோல் ஒரு உள்நோக்கத்தில் எழுதியது என்று கருத இடமில்லை. பத்திரிகைகள் தலையங்கம் எழுதும் போது தங்கள் கருத்துக்களை வெளியிடும் வகையில் உறுப்பினர்கள்

கருத்துக்கு மாறுபட்டோ அதில் வேண்டுமென்றே திரித்துக் கூறியிருந்தாலோ ஒழிய அவையின் உரிமைக்கு மீறிய செயலாகக் கருதமுடியாது. இவை "fair comment" என்ற முறையில் தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் பத்திரிகைகளில் அரசியல் வாதிகளை அல்லது அவர்களது கருத்துக்களை விமர்சிக்கும்போது அது சிறிது கடுமையாக இருந்தாலும் நாம் அதைப் பெரிது படுத்தாது நம் கடமைகளை ஆற்ற வேண்டும். அவை உறுப்பினர்கள் இங்கு அச்சமின்றிப் பணியாற்ற உரிமை உற்றதுபோல பத்திரிகைகளும் சுதந்திரமாக இயங்கவேண்டும். இது ஜனநாயகத்தின் தேவை. எனவே நமது உரிமைகளைக் காப்பது போலவே நான் பத்திரிகைகளின் உரிமைகளையும் காக்கவேண்டுமெனக் கூறத் தேவையில்லை. "மெயில்" பத்திரிகையின் தலையங்கத்தினால் உறுப்பினர் அவர்கள் தனது கடமையைச் சரிவரச் செய்ய இயலாது போய்விடும் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. ஏனெனில் உறுப்பினர் அவர்கள் பிரச்சினையில் மிகுந்த கவனம் செலுத்திப் பணியாற்றுவதில் வல்லவர் என்பது எனக்குத் தெரியும்.

எனவே, பத்திரிகை ஆசிரியர் எந்தவித உள் நோக்கத்துடனும் தாம் தலையங்கம் எழுதவில்லை என்று கூறியிருப்பதால், மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று கருதி, இத்தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : No, தீர்ப்புக்கு மேலே பேசாதீர்கள். தயவுசெய்து தீர்ப்புக்குப் பிறகு பேசாதீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதைக் கேளுங்கள். உறுப்பினர் பேசிவிடலாம், ஒரு தீர்ப்பின் மீது தான் சொன்னதையே வலியுறுத்தி அவைத் தலைவர் நிற்கும்பொழுது பேசிவிடுவதாலே உங்களுடைய நிலைமையை ஸ்திரப்படுத்துவிட்டதாக அர்த்தமில்லை. தயவு செய்து அவையினுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கிப்போனால்தான் அவையை நன்றாக நடத்த முடியும். எனவே, தயவுசெய்து உட்காருங்கள். நான் நிற்கும்பொழுது நீங்கள் உட்கார வேண்டும். தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசியது அத்தனையையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-35—9-4-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

(ஆ) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது எழுப்பப் பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 13—7—1977 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையை எழுப்பினர்கள். எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாக நான் தெரிவித்து இருந் தேன். இப்போது எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு சுப்பு அவர்கள் தமது பிரச்சினையில் மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரையில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்த சில கருத்துக்கள் இப்பேரவை கூடி யிருக்கையில் அரசின் கொள்கைகளை அவைக்கு வெளியே அறி வித்ததாகும் என்றும், அதனால் அது அவையின் உரிமையை மீறியதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து எனக்கு அளித்துள்ள விளக்கத்தில் மதுரையில் பத்திரிகை நண்பர் களோடு அவர் பேசிக்கொண்டு இருக்கும்போது மாநகராட்சித் தேர்தல் பற்றியும், கட்டாய ஓய்வு பெற்றோர், இளைஞர் அணி, சீரணி பற்றியும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அது பற்றி அரசு முடிவு செய்யும் என்று தெரிவித்ததாகவும் எந்தப் புதிய அறிவிப்பையும் தரவில்லை என்றும், பத்திரிகை கள் சிலவற்றில் அந்தச் செய்திகள் மாறுபட்டோ அல்லது முரண்பட்டோ வந்திருந்தால் அதற்குத் தான் பொறுப்பல்ல என்றும் கூறியுள்ளார்.

அரசின் கொள்கை பற்றிய விளக்கங்களைப் பேரவை கூடியிருக்கும் நாட்களில், பேரவையில் தான் அளிக்க வேண்டும் என்பது ஒரு நியதிதானே ஒழிய, வேறில்லை. ஆயினும் அவை கூடியிருக்கும் நாட்களில், மாண்புமிகு அமைச்சர்கள் இதுபோன்ற கொள்கை விளக்கங்களை இவ் அவை யிலேயே கொடுப்பது அவைக்குக் கொடுக்கும் மரியாதை யாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கம் ஏதும் அளிக்கவில்லை என்று கொடுத்துள்ள விளக்கத்தை ஏற்று, திரு சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஜுலை 23]

(இ) 'மாலை முரசு' மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 12—7—1977 அன்று, சென்னை பதிப்பு ,மாலை முரசு' செய்தித்தாள் ஆசிரியர் மீது பேரவையின் 184-வது விதியின்கீழ் ஒரு அவை உரிமை மீறல் பிரச்சனையை எழுப்புவதற்கு அறிவிப்புக் கொடுத்திருந்தார். அப்பிரச்சனையை 13—7—1977 அன்று எழுப்புவதற்கு எனது இசைவைக் கொடுத்தேன். அன்று, உறுப்பினர் அவர்கள் அப்பத்திரிகை எவ்வாறு அவை நடவடிக்கைகளை முழுதும் பிரதிபலிக்கும் வகையில் அன்றி, ஒரு கட்சி உறுப்பினர்களின் சொற்பொழிவுகளையே வெளியிட்டு இருந்தார்கள் என்றும், மற்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொண்டதை வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துள்ளார்கள் என்றும், ஆகவே அவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறி, வேண்டுமென்றே பிரசுரித்துள்ளார்கள் என்றும், ஆகவே அப்பத்திரிகை அவையினது உரிமைகளை மீறி உள்ளது எனக்கூறினர்.

சென்றக் கூட்டத் தொடரில், இப்பிரச்சனை குறித்து என்னுடைய தீர்ப்பை, இக்கூட்டத்தொடரில் கூறுவதாக சொல்லியிருந்தேன்.

'மாலை முரசு' பத்திரிகை ஆசிரியருக்கு இப்பிரச்சனை குறித்து விளக்கம் கேட்டதில் பின் வருமாறு கூறியுள்ளார்கள் :—

* * *

On persual of our issue, dated 8th July 1977 you will find that in the front page, we have published the point of Order raised by Mr. James (Janatha), Mr. A. R. Marimuthu (Congress), Mr. Sankariah (C.P.M.), Mr. Alagirisamy (C.P.I.) and Mr. Lathiff Muslim League) apart from the replies made by the Hon'ble Ministers. In the second page you will find that we have published the point of order of Mr. R. Umanath, the very member who has raised the privilege issue against us. On that day we have covered the news of all sections of the House and hence the allegations of Mr. Umanath that our readers will think that a section of the House did not take part, is not correct.

Further, the discussions on the Governor's address was not confined to 8th July 1977. It was spread over for seven days and we have published the speeches of members of all parties on the Governor's address in our issues dated, 9th, 11th, 12th, 13th, 14th, and 15th.

Therefre, you will find that there has been no suppression or black out of any particular section of the House, in its debates on the Governor's address, as alleged by the Members.

We assure you however, that we will be extra careful in future to see that no room is given to the public to think that any party did not take part in the proceedings of the House.”

அன்றைய பத்திரிகையை பார்க்கும்போது, ஒரு சில உறுப்பினர்களது விவாத சொற்பொழிவுகளை முழுமையான தாக வெளியிட்டுள்ளார்கள். திரு ஏ. செல்வராஜ் அவர்கள் பேச்சும், ‘‘சட்ட சபையில் சுப்பு (தி.மு.க.) பேச்சு ’’ என்ற தலைப்பில் ஐந்து பத்தி தலைப்பு கொடுத்து, ஐந்து பத்தி அளவில் வெளியிடப்பட்டுள்ளது. அன்று அவையில் ஏறக் குறைய 21 உறுப்பினர்கள் பங்கெடுத்துக்கொண்டுள்ளார் கள்.

அந்த உறுப்பினர்களின் பேச்சுக்களில் சிலவற்றைத் தவிர மற்றவர்களின் பேச்சுக்களைப் பற்றி, எந்தவிதத்திலும் சுருக் கியோ, அல்லது பங்கு கொண்டார்கள் என்ற குறிப்போ நான் பார்த்த வரையில் அந்த நாளிட்ட பத்திரிகையில் இல்லை.

அவையினது நிகழ்ச்சிகளை அல்லது இங்கு நடத்தப்படும் விவாதத்தின் பொருள்பற்றி கட்டுப்படுத்த இந்த அவைக்கு முழு உரிமை உண்டு. ஆனால் நடவடிக்கைகளை மாற்றியோ, திரித்தோ அல்லது வேறு விதமாக குறைத்தோ வெளியிடாது அவையில் நடந்ததை நடந்தவாறு முழுவதும் கூறுவிடினும், அதனுடைய சுருக்கத்தையாவது மாற்றம் இன்றி வெளியிட் டால் அவைபற்றி இப்பேரவை பொருட்படுத்தாது. ஆனால் இவைகளை, வேறு விதமான வகையில் குறைத்தோ, கூட்டியோ அல்லது திரித்தோ வெளியிட்டால், அது அவையின் உரிமையை மீறிய செயலாகக் கருதப்படும் என்பதற்கு நமது அவை யிலும், பாராளுமன்றத்திலும், லண்டன் ஹவுஸ் ஆப் காமன்ஸ் சபையிலும் தீர்ப்புகள் எண்ணற்றவை இருக்கின்றன. ஆங்கிலத்தில் இதை சுருக்கமாகக் கூறினால்—

“. . . . Each House has the power to control, and if necessary, to prohibit, the publication of its debates and proceedings. Normally, no restrictions are imposed on reporting the proceedings of the House But when the debates are reported malafide, that is, when a wilful misrepresentation of the debates arises, the offender is liable to punishment for committing a breach of privileges and contempt of the House.

The publication of false or distorted partial or injurious report of debates or proceedings of the House or its Committees or wilful misrepresentation or suppression of speeches of particular members, is an

1977 ஜூலை 23] [பேரவைத் தலைவர்]

offence of the same character as the publication of libels upon the House, its Committees or members: and the persons who are responsible for such publication are liable to be punished for a breach of privilege or contempt of the House" . . . (Practice and Procedure of Parliament by Kaul and Shakdher—page 242)

அவ்வாறே, மே பாராளுமன்ற முறை பற்றிய புத்தகத்திலும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது—

"Analogous to the publication of libels upon either House is the publication of false or perverted, or of partial and injurious reports of debates or proceedings of either House or committees of either House or misrepresentations of the speeches of particular members."

மேற்கண்டவாறு கூறிவிட்டு,

the following are instances of misconduct in connection with the publication of debates which has been treated as a breach of privilege என்று "suppressing speeches of particular members"

என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே அவையினது நடவடிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடும்போது எழுத்துக்கு எழுத்து பத்திரிகையில் வெளியிட முடியாது என்றாலும், வெளியிடப்படுவது அவையினது நடவடிக்கைகளை குறைத்துக் கூறாமல், முழுமையாக அதனது கருத்தை அல்லது சுருக்கத்தை வெளியிட வேண்டுமென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு மரபு ஆகும். அம்மரபை பத்திரிகைகள், அவர்களுக்கு ஏற்ற அல்லது விரும்பும் பகுதிகளை மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்ற நடவடிக்கைளை அல்லது மற்ற உறுப்பினர்கள் பேசியதை அவர்களது பத்திரிகையில் குறிப்பிடாவிடில் உறுப்பினர் திரு. உமாநாத் கூறியது போல், அன்று அவையில் அப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள் மட்டுமே பேசினார்கள், மற்றவர்கள் பேசவில்லை என்ற கருத்து நிலவும் நிலை ஏற்படும். இது பத்திரிகைகளுக்கு தெரிந்திருந்தாலும், இவற்றை வேண்டுமென்றே வெளியிட்டு விட்டு பின்னால் உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பும்போது, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி தங்களுக்கு அவையின் நடவடிக்கைகளை மறைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏதும்

இல்லை என்ற பதிலையும் அளிக்கிறார்கள். இவை எல்லாம் நமது பாராளுமன்ற மரபுக்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் முரணானது.

இப்பிரச்சினையில், மாலை முரசு பத்திரிகை அவையினது உரிமையை மீறி இருந்தாலும், இம்மாதிரி பிரச்சினையில் அவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இருந்தாலும், அவை தனது கண்ணியத்தைக் கருதியும் பரந்த நோக்கத்தினாலும் இம்மாதிரி உரிமை மீறல்களை பொருட்படுத்துவதில்லை. இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமைகளை மீறுவது என்பதும் முறையாகாது.

ஆறுவது சட்ட மன்றப் பேரவை ஆரம்பத்தில் ஒரு சில நடவடிக்கைகளை இம்மாதிரியான பிரச்சினைகளில் நமது அவை மிகவும் கடுமையாக இன்றி, சற்று பரந்த நோக்கோடு, எவ்வித நடவடிக்கையும் இல்லாது விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

ஆயினும், பத்திரிகைகளுக்கு ஓர் எச்சரிக்கை செய்வது நலம். பத்திரிகைகளின் உரிமைகள் எவ்வளவுதூரம் காக்கப்படவேண்டுமென்று பத்திரிகைகள் விரும்புகின்றதோ, அவ்வாறே அவர்களும் இப்பேரவையினது உரிமைகளும் மதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த அவையின் நடவடிக்கைகளுக்கு உரிய மதிப்பையும் மரியாதையையும் கொடுக்க வேண்டும். அவ்வாறு நடைமுறையில் செயல்படும்போது இவ்வவையின் நடவடிக்கைகளை திரித்தோ, மாற்றியோ அல்லது வேறு வகையிலோ குறை கூறும் அளவுக்கு இல்லாது அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என்று கருதி இப்பத்திரிகையின்மீது தொடர்ந்து வேறு நடவடிக்கை ஏதும் தற்பொழுது தேவையில்லை என்று கருதுகிறேன். இம்மாதிரி தொடர்ந்து தவறுகள் ஏற்பட்டால் அவை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

(ஈ) 'முரசொலி' நாளேடுமீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13—7—1977 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் 9—7—1977 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி 10—7—1977 தேதியிட்ட முரசொலி பத்திரிகையில் முதல் பக்கத்தில் "சட்ட மன்ற நடவடிக்கை" என்ற தலைப்பிலும், "கலைஞர் எழுப்பிய கேள்விக்கு

1977, ஜூலை 23] [பேரவைத் தலைவர்]

எம்.ஜி.ஆர். தந்த பதில்'' என்ற துணைத் தலைப்பிலும் மாண்புமிகு முதல்வர் கொடுத்த பதில் முழுவதும் இல்லாதது மட்டும் அன்றி அதில் முக்கியமான கருத்தின் சுருக்கமும் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு உரிமை பிரச்சினையை எழுப்பினர். இப்பிரச்சினை குறித்து நான் எனது தீர்ப்பை பிறகு கொடுப்பதாகத் தெரிவித்து இருந்தேன்.

இது பற்றி முரசொலி நாளேடு ஆசிரியர் அவர்கள், அவரது 20—7—1977 தேதியிட்ட பதிலில், நான் ''அண்ணு'' பத்திரிகைமீது எழுப்பப்பட்ட உரிமை பிரச்சினைமீது கொடுத்த தீர்ப்பின் சில பகுதிகளை மட்டும் கோர்வையின்றி எடுத்துக் காட்டி அத்தீர்ப்பில் பேரவைத் தலைவர் கூறியுள்ளது முரசொலி பத்திரிகைக்கும் பொருந்தும் என்ற வகையில் எழுதி உள்ளார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல. மேலும் சென்னை 10—7—1977 தேதியிட்ட ''முரசொலி'' செய்திக்கும் சட்டமன்ற குறிப்பேட்டில் பதிவாகியுள்ள பேரவை நடவடிக்கைகளுக்கும் அதே தேதி ''தினமணி'' பத்திரிகையில் வந்துள்ள நடவடிக்கை குறிப்பின் சுருக்கத்திற்கும் மாறுபாடுகள் உள்ளன. முதல்வர் பேச்சில் கீழ்க்கண்ட பகுதி முக்கியமான பகுதி ஆகும்—

'' நான் நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் யாரை ஆதரித்தோமோ அவர்கள் இந்தத் தேர்தலில், இந்தச் சின்னத்தை எம்.ஜி.ஆர். ஆதரித்தார்கள், அதற்கு வாக்களியுங்கள் என்று கேட்டார்கள் என்பதையும், நடந்து முடிந்த இடைத் தேர்தல் பற்றி எல்லா உறுப்பினர்களுக்கும் நினைவிருக்கும் என்று கருதுகிறேன்— திண்டுக்கல் தேர்தல்—அதிலே என்னுடைய படத்தைப் போட்டு உதயசூரியனுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று விளம்பரம் செய்தார்கள் என்பதையும்.................. தெரிவித்துக்கொள்கிறேன்.''

இதே செய்தியை ''தினமணி'' பத்திரிகை பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

''.................. எம்.ஜி. ஆரால் ஆதரிக்கப்பட்ட அபேட்சகர் என்று அந்த வேட்பாளர் போஸ்டர்களைப் போட்டுப் பிரச்சாரம் செய்திருக்கிறார் என்றும், அ.இ.அ.தி.மு.க. அப்போதே இதனை ஏன் மறுத்திருக்கக் கூடாது என்றும் மீண்டும் கருணாநிதி கேட்டார்.

ஒவ்வொருவரையும் மறுத்துக்கொண்டே இருப்பது தமது வேலை அல்ல என்று முதல் அமைச்சர் பதிலளித்தார். திண்டுக்கல் தேர்தலில்கூட தி.மு.கவினர் தேர்தலில் தமது பெயரை உபயோகித்துக் கொண்டதற்கு தம்மிடம் ஆதாரம் வைத்துக் கொண்டிருப்பதாகவும்...................... ''

TRUTH ALONE TRIUMPHS

எனவே, முரசொலி ஆசிரியர் விளக்கம் கொடுத்திருப்பது ஏற்றுக்கொள்ளும் முறையில் அமையவில்லை. ஆயினும் நான் சிறிது நேரத்திற்கு முன்பாக "மாலை முரசு" பத்திரிகைக்கு கொடுத்த தீர்ப்பில் பத்திரிகைகள் எவ்வாறு அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று கூறியுள்ளேன். அக்கருத்துக்கள் இந்த ஏட்டிற்கும் முற்றிலும் பொருந்தும்.

ஆறுவது சட்டமன்றத்தில் இவை எல்லாம் பற்றி ஆரம்பத்திலேயே கடுமையான நடவடிக்கை வேண்டாம் என்ற எண்ணத்தினுல் இப்பத்திரிகைக்கும் அவையின் நடவடிக்கை குறிப்புகள் வெளியிடப்படுவது சுருக்கமாக இருந்தாலும், அவைகளின் மையக் கருத்துக்கள் வேறுபடாமல் வெளியிடப்படவேண்டுமென்று எச்சரித்து இப்பிரச்சனையில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கின்றேன்.

(9-50)

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு லத்தீப் பேசியவை அத்தனையையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று உத்திரவிடுகிறேன்.

THIRU M..A. LATHEEF : As a protest, I walk out of the House.

(திரு. எம். ஏ. லத்தீப் வெளிநடப்புச் செய்தார்]

(6) அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 193வது விதியின்கீழ் திரு. டி. இராமசாமி அவர்களை அலுவல் ஆய்வுக்குழுவில் உறுப்பினராக நியமிக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-50—9-56-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(7) தகவல் கோரல்.

இந்தியப் பிரதமரிடமிருந்து தமிழக முதல்வருக்கு வந்திருப்பதாகக் கூறப்படும் கடிதம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, அண்மையில் நம்முடைய பேரவையில் நடந்து முடிந்த ஆளுநர் அவர்களின் உரைக்குப் பிறகு இந்திய திருநாட்டினுடைய பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியதாக ஏடுகளில் செய்திகள் விரிவாக வந்துள்ளன. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் இதுவரையில் எந்தப் பதிலும் அளிக்கவில்லை. அப்படி ஏதாவது பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் வந்ததா? மத்திய-மாநில உறவுகள் பற்றியும் மொழிப் பிரச்சினை பற்றியும் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டது தவறு என்றோ அல்லது தன்னைக் கேட்காமல், தன்னோடு கலந்து பேசாமல், அவை பற்றிக் கூறுமல் வெளியிட்டு விட்டது சரி அல்ல என்று கருத்துப்பட ஏதாவது முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் வந்ததா என்பதை நான் அறிந்து கொள்ளக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இந்தச் சபை விதிமுறைகளுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பிய கேள்விகள் ஒத்துவருகின்றனவா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். திடீரென்று எழுந்து சபையில் இல்லாத ஒரு பிரச்னைபற்றி அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு விதிகள் அனுமதிக்கின்றனவா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் தெளிவாக ஒன்றும் கிடையாது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முன்கூட்டியே அவர்களிடம் சொல்லி அவர்களிடம் விளக்கம் கேட்டிருந்தால் விளக்கம் கொடுப்பது நலமாக இருக்கும். பேசியதற்குப் பிறகு ஏதாவது கேட்பதாக இருந்தால் பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்கலாம். ஆனால் அவர்கள் இப்போது இதைப் புதிதாக எழுப்புகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவராக இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே இந்த மன்றத்தில் பல காரியங்களுக்கான விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சி சார்பில், அவைத் தலைவர் அவர்கள் அங்கு வீற்றிருந்த நேரத்தில் அந்தக் கட்சி சார்பில் கேட்கப்பட்டு அதற்குப் பதில் அளிக்கப்பட்டது மரபாக இருந்திருக்கிறது. அந்த மரபு தொடரும் என்ற எண்ணத்தில்தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாராளுமன்ற நடவடிக்கைகளில்தான் 'ஸீரோ ஹவர்' என்றிருக்கிறது. ஆனால் நம்முடைய சட்டமன்றத்தில் அத்தகைய மரபு ஒன்றும் இதுவரையில் இருந்ததில்லை.

திரு. மு. கருணாநிதி : நடந்ததையெல்லாம் அறவே மறந்துவிடக்கூடாது. இந்த அவையில் அந்த மரபு இருந்து பலநேரங்களில் இதுபோன்ற பிரச்னைகள் எழுப்பப்பட்டு அன்றிருந்த முதல் அமைச்சர் அவர்களாலோ அல்லது பொறுப்பான அமைச்சர்களாலோ அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நடந்தவைகளை எல்லாம் நடப்பவைகளாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பதினால்தான் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன்.

திரு. க. சுப்பு : இது ஒரு முக்கியமான பிரச்சனை. பாராளுமன்றத்தில்கூட திரு. பாலாபழனூர், மோகனரங்கம் போன்றவர்கள் இதைக் கிளப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றி சபாநாயகர் அவர்கள் கூட ஒரு ஸ்டேட்மெண்ட் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இதுபற்றி அட்ஜெர்ன்மென்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆகுமோ தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் இல்லையே... ஏற்கனவே அட்ஜெர்ன்மென்ட் எடுத்துக் மோஷன் கொடுத்திருந் தால் அது உரிய நேரத்தில் கொள்ளப்படும்.

திரு. துரை முருகன் : இதில் விதி முறை இருக்கிறதா இல்லையா என்பது வேறு பிரச்சனை. பொதுவாக தமிழ்நாட்டில் எல்லா மட்டத்திலும் இது பற்றி பேசிக்கொள்கிறார்கள். பிரதமரிடமிருந்து இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறதா இல்லையா என்று சொல்லலாம் அல்லவா? வந்திருக்கிறது அல்லது இல்லை என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடம் ஏதாவது தகவல் இருந்திருந்தால் சொல்லியிருப்பார் அல்லது வந்திருந்தாலும் சொல்லாமல் இருப்பார், அது அவருடைய உரிமை. ஏன் பதில் சொல்லவில்லை என்று கேட்கக்கூடிய உரிமை யாருக்கும் இல்லை.

திரு: துரை முருகன் : அப்படியென்றால் கடிதமே வரவில்லை என்று ஸ்பீக்கர் சொல்லுகிறாரா ?

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1977-ம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 2/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மூன்று மசோதாக்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி எடுத்துக் கொள்வதற்கில்லை என்று நினைக்கிறேன். தனித்தனியாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போது திரு. சுப்பு அவர்கள் பேசலாம்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் திருத்த மசோதாவை எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே நகராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பதின் காரணமாக அவைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலைமையில் இயங்கிக்கொண்டு வருகின்றன. ரோடு வசதி கிடையாது, குடி தண்ணீர் வசதி கிடையாது, தெரு விளக்குகள் சரிவர எரிவதில்லை. இப்படிப் பட்ட பல்வேறு குறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதைப் போக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட நகராட்சி மன்றங்கள் இருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே இதுபோன்ற மசோதா இங்கு வந்தபோது, அப்போது அமைச்சராக இருந்த திரு. ராமச்சந்திரன் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். அப்போது கூட, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மன்றங்களில் இருக்க வேண்டும் என்று திரு. அரங்கநாயகம் போன்றவர்கள் பேசிய கருத்துக்கள் எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கின்றன.

*1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாநகராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத நேரத்தில் அந்தந்தப் பகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை கமிட்டியை அமைக்கவேண்டும் என்பதை, முன்பு அரங்கநாயகம், பொன்னப்ப நாடார், ஜேம்ஸ் போன்றவர்கள் எல்லாம் இந்தக் கருத்தை—அதாவது ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக சம்பளம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை—அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டி அமைக்கலாம் என்று சொல்லப்பட்டது. இப்போது அப்படிப் பட்ட கமிட்டி இல்லாத காரணத்தால் மாநகராட்சி மன்றமானாலும் சரி, நகராட்சி மன்றங்களானாலும் சரி, அதிகாரிகளே இருந்துகொண்டு தாங்கள் வைத்ததே வரிசை என்று இயங்கிக் கொண்டிருக்கிறது.

முக்கியமாக ஒரு பிரச்னையைப்பற்றி முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். ஒரே ஒரு நாள் சந்தித்தேன், அதற்குப் பின்னால் அவரைப் பார்க்கவும் முடியவில்லை. மற்ற நேரத்தில் எல்லாம் அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளை பார்ப்பதற்கு நேரம் இருப்பதில்லை. ஒரு நாள்தான் பார்த்தேன். அப்போது, கோயம்பேடு கழிவு நீர் திட்டத்தைப்பற்றி சொன்னேன். கழிவு நீர் திட்டத்திற்குப் பதிலாக, புல் வளர்கிற திட்டமாகவும், கொசு வளர்கிற திட்டமாகவும் தான் இருந்து வருகிறது. குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதுதான் எங்கள் முதல் திட்டம் என்று சொல்லுகிறார்கள். இங்கே நிலைமை என்னவென்றால், குடிதண்ணீர் திட்டம் புதிதாக வேண்டாம், இப்போது இருக்கின்ற குடிதண்ணீரோடு இந்த கழிவு நீர் கலந்து விட்டது என்ற புகார் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களோ, குடிதண்ணீர் வசதி இல்லையே என்று கண்ணீர் வடிப்பதாக அறிவிப்பு வருகிறது.

இங்கே நிலைமை என்னவென்றால், இருக்கின்ற குடிதண்ணீரோடு கழிவுத் தண்ணீர் சேராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதில் முக்கியமாக அக்கறை காட்ட வேண்டும். இதுபற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன். இது திடீரென்று வந்தது அல்ல என்று பதில் சொல்லக் கூடும், இது திடீரென்று வந்ததில்லை என்று சொன்னாலும் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தால் மிகவும் வருந்தத் தக்கது.

குடி தண்ணீர் என்று வரும்போது, அதில் சாக்கடைத் தண்ணீர் சேர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்குரிய வகையில் சிவிக் அமெனிட்டீஸ்ஸை பார்க்கவேண்டும். இது பற்றிய கோரிக்கையை நான் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்த உடன் இதைப்பற்றிஉடனடியாக (இம்மீடியட்டாக) கவனிக்க வேண்டும் என்று பிரைவேட்செக்ரட்டரியிடம் கொடுத்தார்.

இதுபற்றி விசாரிப்பதற்கு யாராவது வந்தார்களா என்று விசாரித்தால், அங்கு கொசுதான் வந்திருக்கிறதே தவிர வேறு யாரும் வரவில்லை.

எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அப்பகுதி அசுத்தமாகவும், மிகவும் மோசமாகவும் இருக்கின்றது, யாரிடம் சென்று முறையிடுவது என்று அப்பகுதியிலுள்ள 12 காலனி மக்கள் என்னிடம் கேட்கின்றார்கள். அந்த 12 காலனிகளில் ஐயப்பா காலனியும் ஒன்று. அவர்களும் ஐயப்பனை கும்பிடுகிறார்கள், இவர்களு ஐயப்பனைம் கும்பிடுகிறவர்கள். இது சம்பந்தமாக முதலமைச்சரைப் பார்க்க வேண்டுமென்று நேரம் கேட்டால் இதற்கெல்லாம் நேரம் இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல் அமைச்சர் என்ற பதவியில் இருக்கும் என்னைப்பற்றி அவதூறு குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகிறார்கள். அவர்மீது அரசு கேள்வி கேட்டு, அதிகாரபூர்வமாக ஒரு பதில் பெறக் கூடிய அவசிய நிலைமை இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது. அவர் அணுகும் முறை சரியாக இல்லை என்பதையும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லாமல், தானே தவறு இழைத்து விட்டு, பலாத்கார முறையில் காரியங்களில் ஈடுபட்டுவிட்டு, வேறு மாதிரியாகப் பேசுவது சரியல்ல என்பதை நான் அவர்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல், கோயம்பேடு பகுதியில் கழிவு நீர், குடிநீரைப் பாதிக்காத வகையிலும்; கொசுத் தொல்லையைப் போக்குவதற்கு மருந்து தெளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்வதற்கு மாநகராட்சி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது; அவர்களும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். யார் மனதையும் புண்படுத்தும்படி பேச வேண்டாம். ''ஐயப்பா காலனி, ஐயப்பு சாமி, இவர்களும் ஐயப்பனைக் கும்பிடுகிறவர்கள்'' என்றெல்லாம் பேச வேண்டாம். பிரச்சனைக்கு வாருங்கள். இப்படிப் பேச வேண்டிய அவசியமே இல்லை. தயவு செய்து பேசுகிறபோது முறையாகப் பேசுங்கள். உங்களைப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. தனி மனிதருடைய மனம் புண்படும்படி பேசாதீர்கள். நீங்கள் பேசியது தேவையில்லாத, அவசியமில்லாத வார்த்தைகள்.

திரு. க. சுப்பு : ஐயப்பனை அந்தக் காலனியிலுள்ள மக்கள் கும்பிடுகிறார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன். இதை சபை நடவடிக்கைக் குறிப்பிலே பார்க்கலாம். முதல் அமைச்சர் ஐயப்பனைக் கும்பிடுகிறவர் என்று நான் குறிப்பிடவில்லை.

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசிவிட்டு தெரியாது என்று சொன்னால் என்ன செய்வது? இந்த அவையிலே இரண்டு நிமிஷங்களுக்கு முன்பு பேசிவிட்டு, இல்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? சபைக் குறிப்பிலே பாருங்கள். ஐயப்பனை இவர்களும் கும்பிடுகிறார்கள் என்று பேசிவிட்டு, இல்லை என்று சொன்னால் என்ன செய்வது? சரி, மேலே பேசுங்கள்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இதுவரையிலே எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவருடைய உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த உத்தரவு இது வரை அமுலாகவில்லை என்று உறுப்பினர் சுப்பு அவர்கள் சொல்கிறார்கள். எதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் நல்லது. மீண்டும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மீண்டும் நன்றி. இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நேற்று இரவுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் காலை சட்ட மன்றக் கூட்டத்திற்குப் புறப்பட்டு வந்த பின் எப்படியோ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப மனு என்னிடம் கொடுக்கப்பட்டது, அப்படி கொடுக்கப்பட்ட மனுவை நான் என் செயலாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன், அதன்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றை இங்கே அவருக்கு கவனப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இது கேள்வி நேரமாக இருந்தால், வேறு பதில் இருந்திருக்கும். கவன ஈர்ப்பு பிரச்சினையாக இருந்தால், அதற்கு வேறு பதில் வந்திருக்கும். ஒருவருக்கு என்னென்ன சந்தேகங்கள் இருக்கின்றனவோ, அவைகளைக் கேட்டுத் தெளிவு பெற வேண்டுமே தவிர, கேட்காத கேள்விக்கு அவசரத் தீர்மானமோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொண்டு வராத நிலையில், குறிப்பாக என்னை முன்னிலைப்படுத்திப் பேசுவதால், குறிப்பாக முதல் அமைச்சரை இதிலே ஈடுபடுத்திப் பேசுவதால் நான் சில கருத்துக்களைத் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. அதாவது அவசியமில்லாத, சம்பந்தமில்லாத, தேவையில்லாத, அப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஜூலை 23] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அவர் நடந்துகொண்ட முறை சரியில்லை. அவர்கள் வன்முறையில் 2 நாட்களுக்கு முன் நடந்து கொண்டதை இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று, நான்கு பேர்களோடு என் அறைக்குள் நுழைய முயற்சித்து, அங்குள்ள என்னுடைய செக்யூரிடியை கீழே தள்ளிவிட்டு, என்னுடைய அறைக்குள் நுழைய முயற்சித்தார்கள். இவ்வளவையும் அவர்கள் செய்து விட்டு, இங்கே வந்து சத்தம் போடுகிறார்கள். இந்த வன்முறை நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவதை நாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள், அவர்களைச் சந்திக்க நான் மறுக்கிறேன் என்று, அவர் சொல்லுவது உண்மைக்கு முரண்பாடானது என்பதும், எந்தவித முன்னறிவிப்பும் இல்லாதிருந்தும் நான் அதற்கு உதவி செய்யும் வகையில் நான் அவர்கள் கட்சிக் கூட்டங்களை நடத்த அனுமதிக்க ஏற்பாடு செய்து எங்கள் கட்சிக் கூட்டங்களை ஒத்தி வைத்தேன் என்பதையும் நான் இங்கே சொல்லுவதோடு, மேலும் யாரையும் சந்திக்க நான் பயப்படுபவன் அல்ல, அதற்கு அவசியமும் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆரவாரம்)

திரு. க. சுப்பு : முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல் எங்கள் கூட்டத்திற்கு அனுமதி தந்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே உங்களிடத்திலே மனுக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அந்த மனுவின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மறுபடியும் பதில் சொல்ல வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்துகிறார்கள். வந்திருக்கும் பதிலைப் படிக்காமல் செய்தியாகச் சொல்லுகிறேன். இதை எழுதிக் கொள்ளவேண்டுமென்று அவைத் தலைவர் அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட புகார் உண்மைக்கு மாறானது என்று வந்திருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்தில் மேலும் விவரங்களைப் பெற்றுத் தரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திரு. க. சுப்பு : நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. க. சுப்பு: முதலமைச்சர் அவர்கள் இரண்டாவதாகச் சொன்னது அவை மீறல் பிரச்சினையாகும். முதலமைச்சர் அறைக்கு வெளியே தாக்குதல் நடந்தது என்றால் அவரால் பார்க்க முடியுமா? அவரிடம் உண்மைக்கு மாறான தகவல் கொடுக்கப் பட்டு அதை வைத்துக் கொண்டு முதலமைச்சர் அவர்கள் பேசு கிறார்கள்.......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் பொறுப்பில் இருக்கும் உறுப்பினர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதைப் பற்றி விசாரிக்காமலோ, அதிகாரி களை விட்டுத் தெரிந்து கொள்ளாமலோ நான் இதை இங்கே சொல்லமாட்டேன் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

திரு. க. சுப்பு: தவறான தகவலைத் தருகிறார்கள். நான் உரிமை மீறல் பிரச்சினையாக அதைப் பின்னர் எழுப்புகிறேன்.

உள்ளாட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் ஆகியவை மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் சரிவர இயங்க முடியாத நிலைமையில் இருக்கின்றன என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். மாநகராட்சிக்குத் தேர்தல் மஸ்டர் ரோல் வழக்கு முடிந்த பிறகு தான் என்று அறிவிப்பே கொடுத்து விட்டார்கள். ரொம்ப வேதனையானது. எவ்வளவு நாட்கள் ஆகும்? பல நீதிமன்றங் கள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றம் வரை சென்று வரவேண்டு மென்றால் பல ஆண்டுக் கணக்கு ஆகும். அதை ஒரு காரணமாக பிற்காலத்திலே சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்போது நாங்கள் தேர்தலை மாநகராட்சிக்கு நடத்தவில்லை, காலதாமதப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அந்தத் தவறை நீங்களும் செய்யாதீர்கள். 'நாங்கள் அப்போது செய் தோம்' என்ற அப்படிப்பட்ட வாதத்திற்கு நீங்கள் போகமாட் டீர்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே 15 நிமிடத் திற்கு மேல் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. சுப்பு: மசோதாவின்பேரில் பேசும்போதும் குறிப் பிட்ட நேரம் என்று இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேட்டுக் கொண் டிருக்க வேண்டாம். நேரத்தை வீணாக்க வேண்டாம். தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள்.

1977 ஜுலை 23]

திரு. க. சுப்பு : அவையின் மரபு, மசோதாவில் ஒரு உறுப்பினர் பேசும்போது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் சொல்லுகிறார்; சீக்கிரம் முடியுங்கள். விளக்கம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. க. சுப்பு : விளக்கம் வேறு யார் கொடுப்பார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் கேட்க வேண்டியதில்லை. சீக்கிரம் முடியுங்கள். மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். சொல்லச் சொல்ல நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் தங்களுக்குச் சாமர்த்தியம் இருப்பதாக அர்த்தமா ? தயவுசெய்து சொல்லுகிற தீர்ப்பைக் கேளுங்கள். சீக்கிரம் முடியுங்கள். மீதி விளக்கம் தேவையில்லை.

திரு. க. சுப்பு : சரி. இந்த மாதிரி இக்கட்டான நிலைமையிலே இந்த தேர்தல்களை தள்ளி வைக்கக்கூடிய சட்டத்தைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. இந்த இக்கட்டான நிலைமை இங்கே இருந்தாலும் பரவாயில்லை. மக்களிடம் இருக்கக்கூடிய இக்கட்டான நிலைமையைப்பற்றிப் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆலோசனைக் கமிட்டி போடவேண்டுமென்று எல்லாம் சொன்னவர்கள், இன்றைக்கு ஆளுங்கட்சியாக வந்தபிறகு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுமல் தேர்தல் பட்டியல் சரியாக இல்லையென்று சொல்வார்களானல் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன அதனுல் தள்ளிப் போடுகிறோம் என்று சொல்வார்களானுல் இப்படியே சொல்லிக் கொண்டு ஆறு ஆறு மாதம் தள்ளிக் கொண்டு போனுல் மக்களாட்சித் தத்துவத்தைப் போராடிக் கொண்டுவருவோம் என்று நீங்கள் மக்களிடத்திலே சொன்னதெல்லாம் வெறும் வாய்ப்பறை என்பது நிரூபிக்கப்பட்டு விடும் என்பதை மட்டும் சொல்லி இப்படி 6 மாதம் நீடிப்பது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த திருத்தத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த நகராட்சித் தேர்தல்கள் கடந்த 7, 8 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருக்கின்றது. இப்படிப்பட்ட புண்ணிய காரியத்தைச் செய்தவர்கள் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நன்ருக மேயத் தெரிந்தவர்களுக்கு இடம் கொடுத்தார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். அப்படியெல்லாம் அவர்கள்

செய்ததன் காரணமாகத்தான் தண்ணீரும், மின்சாரமும், ரோடும் கிராமப் புறங்களிலேயும், நகரப்புறங்களிலேயும் பிரச்னைகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும்.

அது மட்டுமல்ல, இந்த மசோதாவிலே முடிந்தால் 3 மாதங்களிலே முயற்சிகள் மேற் கொள்வோம் என்ற முடிவோடு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அந்த முறையிலே துரிதமாகத் தேர்தல்கள் நடைபெறவும் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நகரசபைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு மக்களுடைய குறைகளைக் கேட்டறிவதற்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அந்த குழுக்களில் எம்.எல்.ஏக்கள், எம்.எல்.சிக்கள், எம்.பிக்கள் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், முக்கியப் பிரமுகர்கள் ஆகியவர்களைக்கொண்டு குழுக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு திண்டுக்கல் நகரசபையைப்பொறுத்த வரையில் சர்க்கார் கொடுக்க வேண்டிய மானியத் தொகை 7 இலட்சம் ரூபாய் இன்னும் போய்ச் சேரவில்லை இப்படிப்பட்ட காரணங்களால்தான் அங்கே நல்ல காரியங்களைச் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில பகுதிகளிலே தண்ணீருக்குப் பல கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், 2 கோடி ரூபாய் வரையில் திண்டுக்கலிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது. அங்கே காமராஜர் நீர்த் தேக்கம் என்று இருக்கிறது, அந்த நீர்த்தேக்கத்திற்கு வருகிற நீர்க்கால்களை தனியார்கள் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தேர்தலுக்குக் காத்திருக்காமல் உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்று நான் அமர்கிறேன். வணக்கம்.

*திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தச் சட்டத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக நகராட்சி மன்றத் தேர்தல்கள் முன்பே நடந்திருக்க வேண்டும். தி.மு.க. அரசு இருந்த நேரத்திலே இது தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தள்ளி வைத்தவர்கள்தான்.......... (குறுக்கீடு)

1977 ஜூலை 23]

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதியைக் கேட்டுவிட்டு எழுந்திருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் பேசும் பொழுது குறுக்கிட்டு அவைத்தலைவரின் அனுமதி இல்லாமல் எழுந்து பேசியதிலிருந்து முடிவு வரையில் பேசியதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்திரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பில்லில் பேசியதைக்கூடவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே யாரும் பேசக்கூடாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சபைக் குறிப்பிலே யிருந்து நீக்கும்படி சொல்லியிருக்கின்றீர்கள். அது தலைவர் சொன்னதும் உட்படவா? ஏனென்றால் தலைவரவர்கள் சொல்லும்பொழுது * * என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம். ஆரம்பத்திலே யிருந்து இதுவரையில் நடந்ததை நீக்கச் சொன்னேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தேர்தல் முன்பே நடத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும் அரசாங்கம் ஆறு மாதங்களுக்கு இதை ஒத்தி வைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆறு மாதங்களிலேயாவது இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்ற உறுதி மொழியை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, கார்ப்பரேஷன் தேர்தலைக் கூடத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்குக் காலதாமதம் ஆகிறது என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால், வழக்கு நடக்கிறது, அதற்காக ஒத்தி வைக்கலாம் என்ற காரணம் உவப்பானதாக இல்லை.

மன்னார்குடி நகராட்சி மன்றத்தை எடுத்துக்கொண்டால் பெண்களுக்கு என்று ஒரேவொரு இடம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இன்னும் அதிகமான இடங்களை ஒதுக்குவதற்குச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அவை இல்லாத காரணத்தினால் மன்னார்குடி நகராட்சி எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் வாங்கி வீடுகளுக்குத் தண்ணீர் கொடுத்துள்ளது. அந்த இணைப்பிலிருந்து

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-19—10-23இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

பொதுவாக இணைப்பு கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனில் அப்ஜெக்ட் செய்கிறார்கள். அதனால் கார்ப்பரேஷனுக்கு வரும் வருமானம் குறையும் என்று சொல்லியுள்ளார்கள். ஆகவே, கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, இந்த ஆறு மாத காலத்திற்கு எம்.எல்.ஏ., எம்.பி., இன்னும் சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைக்க முன் வர வேண்டும்.

அதைப்போல குறிப்பாக, இந்த நகராட்சி மன்றத் தேர்தல்களை முன்னாலே இருந்தவர்கள் ஒத்திவைத்தது உண்மைதான். அந்த உண்மையைச் சொன்னவுடன் அவர்களுக்கு உணர்வு பிறக்கிறது. எதையும் தாங்கிக் கொள்வதற்கான தன்னடக்கமும் சக்தியும் வேண்டும். பிறர் கூறுவதையும் கேட்பதற்கு பொறுமையும் தன்னடக்கமும் வேண்டும். அது இருந்தால்தான் நாம் சட்ட சபையில் பொறுப்பான அங்கத்தினர்களாக செயல்பட முடியும் நிரூபிக்கமுடியும். அதற்குத்தான் அங்கத்தினர்களாக மக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஆகவே, நம்முடைய யோசனைகள் ஆக்கபூர்வமான யோசனைகளாக இருக்க வேண்டுமென்ற கருத்திலே இந்தத் தேர்தல்கள் 6 மாத காலம் தள்ளி வைக்கப்பட்டிருந்தாலும் இடையிலே நடத்த முயற்சிக்க வேண்டும், நகராட்சிகளிலே மக்கள் கமிட்டிகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும், பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், இந்தத் திருத்தத்தின் மீது ஆலோசனையாகக் கூறி, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திருத்தத்தின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகின்றேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் 1973 ஆம் ஆண்டு மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னால், சிறப்பு அதிகாரி மாமன்றத்தினுடைய பொறுப்புகளை ஏற்று நடத்துகின்ற நிலை ஏற்பட்டதற்குப் பின்னால், மாமன்ற உறுப்பினர்கள் வட்டங்களுக்குச் சென்று வட்டங்களிலே இருக்கிற குறைபாடுகளை அறிந்து மன்றத்திலே பேசித் தீர்வு காணுகின்ற அந்தச் சூழ்நிலை அறவே அற்றுப் போன நிலை இருக்கிறது. ஆணையர் அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதைப் போல், மாமன்றத்தினுடைய பொறுப்புகளை ஏற்றிருக்கிற சிறப்பு அதிகாரி, அதிகாரி என்ற அந்தத் தோரணையில்தான் அவராலே பணியாற்ற முடிகிறதே தவிர. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைப் போல், பொறுப்புகளை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த அதி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காரிகளால் பணியாற்ற முடியவில்லை. அதனாலேதான் சென்னை மாநகரத்தை இரவிலே சுற்றிப் பார்க்கிற நேரத்தில், மாமன்ற உறுப்பினர்கள் செய்கின்ற பணியை. . . .

THE HON. THIRU S. RAMACHANDRAN: I would like to know from the Chair whether we are discussing the Madras City Corporation (Amendment) Bill or the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill 1977.

திரு. க. சுப்பு: அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் சொன்னார்கள். என்ன சொல்கிறார்கள்? . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்ல வேண்டாம், பேசுகின்ற உறுப்பினர் சொல்லட்டும். உறுப்பினருக்கு நீங்கள் வழிகாட்டுகிறீர்களா? (திரு. சுப்பு நின்று கொண்டிருந்தார்) அந்த உறுப்பினருக்கு நீங்கள் தலைவரா? தயவு செய்து உட்காருங்கள். எல்லாவற்றிற்கும் சுப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லட்டும். பிறகு சுப்புவை கேட்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இது சென்னை மாநகராட்சியினுடைய ''பில்'' அல்ல என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அது எனக்கும் நன்றாகத் தெரியும். தெரிந்தேதான் உள்ளாட்சித் துறை என்று வருகின்ற தலைப்பின்கீழ் சிறப்பு அதிகாரி என்ற பிரிவின்கீழ், இன்றைக்குச் சென்னை மாநகராட்சியும் சிறப்பு அதிகாரியின்கீழ் நடந்து வருகிறது என்ற கருத்தினை ஒட்டித்தான் இதைத் தெரிவிக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு மிக மோசமான நிலைமையிலே சென்னை மாநகரம் இருக்கிறது. என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள், கழிவுநீர் குடிநீரோடு கலக்கின்றது என்று. கொடுங்கையூரில் கலக்கின்றது, சென்னை நகரத்திலே பல்வேறு பகுதிகளில், பல்வேறு வட்டங்களில் அந்த நிலைமை இருந்து வருகிறது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சியை பார்வையிட்டார்கள். நான் அன்றைக்கு இருந்தேன். அப்பொழுது சில கருத்துக்களை அவர்கள் தெரிந்திருக்கக் கூடும். கடந்த காலத்திலே நிர்வாகச் செலவையெல்லாம் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசாலே தெரிவிக்கப்பட்டு, பல்வேறு பிரச்னைகள் உருவாயின. இன்றைக்கு மாநகராட்சியில் தேவையற்ற அளவிலே அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு குறைபாடுகளைச் சரியான முறையிலே போக்கிக் கொள்ள முடியாத நிலையிருக்கிறது. இன்றைக்கு வட சென்னைக்கு ஒரு

உதவி ஆணையாளர் இருக்கிறார், தென் சென்னைக்கு ஒரு உதவி ஆணையாளர் இருக்கிறார். அதற்கு மேலே டெபுடி கமிஷனர் என்று துணை ஆணையாளரைப் போட்டிருக்கிறார்கள். இதனால் வேலைகள் நடைபெறுமா என்றால் நடைபெறாது. பேப்பர் அதிகமாகச் சுற்றிக் கொண்டே இருக்குமே தவிர, நேரடி உத்தரவு பெற முடியாத நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாக்கள், முனிசிபாலிடிகளைப் பற்றி உள்ள மசோதாக்களே தவிர, மாநகராட்சி மன்றத்தைப் பற்றியது அல்ல என்பதை மெத்தப் பணிவோடு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, அதற்காக செலவழித்த நேரத்தை, மசோதாவிற்குச் செலவழித்தால் பலன் உள்ளதாக இருக்கும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நகராட்சி மன்றங்களை மனதில் வைத்துப் பேசுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை என்று வந்து விட்ட காரணத்தினாலே, மாநகராட்சியும் ஒரு..........

திரு. அ. க. அரங்கநாதன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், உட்கார்ந்து கொண்டே பேசுவதும், சைகை மூலமாக கேலி செய்வதும் இந்த மன்றத்தைக் கிண்டல் செய்வது போல இருக்கிறது. நீங்கள் உட்கார் என்று சொல்லிய பிறகு உட்கார்ந்து பேசுகிறார், ஆகவே இந்த மன்றத்தில் அத்தகைய உரிமை மீறல் நடக்கிறது. அதைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாமன்றமும் கவனித்து கொண்டு இருக்கிறது. மக்களுக்கும் அவரவர்களுடைய நடவடிக்கை நன்றாகத் தெரிந்துதான் இருக்கிறது. ஆகவே நாம் அதைப்பற்றி கவலைப்படாமல் நம்முடைய பணியைத் தொடருவோம்.

திரு. மு. அரங்கநாதன் : அந்த உள்ளாட்சித் துறையில் என்னுடைய கருத்தை..........

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மக்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாம் அதைப் பற்றிக் கவலைப்பட தேவையில்லை. நாம் பணியைத் தொடருவோம் என்று கூறினீர்கள். சபாநாயகர் கட்சிக்கு அப்பாற்பட்டவர்.

1977, ஜூலை 23] [திரு. துரைமுருகன்]

அவர் ஒரு கட்சியோடு தன்னைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஆளும் கட்சியோடு தன்னைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவையின் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளை மக்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், நாமும் பார்த்துக் கொணடிருக்கிறோம் என்றுதான் சொன்னேன்.

திரு. துரை முருகன்: அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே உள்ள மற்ற உறுப்பினர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே நாமும், நம்முடைய பணிகளைத் தொடர்வோம் என்று திரு. அரங்கநாதன் அவர்களைப் பேச அழைத்தீர்கள். இதிலே எந்த குற்றச்சாட்டுக்கும் இடம் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

*திரு. துரை முருகன்: உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது திரு. சுப்பு உட்கார்ந்து கொண்டே பேசுகிறார். இது சரியா என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். நான் தங்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்டேன். நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாமென்று சொல்லுகிறீர்கள். ஆகவே நீங்கள் ஆளும் கட்சியோடு சேர்ந்து கொண்டீர்களா என்று கேட்டேன். தாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளுகிறேன். தலைவர் சொன்னதை மறுக்கிறவன் அல்ல நான். (ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கீடு). தலைவர் அவர்களே, தங்கள் மூலம் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லுவேன். நான் எழுந்து பேசும்போது இப்படி மேஜையைத் தட்டுவதாலோ அல்லது ஒரே நேரத்தில் பலர் கூச்சல் போடுவதாலோ என்னை திசை திருப்பி எனக்குக் கோபம் உண்டாக்கலாம் என்று நினைப்பார்களேயானால் நிச்சயம் அவர்கள் தோல்வியைத் தான் அடைவார்கள்.

நீங்கள் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும் நான் நின்று கொண்டே இருப்பேன், பேசிக்கொண்டே நிற்பேன். எனக்கு இந்த அவையில் முன்னாலே நிறைய அனுபவம் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவசியம் இல்லாத பிரச்சினையைக் கிளப்பினார்கள். நாம் என்று சொன்னபோது அத்தனைபேரையும் மனதில்

வைத்துக் கொண்டுதான் சொன்னேன். நாம் என்றால் ஆளும் கட்சி மட்டும் என்று கருதுவது மிக் மிக வேதனையை அளிக்கிறது. நாம் என்கிறபோது நம்முடைய அவையைக் குறிக்கும். தங்களுக்கு உடனே ஆளுங்கட்சியை சொல்லுகிறார் என்று இருக்கிறது. தங்களுக்குத் தெரியும். தெரியாது என்று சொல்ல மாட்டேன். நேரத்தை வீணாக்க வேண்டாம். வேறு ஒன்றும் இல்லை.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரமும் இந்தச் சட்டத்திற்குள் அடங்குகின்ற ஒன்று என்கிற நிலையில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இங்கே இருக்கக்கூடிய குறைபாடுகளை, நான் சென்னை மாநகராட்சி மன்றத்தில் இருந்தவன் என்ற காரணத்தினால் எடுத்துச் சொல்வது, அவற்றைக் களைவதற்கு ஏதுவாக இருக்கும் என்றே சோல்ல விழைந்தேன்.

எனினும் நம்முடைய அமைச்சர் அவர்கள் இது மாநகராட்சிப் பிரச்சினை அல்ல என்று சொன்னார்கள். அதே நேரத்தில் அருமை நண்பர் திரு அம்பிகாபதி பேசும்போது மஸ்டர்ரோல் வழக்குகளைச் சொன்னார்கள், அதுவும் சென்னை மாநகராட்சியை சேர்ந்த ஒன்று. எனினும் உறுப்பினர் அதைச் சொல்வது சரியல்ல என்று சொல்லவில்லை.

சென்னை மாநகராட்சியில் தேவைக்குமேல் அதிகமான அதிகாரிகளை கடந்த நான்காண்டுகளில் நியமித்திருக்கிறார்கள். அதனால் நிர்வாகம் மிகவும் கேவலமான அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. நான் பெரியவனா, நீ பெரியவனா என்கிற அளவில் அதிகாரிகளிடத்திலே தகராறுகள் ஏற்படுகின்ற காரணத்தினால் கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் சரியான முறையில் செயல்படாமல் நிர்வாகம் பாதிக்கப்பட்டிருக்கிற நிலை உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

எனவே ஆளுநர் உரையில் பேசும்போதே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் தேர்தலுக்கும் மஸ்டர்ரோல் வழக்கிற்கும் சம்பந்தப்படுத்தாது, தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு வழி செய்ய வெண்டுமேன்று சொன்னேன்.

அப்படி இல்லையென்றால் கடந்த காலத்தில் இன்றைக்கு ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். இந்த தேர்தல் வருகிற வரையில் ஒரு ஆலோசனைக்குழு அட்வைசரி கமிட்டி அமைக்கலாம் என்றிருக்கிறார்கள். கட்சிச் சார்பற்ற வகையில் அமைக்கலாம் என்று சொன்னார்கள். அந்த வகையிலாவது உடனடியாக சென்னை மாநகராட்சிக்கு ஒரு அட்வைசரி கமிட்டியையாவது போட்டு-சட்ட மன்ற உறுப்பினர்கள்,

ஓய்வு பெற்ற அதிகாரிகள் - இவர்களைக் கொண்ட குழுவைப் போட்டு நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு டெபுடி கமிஷனர் என்ற ஒரு பதவி ஏற்படுத்தப்பட்டு, ஒருவரை நியமித்திருக்கிறார்கள். இதுவும் தேவையற்ற பதவி என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகரசபைகளுக்கு போடப்பட்டிருக்கிற தனி அதிகாரிகளின் ஆயுள் காலத்தை 6 மாதங்கள் நீட்டிப்பதற்கு வகை செய்யும் திருத்த மசோதாவைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

நான் சேலம் நகர மன்ற உறுப்பினராக கடந்த 17 ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளேன். சேலம் நகர மன்றம் 1976-ஆம் ஆண்டு ஜுன் 30-ம் தேதி கலைக்கப்பட்டது. கடந்த ஓராண்டு காலத்தில் நகராட்சி தனி அதிகாரிகள் பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு பல நல்ல காரியங்களில் எந்தவித கவனமும் செலுத்தாமல், அரசியல்வாதிகளைப் போல பொது நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளவே துடிக்கிறார்கள். அரசியல்வாதிகளைப்போல பொதுமேடைகளில் பேசிக்கொண்டு காலத்தைப் போக்குகிறார்களே தவிர, நகரங்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், ரோடுகள், விளக்குகள் போன்ற அத்தியாவசியமான காரியங்களைச் செய்து கொடுப்பதில் ஈடுபடுகிறார்களா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

சேலம் நகரம் 3½ லட்சம் மக்களைக் கொண்டது. ஒரு மாநகராட்சியாக ஆகக்கூடிய வாய்ப்பு வசதி பெற்றது. என்றாலும், அங்கே மூவாயிரம் தெரு விளக்குகள் பல மாதங்களாக எரிவதில்லை. ஒரு பெரிய நகராட்சியில் மூவாயிரம் விளக்குகள் எரியவில்லை என்றால் அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. பொது மக்களுடைய பிரதிநிதிகள் அங்கு இல்லாத காரணத்தினால் அதிகாரிகள் செய்கிற தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கு சந்தர்ப்பம் இருப்பதில்லை.

மேட்டூர் குடிநீர் திட்டம் அங்கே சரியாக செயல்படுத்தப் படவில்லை. வீடுகளுக்கு எல்லாம் குழாய்கள் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வீடுகளில் தண்ணீர் வருவதில்லை என்று புகார் கொடுத்தாலும் அவை கவனிக்கப்படுவதில்லை.

அதே நேரத்தில் சேலம் நகரத்தில் மட்டும் சொத்து வரிகள் வாடகைக்கு இருந்தாலும், இல்லாவிட்டாலும், வாடகைக்கு விடப்பட்ட கட்டிடங்களுக்கு விதிக்கப்படுவது போலவே, மற்ற

எந்த இடங்களிலும் இல்லாத அளவுக்கு அதிகாரிகளால் உயர்த்தப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு முழுவதும் உயர்த்தாமல் இருக்கிறபோது இங்கே மட்டும் இந்த அதிகாரிகள் மிக அதிக அளவில் உயர்த்தி இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

பொது மக்களின் பிரதிநிதிகள் இல்லாததால் அதிகாரிகளை எதுவும் செய்ய முடியவில்லை. ஆகவே அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் போது பொதுமக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகராட்சியையொட்டி சூரமங்கலம் நகராட்சி என்று புதியதாக பேரூராட்சி ஒன்று நகராட்சியாக மாற்றப் பட்டிருக்கிறது. சேலம் நகராட்சியோடு சூரமங்கலம் நகராட்சியையும் இணைத்து சேலம் மாநகராட்சியாக ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும்.

சேலம் நகரில் ஏறத்தாழ மூன்று மைல் சுற்றளவில் திருமணிமுத்தாறு என்ற நதி ஓடுகிறது. அதன் மூலம் மக்களுக்கு கொசுத் தொல்லை ஏற்பட்டு மக்களின் சுகாதாரம் பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, சேலம் திருமணிமுத்தாறை சீர்படுத்தி கொசுத் தொல்லையிலிருந்து மக்களைக் காப்பாற்றி மக்களுக்கு சுகாதார வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் அதற்காக ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த ஆறு மாத கால நீட்டிப்பிற்கு தேவை இல்லை என்று நான் சொன்னாலும் எதிர் கட்சியில் (ஆளும்கட்சி) அதிகமான எண்ணிக்கை இருப்பதால் இது வெற்றி பெறும் என்றாலும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இது என்னுடைய கடமை. அதிகாரிகளை வைத்துக் கொண்டு இன்னும் ஆறு மாத காலத்திற்கு நடத்திக் கொள்ளலாம் என்ற நிலைமையில், இன்றைய தினம் மக்களுக்கு இருக்கிற குறைபாடுகளைப் பற்றி நான் எடுத்துச் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அதைக் குறித்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

1977, ஜூலை 23] [திரு. தீ. சு. நல்லதம்பி]

இந்த கால நீட்டிப்புக் கொடுப்பது அல்லது அதிகாரிகளைப் போட்டு நிர்வாகத்தை நடத்துவது என்பதில் வரிப்பணம் வீண் விரயம் ஆகிறது. அன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் வீண் விரயம் தடுக்கப்பட வேண்டும் என்றும், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வீண் விரயத்தைத் தடுப்பதற்கு வீர சபதம் ஏற்று இங்கே வந்து இருப்பதாக கோடிட்டுக் காட்டினார்கள். பொதுவாக, உள்ளாட்சித் துறையில் அதிகாரிகளைப் போடும்போது அதிகாரிகளுக்குள்ளே 'க்ரூப்பிஸம்' வந்து விடுகிறது. இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டால் அதில் நான் பெரியவன் நீ பெரியவன் என்று நினைத்து பைல்கள் போகும்போது உள்ளபடியே பொது மக்களின் பணம் வீண் விரயமாக்கப்படுகிறது. இதை உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண் வேண்டும்.

பொதுவாக உள்ளாட்சித் துறை பற்றிப் பேசினால் சென்னை நகரசபை பற்றிப் பேசவேண்டாம் என்று அமைச்சர்கள் விரும்புகிறார்கள். இன்றைய தினம் அதிகாரிகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளும் நிலைமையைப் பார்த்தால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி திட்டங்களைப் போட்டு என்ஜினியர்களை வைத்துக்கொண்டு திட்டம் போட்டு அதை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பினால் அந்த மேல் அதிகாரி அந்த பைலை திருப்பி விடுகிறார். இப்படி நிறையக் குறைபாடுகள் இருக்கின்றன.

இன்றைய தினம் ஒன்பது கோடி ரூபாய் வருமானம் உள்ள சில நகராட்சிகளில் வருமானத்தைப் பதிவு செய்கிற பதிவேடுகள் இல்லாமல் நிர்வாகம் நடைபெறுகிறது. ஒரு அதிகாரி இருந்த இடத்தில் ஒன்பது அதிகாரிகள் இருக்கக் கூடிய நிலை மட்டுமல்ல. அவர்களோடு மற்ற மற்ற அதிகாரிகளை அவர்கள் எங்கிருந்து வருகிறார்களோ அங்கிருந்து கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மதுரையில் இருந்து சென்னை கார்ப்பரேஷனுக்கு ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் வருகிறார் என்றால் அங்கிருந்து தனக்கு வேண்டிய ஆட்களை எல்லாம் இங்கு அழைத்து வந்துவிடுகிறார்.

அங்கே வந்த பிறகு இந்த அதிகாரிகளுக்குள் க்ரூப் ஸிஸ்டம் வந்துவிடுகிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் நாங்கள் எல்லாம் கவர்மெண்டிலிருந்து வந்திருக்கிறோம், நாங்கள் சொல்வது தான், அல்லது தங்களுடைய பியூன் சொல்வதுதான் வேத வாக்கு என்கிற முறையில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னை கார்ப்பரேஷனைப்பற்றி சொல்லாதீர்கள் என்று சொல்லப்பட்டது. சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்டு கார்ப்பரேஷனில் இருந்த பிரதிநிதி என்ற முறையில் சொல்கிறேன். ஊதுகிற நேரத்தில் சங்கை ஊதுகிறேன், எந்த நேரத்தில் எந்த இடத்தில் கேட்க வேண்டுமோ அப்போது கேட்டுக்கொள்ளுங்கள். அங்கே கீழே இருக்கின்ற அதிகாரிகள், இங்கே திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்ட கோயம்பேடு கழிவு நீர் திட்டம் போன்ற திட்டங்களுக்கு குறிப்புகளைத் தயாரித்து அனுப்புகிறார்கள். ஆனால், இங்கே வந்தவுடன். ரிஜெக்டட் என்று போட்டு கீழே அனுப்பி விடுகிறார்கள் இந்த க்ரூப் ஸிஸ்டம்-பாகுபாடு நிலை இருப்பதினால் இதை மாற்றுவதற்கு நாங்கள் சொல்வதெல்லாம், உடனடியாக் தேர்தலை வைத்துவிடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். மக்கள் ஆட்சி மலர்ந்து விட்டிருப்பதாக சொல்லுகிறார்ககள். அப்படிப்பட்ட மக்கள் ஆட்சி வரவேண்டும். எதை எடுத்துக்கொண்டாலும்— உதாரணத்திற்கு ஒன்றை சொல்லுகிறேன். மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் அன்றாடம் இல்லாவிட்டாலும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் எங்கள் பகுதியிலுள்ள ஒரு கோயிலுக்கு வருகிறார். அந்தக் கோயிலுக்கு வருகின்ற அந்த நடைபாதை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநகராட்சி மன்றத்தைப் பற்றி பேசவேண்டாம் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி: நான் புதியவன் என்பதால் உதாரணத்திற்காக இதை எடுத்துச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் எனக்கு பழக்கமில்லாதவர் என்றாலும், எனக்கு ஒரு தேதி தந்தால், அந்த நாளில் எங்கள் பகுதிக்கு அழைத்துச் செல்லுகிறேன். அந்தப் பகுதிகளில் ரோடு வசதி எப்படியிருக்கிறது. எந்த நிலைமையில் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதையெல்லாம் தயவு செய்து பார்க்கவேண்டும். அங்கே அதிகாரிகள் செய்கின்ற அக்கிரமங்களை ஒவ்வொரு நிர்வாகத்திலும் எப்படியெல்லாம் என்ன என்ன நடக்கிறது என்பதை நான் விவரமாக சொல்லமுடியும்.

சென்னை கார்ப்பரேஷனில் அமைச்சர் அவர்கள் முக்கியமாக ஸி.ஐ.டி. என்ற ஒரு டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. அந்த டிபார்ட்மென்டுக்கு போய் பார்க்க வேண்டும் என்று பொது மக்களின் சார்பாகவும், என்னுடைய பகுதி மக்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த சி.ஐ.டி. டிபார்ட்மெண்டில், யார் பணம் செலுத்தினாலும், எதற்கு செலுத்தப்பட்டது, யாரால் செலுத்தப்பட்டது என்கின்ற தஸ்தா

வேஜுகள் இருக்கும். ஆனால் இப்போது எந்தவித தஸ்தாவேஜும் இல்லை. முன்னால் டெண்டர் டிப்பாசிட் போட்டால், அதற்குரிய ரிக்கார்டுகள் அங்கே இருக்கும். இன்றைய தினம் அப்படிப்பட்ட ரிக்கார்டுகள் எதுவும் கிடையாது. இதைப் பற்றிக் கேட்டால் செக்ரட்டரியேட்டிலிருந்து வந்திருக்கின்ற அதிகாரிகள் எதையெல்லாமோ சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் சொல்வதுதான் வேதவாக்கு என்று சொல்லிக் கொண்டு, பத்து அதிகாரிகள் அக்கிரமங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றுவதற்குத்தான் தேர்தலை வைத்து விடுங்கள் என்று சொல்லுகிறோம். அது இங்கு மட்டுமல்ல, எங்கெங்கு இதுபோன்று நகரசபைகள் அதிகாரிகளால் நடத்தப் படுகின்றதோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட வீண் விரயமும், அக்கிரமங்களும்தான் நடைபெறுகின்றன.

இன்னொன்று, அவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில் தெரியும், அதாவது கொத்தவால் மார்க்கெட்டை சேசுபிள்ளை விளையாட்டு மைதானத்திற்குக் கொண்டு போகவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்காக வரைபடம் தயாரிக்கப்பட்டு கோட்டைக்கு —செக்ரடேரியட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த வரைபடம் சரியில்லை. இதனுடைய எஸ்டிமேட் என்ன என்றெல்லாம் கேட்டு செக்ரட்டேரியேட் அதிகாரிகள் ரிஜெக்ட் செய்து அனுப்பினார்கள். இப்படி ஐந்து முறை திரும்ப திரும்ப அனுப்பின பிறகு, முதலாவது எது சரியில்லை என்று திருப்பி அனுப்பினார்களோ அதையே இப்போது அனுப்புங்கள் என்று கேட்டார்கள். இப்படி ஒருவர்க்கொருவர் நீயா நானா என்கின்ற பிரச்னையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி உள்ளாட்சித்துறையில் பெரிய அக்கிரமங்கள் நடக்கின்றன. இதை மாற்றுவதற்குதான் தேர்தலை வையுங்கள் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற தேர்தலை தள்ளிவைக்கின்ற இடைக்காலத்தில் இப்போது ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்ட வேண்டும் என்று இங்கே இந்த அவையில் இந்த மசோதாவை வைத்திருக்கிறார்கள். தனி அதிகாரிகள் இருக்கவேண்டியதனுடைய அவசியம் டிஸ்ட்டிரிக்ட் முனிசிபாலிட்டி என்கின்ற சட்டத்தில் அந்தந்த ஜில்லாக்களுடைய கலெக்டர் is named as Inspector of Municipalities என்றிருக்கிறது. அதற்கு பதிலாக கமிஷனர் எடுக்கின்ற முடிவுகளுக்கு மேல் முறையீடு கலெக்டரிடத்தில் கொடுக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது.

(முற்பகல் 10-50)

அந்த கலைக்கப்பட்ட முனிசிபாலிடிகளிலே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கலெக்டர்களுக்கு மேல் முறையீடு தவிர்க்கப்பட வேண்டி, அந்த தனி அதிகாரிகளிடத்திலே மேல் முறையீடுகளுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மேல் முறையீட்டின் முறையிலே, யார் ஒருவர் முறையீடு செய்தாலும் அது முறைப்படி கவனிக்கப்படுவதில்லை என்பதைக் குற்றச்சாட்டாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கே ஒரு கடைநிலை ஊழியர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதற்குரிய காரணம் என்ன? சீனியாரிடி பட்டியல் தயாரிக்கப்பட்டபோது, அவருடைய முன்னுரிமை தள்ளிப்போடப்பட்டது. என்னுடைய சீனியாரிடியை நீங்கள் மாற்றியிருக்கிறீர்கள், எனக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று கேட்டார். அப்படி அவர் கொடுத்ததுதான் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதற்குக் காரணம். அதிகாரி சென்றபோது, அவர் வேலையில் இல்லை. ஆகவே வேலை நீக்கம் என்று உத்தரவு போட்டார்கள். இப்போது சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டிருக்கிறார். 3, 4 மாதங்களாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். 4 மாதங்களுக்கு முன்னாலே, மேல் முறையீடு தயாரித்து கலெக்டர் அவர்களிடம் கொடுத்தபோது, இந்த அப்பீலை தனி அதிகாரி அவர்களிடம் தாருங்கள் என்றார். கொடுத்து, நான்கைந்து மாதங்களுக்கு மேலாகியும், என்ன விதமான நடவடிக்கை எடுப்பார்கள் என்று கேட்டபோது, அங்கிருந்த என்ஜினியர் பதில் சொன்னார். 'அவரை தான் செய்தது குற்றம் என்று ஒப்புக்கொள்ளச் சொல்லுங்கள' என்று. அப்படி அவர் சொல்லி 15, 20 நாட்கள் ஆகின்றன. மேல் முறையீடு என்று சொல்கின்றபோது, அது சட்ட வடிவாக, சட்ட நியதியாக கவனிக்கப்பட வேண்டுமே தவிர, It should not be treated as administrative routine matters அதை சாதாரண நடவடிக்கையாகவோ, நடைமுறையாகவோ கருதிக்கொள்ளக்கூடாது.

அதேபோன்று, கழிவு நீர் திட்டத்தை எடுத்துக்கொண்டால் வேலூர் முனிசிபாலிடியில் விருதம்பட்டு என்ற இடத்தில் இந்தக் கழிவு நீர் திட்டம் உள்ளது. அதற்கு முனிசிபாலிடியைச் சேர்ந்தவர்கள் தண்ணீர் விடவேண்டும். அங்கிருந்த குத்தகைதாரர் பணம் கட்டவில்லை என்ற காரணத்திற்காக தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது. இப்படி நிறுத்தப்பட்டது 2, 3 நாட்களுக்கு என்று சொன்னாலும் பரவாயில்லை; தொடர்ச்சியாக 10, 15 நாட்களுக்கு என்று சொல்லும்போது, அதன் காரணமாக அங்கு பயிரிடக்கூடிய பயிர்கள் எல்லாம் வாடக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. ஏறக்குறைய ஐந்தாண்டுகள் இந்த நிலைமை நீடித்து வருவதால், வேலூர் முன்சீப் கோர்ட்டிலும், ஜில்லா கோர்ட்டிலும் சப்-கோர்ட்டிலும் வழக்குகள் தொடரப்பட்டு, இன்றைக்குக்கூட வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. எந்தெந்த நாட்களில் நீங்கள் தண்ணீர் விட்டீர்கள், அதற்கான தஸ்

1977 ஜூலை 23] [திரு. ரா. மார்க்கபந்து]

தாவேஜுகள் இருக்கின்றனவா என்று நான் விசாரிக்கும்போது, கழிவு நீர் பண்ணைக்கு நாங்கள் கண்ணீர் விட்டோம் என்று சொல்கிறார்களே தவிர, அவர்களால் எந்தவிதமான தஸ்தாவேஜையும் காட்ட முடியவில்லை. அதற்குரிய திருத்தங்களையும் இதுவரை அவர்கள் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே, எதையும் அந்த அதிகாரிகள் நினைத்தால் தான் செய்வது என்பது தான் இன்றைக்கு அங்கே நடந்துகொண்டு வருகிறது.

அதேபோன்று, வீடுகளுக்கான வரியை எடுத்துக்கொண்டால் ஒரே நிலையிலுள்ள கட்டிடத்திற்கு ஒவ்வொரு விதமான வகையில் ஆர்பிட்ரரியாக வரியை நிர்ணயிக்கின்றார்கள். இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு இப்போது 'பாபுலர் ரெப்ரசென்டேஷன்' முறை கிடையாது. அப்படி ஏதாவது கேட்டாலும்கூட சட்டம் அப்படி உள்ளது, அரசாங்கத்திலிருந்து அப்படி உத்தரவு வந்திருக்கிறது, ஆகவே அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். அப்படி அவர்கள் தங்கள் பொறுப்புக்களிலிருந்து தட்டிக் கழிக்கும் நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, முன்னே நான் குறிப்பிட்டதுபோல், 'பாபுலர் ரெப்ரசென்டேஷன்' அதாவது பொதுமக்களுடைய குழு ஒன்றை ஏற்படுத்தி, அதிலே பல கட்சியைச் சார்ந்தவர்களும் இருந்து, அவர்கள் எடுத்துச் சொல்லும் வகையிலே இருந்தாலும் சரி, அல்லது அந்த நகராட்சியிலே இருக்கின்ற முக்கியப் பிரதிநிதிகளைக் (இம்பார்ட்டென்ட் பர்சனலிடீஸ்) கொண்ட ஒரு அட்வைசரி போர்டோ அல்லது ஆலோசனைக் குழுவோ அமைக்கப்படலாம், அது மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்பதை உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள், தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிக்கும் இந்தத் திருத்த மசோதா பல்வேறு வகையில் அணுகப்பெற்று, இன்றைக்கு இந்த மசோதா தேவைதானா என்ற கேள்வியை எழுப்பக்கூடிய அளவு மாண்புமிகு உறுப்பினர்களால் இந்த மசோதா இங்கே அணுகப்பட்டிருக்கிறது. மக்களாட்சி என்று நாடு முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நிலை மாறி, நம்முடைய ஸ்தல ஸ்தாபனங்கள் என்று சொல்லக்கூடிய ஸ்தாபனங்கள் எல்லாம் மக்களுடைய நேரடி ஆட்சியிலே இல்லாமல் தனி அதிகாரிகளால் ஆளப்படுகின்ற நிலை நீடிப்பது நிர்வாகத்திற்கும் நல்லது அல்ல, மக்களுடைய நன்மைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் சூளுரைக்கும் நீதி செய்வதாகாது, ஜனநாயகத்திற்கும் ஒவ்வாதது என்ற கருத்தை உறுப்பினக்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

தனி அதிகாரி ஆட்சி என்று சொன்னால் அது நேரடியாக மாநில அரசாங்கத்தினுடைய ஆட்சி என்றுதான் பொருள். ஆகையால் மாநில அரசாங்கத்தினுடைய பொறுப்புகள் அதிகமாகின்றன என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

இன்றைக்குப் பல நகராட்சிகளை நாம் பார்க்கிறோம். அங்கே எல்லாம் மக்களுடைய அன்றாடத் தேவைகள் 'பேசிக் அமெனிடிஸ்' கவனிக்கப்படவில்லை என்ற புகார்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன.

துப்புரவு வேலை செய்வது நாட்டுக்குத் தேவையான ஒன்று. இன்று அன்றாடம் அது சரிவரச் செய்யப்படுவதில்லை. உதாரணமாக, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் நான் வாக்குச் சேகரிக்கச் சென்றேன். அப்போது சொன்னார்கள்—'பக்கத்தில் பார்த்தீர்களா' குப்பைத் தொட்டி இப்படி இருக்கும்போது வாக்குக் கேட்க வந்திருக்கிறீர்களே என்று தாய்மார்கள் சபித்தார்கள். இன்றைக்கு நன்றி சொல்லச் சென்றால், 'ஓட்டு வாங்கிக் கொண்டு சென்றான், 26 நாட்கள் ஆகிவிட்டன, குப்பை மலையாகிவிட்டது, ஐவ்வாது மலைக்காரரே, ஐவ்வாது மலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீரே, ஆம்பூர், வாணியம்பாடியிலுள்ள குப்பை மலையைப் பற்றிப் பேசுவீரா; சாக்கடைகளில் நீர் அப்படியே தேங்கிக் கிடக்கிறதே; துப்புரவு செய்வதே இல்லை. அகற்றுவதே இல்லை; அதனால் கொசுத் தொல்லை. வியாதிகள் அதிகமாகின்றன' என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் நடந்துகொண்டிருக்கிறது தனி அதிகாரிகளுடைய ஆட்சி அவர்களைக்கேட்டால் ஒதுக்கீடு சரியாக இல்லையென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் பற்றாக்குறை எப்பொழுதும். ஏன் பற்றாக்குறை என்பதை அரசு கவனிக்கவேண்டும். ஒன்றே ஒன்று சொல்லுகிறேன்.

ஆம்பூர் நகரத்தில் மூன்று சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன; வாணியம்பாடியில் நான்கு சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. இந்த ஏழு சினிமாக் கொட்டகைகளிலும் வருஷத்தில் வசூலிக்கப்பட வேண்டிய வரிகளைச் சரியாக வசூலித்தால் தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தில் எவ்வளவோ நிதிப் பற்றாக்குறையை அது சமாளிப்பதாக இருக்கும். அந்த தமாஷா வரியில் 90 சதவிகிதத்தை அரசு ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கிறது. ஆனால், இப்போது வசூலிக்கப்பட வேண்டிய அந்தத் தொகையிலே பத்து சதவிகிதம் கூட வசூலிக்கப்படுவது இல்லை. டாக்ஸ் எவெஷன், அதோடு அதிகாரிகளுக்கும் தியேட்டர் நிர்வாகிகளுக்கும் இடையே கொல்யூஷன் இருக்கிறது என்ற உண்மையைச் சொல்லுகிறேன். தற்போது பத்து சதவிகிதம் கூட இந்த வரி வசூலிக்கப்படுவதில்லை. அதை முழுவதும் வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டு தினங்களுக்கு முன்னால் கடலூர் சென்றிருந்தேன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு கடலூர் மக்கள் சொன்னார்கள் "5 சதவிகிதமாக இருந்த தண்ணீர் வரி

1977 ஜூலை 23] [திரு எம். ஏ. லத்தீப்]

இன்றைக்குத் திடீரென்று 20 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது'' என்று பொது மேடையில் சொன்னார்கள். குறை சொல்லப்படவில்லை; நகராட்சியில் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது.

[முற்பகல் 11–00]

லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்திடமிருந்து மூன்றில் இரண்டு பாகம், தமிழக அரசிடமிருந்து 1 பாகம் கடன் பெற்று இந்தத் தண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். அதற்காக ஏறக்குறைய 11 சதவீதம் வரையில் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி வட்டி வீதம் ஏறிக் கொண்டே போனால் நகர சபைகள் எப்படிக் கொடுக்க முடியும். அவர்களுக்கு வருமானம் வருவதற்கு அதர் சோர்ஸஸ் கிடையாது, வாங்கிய பணத்தைக் திருப்பிக் கொடுப்பதற்கும் வட்டி கொடுப்பதற்கும் வேறு வரிகளைப் போட வேண்டிய நிலைமைதான் ஏற்படும். தமாஷா வரி மட்டுமல்ல, ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்தும் பங்கு கிடைக்கிறது, இப்படி எல்லாவற்றிலும் எவேஷன் இருந்து கொண்டிருக்கிறது.

நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றே ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் தண்ணீர்ப் பிரச்சனையை பொறுத்த வரையிலே ஒரு சிக்கல் இருக்கிறது, அது நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கின்ற பிரச்சனைதான். ஆதியிலிருந்து முதலிலிருந்து ஒரு சிக்கல் இருக்கிறது. ஒரு நகரத்திற்குத் தண்ணீர் திட்டத்திற்கு 60 இலட்சம் ரூபாய் கடன் ஒரு நகரசபை வாங்குகிறது. எல்.ஐ.சி.க்கு ஒரு அப்ளிகேஷன் போட்டால் அவர்கள் சாங்ஷென் செய்கிறார்கள். இன்னொரு பாகத்தை மாநில அரசு கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கிற நேரத்தில் ஒரு நகரசபை வங்கியில் ஒரு அக்கவுண்ட் ஓப்பன் செய்கிறார்கள், என்றைக்கு அந்த நகரசபையின் பெயரில் அக்கவுண்டு ஓப்பன் செய்யப்படுகிறதோ அந்தத் தேதியிலிருந்து வட்டி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. 1966 ஆம் ஆண்டு ஒரு நகரசபையின் பெயரில் கிரடிட் அக்கவுண்ட் ஓப்பன் செய்தால் அந்தத் தண்ணீர் திட்டம் 1969 அல்லது 1970 ஆம் ஆண்டுதான் தொடங்கப்படுகிறது. இந்த நான்கு ஆண்டுகளுக்கு வட்டியை அந்த நகரசபை செலுத்திக்கொண்டிருக்கிறது.

There should be *quid pro quo* for any payment made by the people.

இப்படி எந்த விதப் பலனும் இல்லாமல் எந்தவிதமான குவிட் புரோ குவோவும் இல்லாமல் வட்டியைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். வேலை எப்போது ஆரம்பமாகிறது, 1969 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து 1974 வரையிலும் சன்னஞ்சன்னமாகச் செய்து வருகிறார்கள், அதுவரையிலும் அந்தப் பணம் பாங்கிலே தான்

இருக்கிறது, அந்தப் பணத்திற்கு வட்டியை நகரசபை செலுத்து கிறது, அது வரையிலே அந்தப் பணம் வங்கியிலே வீணாகக் கிடக் கிறது, அந்த வட்டி வேலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து கணக் குப் போட்டால் நியாயமாக இருக்கும், ஆனால், கணக்கு ஒப்பன் செய்த நாளிலிருந்து வட்டி வாங்குகிறார்கள், அந்த பணத்திற்கு கொடுக்கப்படுகிற வட்டி யாருக்குப் போய்ச் சேருகின்றது?

[the difference between the interest paid by the municipality to the L.I.C. and the Government and the interest to be paid and should be paid to the municipality for the amount which has been kept on behalf of the municipality, what happens to it].

இதுவரையிலும் இல்லை. இந்தப் பணம் எங்கே போனது, அது பற்றித் தீவிர விசாரணை செய்ய வேண்டும். அந்தச் சுமையை எல்லாம் நகரசபையின்மீது சுமத்தியிருக்கிறார்கள். இதைப்பற்றி விரிவான ஆய்வு செய்து நானே அறிக்கை கொடுத்திருக்கிறேன், இந்த சபையினுடைய குழு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது, அந்த ரிப்போர்ட்டின் கதி என்ன என்பது இதுவரையிலும் தெரிவிக்கப்படவில்லை.

தனி அதிகாரி ஆட்சி நீடிக்க வேண்டுமென்ற நிலைமை இருக் கிறது, ஆகையினாலே கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் ஜன நாயகத்திலே மிக்கப் பற்றுள்ளவர்கள் என்பது எனக்குத் தெரி யும், ஆகவே மிகுந்த தயக்கத்தோடுதான் அவர்கள் இந்த மசோ தாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரி யும், அவர்கள் இதற்குச் சொல்லியிருக்கிற காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது, எவ்வளவு சீக்கிரமாக மக்க ளாட்சி அமைக்க முடியுமோ அதை அமைக்க வேண்டும், அங்கே மட்டும் என்ன வாழ்வு, மக்களுடைய பிரதிநிதிகள் யார்யாரிட மோ பணம் வாங்கிக் கொண்டு என்ன என்னவோ செய்கிறார்கள், நமக்கு எல்லாம் தெரியும், வாக்கு கேட்டு செல்கிற நேரத்தில் தண்ணீர் கொண்டு வரவில்லையே நீங்கள் என்று நான்கு பேர் களைக் கூட்டிவந்து சொல்கிற நிலைமை நமக்குத் தெரியும்.

வாணியம்பாடியிலே அங்கேயுள்ள மீனியல்ஸுக்கு 2, 3 மாத மாக சம்பளம் கொடுக்கவில்லை. கேட்டால் சொல்கிறார்கள், அவர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுப்பதில்லை, அங்கேயுள்ள சானிடரி இன்ஸ்பெக்டர்கள் மூலமாகத்தான் சம்பளம் வழங்கு கிறார்கள். இவர்கள் அவர்களுக்காகப் பணத்தை வாங்கிக்கொண்டு இரண்டு மாதம், நான்கு மாதம் என்று கொடுப்பதில்லை என்று கேள்விப்பட்டேன். என்ன சொல்கிறார்கள் என்றால் வட்டிக்குக் கொடுத்து பணம் சம்பாதிக்கிறார்கள். மொத்தமாக அவர்கள் வாங்கிக்கொண்டு 2, 3 மாதங்களில் சன்னஞ் சன்னமாகக் கொ டுப்பது, 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால், ‘‘ எனக்குச்

சாப்பாட்டிற்கு வழியில்லை'' என்று வரும் நேரத்தில், ''போய்யா, 50 ரூபாயை வாங்கிக் கொண்டு போய்யா '' என்று சொல்கிறார்கள்.

இந்த நிலைமை இன்னும் நீடிக்கிறது. மிகுந்த ஊழல் இருக்கிறது. புரையோடி இருக்கிறது. நீங்கள் இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பொறுப்பு இருக்கிறதே தவிர உங்களை அதற்குக் குற்றச்சாட்டிற்கு ஆளாக்குவதற்கு எந்த நியாயமும் இல்லை. பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பு என்னவென்றால் இங்கே ஏற்பட்டிருக்கின்ற ஊழலை, குப்பை கூளங்களை—குப்பை கூளங்கள் தெருவிலே மட்டுமல்ல, எண்ணத்திலேயும் இருக்கிறது, அவற்றை அகற்ற அமைச்சரவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து, இந்த மசோதாவை ஆதரிக்கும் அதே நேரத்தில் பொதுமக்கள் ஆட்சியை விரைவில் அமைக்க நகராட்சி மன்ற, பேரூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று மிகவும் அன்போடு கேட்டு என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அவை முன் உள்ள நகராட்சித் தனி அதிகாரிகளின் ஆட்சிக் கால நீட்டிப்பு மசோதா குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மாயூரம் நகராட்சி மன்றத்தைப் பொறுத்த மட்டில் அங்கே தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவர் திரைப்படத் துறையில் உள்ளவர்கள் சொல்வார்களே '' கஸ்ட் ஆக்டர் '' என்று அதைப்போல வாரத்திலே ஒரு நாள் வந்து தலையை காட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே மாயூரம் நகராட்சி மன்றத்திற்கு வந்து தலையைக் காட்டிக் கொண்டிருக்கும் நிலைமையில் அந்த நகராட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதைப் போலவே இதற்கு முன்னால் இல்லாத அளவிற்கு இருக்கின்றவர்களுக்கே வேலை பறிபோய் விடுமோ என்ற சூழ்நிலையில் குறிப்பாக மாயூரம் நகராட்சிக்கு "ரிசப்ஷனிஸ்ட்" வரவேற்பாளர் என்ற அலுவலர் ஒருவரை நியமித்து, அதுவும் தாய்க்குலத்தைச் சேர்ந்த ஒரு அம்மையாரை நியமித்து நகராட்சி தனி அலுவலர் தன்னுடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பொதுவாக மாயூரம் நகராட்சிக்கு இருக்கின்ற குடிதண்ணீர்ப் பற்றாக்குறையில் இப்பொழுது இருக்கின்ற தனி அதிகாரி அவர்கள் தானே இயங்கும் குழாய் மூலமாகக் குடிநீர் வழங்கப்படும் வரையில் அதற்குத் தேவையான அளவிற்குத் தண்ணீர் வழங்கப்பட முடியாத இக்கட்டான சூழ்நிலை மாயூரம் நகராட்சிப் பகுதியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

நகராட்சி மன்றங்களில் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது குறிப்பாக இன்றைய அரசு, புதிய அரசு ஒரு நல்ல நிலையை அறிவித்திருக்கிறது. பொதுவாகவே, பொதுமக்கள் மூலமாக நகராட்சிகளின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற கருத்தை, இதற்கு முன்னே பெரியவர்கள் வலியுறுத்திச் சொன்னதை இந்த அரசு நடைமுறைப்படுத்த உறுதியை மேற்கொண்டிருக்கிறது. அத்தகைய சட்டத்தைக் கொண்டு வரும் பொழுது நகராட்சி மன்றங்கள் திருத்தச் சட்டத்தில், குறிப்பாக ஒவ்வொரு நகராட்சியிலும் சென்னை ஜில்லா முனிசிபாலிடி ஆக்ட் அடிப்படையில் மொத்தம் இருக்கிற நகராட்சி மன்ற உறுப்பினர்களில்

"One fourth of the members may be elected from among the scheduled castes and ladies."

என்று இருப்பதை, இருக்கின்ற மொத்த நகராட்சி மன்ற உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று இருப்பதையும், அதைப் போலவே தாய்க்குலத்திலேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று இருப்பதையும், குறிப்பாக மாயூரம் போன்ற நகராட்சிப் பகுதிகளிலே இருக்கும் நிலைமையைப் பற்றி நான்கைந்து முறை நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன், 32 உறுப்பினர்கள் உள்ள மாயூரம் நகராட்சி மன்றத்தில் ஒரேயொரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் அங்கம் வகிக்கும் சூழ்நிலை இருப்பதைக் காண முடியும். ஆனால் சட்டத்தில்,

"One fourth of the members may be elected from among the scheduled castes" என்று இருக்கிறது. நான்கிலே ஒரு பகுதியினர் என்று இருக்கிறது. சட்டத்திலே உள்ளதைப் போல நான்கிலே ஒரு பங்கு' என்றால் 8 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். "may be elected" என்று இருப்பதால் '(May be elected" என்அறடிப்படையில், "shall be alected" என்று இல்லாத அடிப்படையிலே அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

"One fourth of the members may be elected from among the scheduled castes"

என்று இருப்பதை, சட்டத்தைத் திருத்தக் கூடிய நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த வகையிலே கவனம் செலுத்தி,

"One fourth of the member shall be elected from among the scheduled castes."

என்று உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக அது தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரிய நல்ல காரியத்தைச் செய்வதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என்று என்னுடைய தாழ்மையான ஆலோசனையை எடுத்துச் சொல்கிறேன்.

1977, ஜூலை 23] [திரு. என். கிட்டப்பா]

(முற்பகல் 11-10.)

அதைப் போலவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவது போலவே, சமுதாயத்தில் மிகமிக அடித்தளத்தில் உள்ள சலவைத் தொழிலாளிகள், சவரத் தொழிலாளிகள், மட்பாண்டத் தொழிலாளிகள் இவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகின்ற வகையில் அத்தகைய சட்டம் உருவாக்கப்படலாம் என்று தெரிவித்து, இந்த மசோதாவைப் பற்றி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. நா. பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர சபைகள் சட்டத்தை 6 மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை வரவேற்கக்கூடிய இந்த நேரத்தில் நகரசபைகளை எடுத்துக் கொண்டால், இன்றையதினம் மக்கள் சாதாரணமாகப் பேசுகிறார்கள், அது நகரசபையா அல்லது நரகசபையா, என்று. அந்த நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது அதற்குக் காரணம் இன்றைய சர்க்காரை நான் குறை கூறவில்லை. கடந்த காலங்களிலே இருந்த நிர்வாகமும் இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளும்தான் இந்த அளவுக்குக் கொண்டு செல்லக் காரணமாகும். ஆகவே, புதிய அரசு சிக்கல்களையெல்லாம் தீர்க்க இன்றையதினம் எப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்களோ அதே முறையில் நகரசபைகளிலும் தனிக்கவனம் செலுத்தி இந்த அவல நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்சார விளக்குகள் நகரசபைகளில் மிகமிக மோசமான நிலைமையில் இருக்கிறது. முக்கிய வீதிகளில்தான் லைட்டுகள் இருக்கின்றன, எரிகின்றன. ஊரல் பகுதியிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் வசிக்கக்கூடிய இடங்களிலே லைட்டுகள் கிடையாது. சாக்கடையை எடுத்துக் கொண்டால் வீடுகளுக்கு முன்னாலேயே ஓடுகின்றன. ஒரு பகுதியில் சாக்கடையும் இருக்கிறது. அதன் ஓரத்திலே மக்களும் குடியிருக்கிறார்கள். அந்த இடங்களைச் சுகாதார அதிகாரிகள் போய் பார்ப்பதே கிடையாது. தொத்து நோயும் காலராவும் ஏற்படுகிறது. நிர்வாக அதிகாரிகள் நகரசபையை சுற்றிப் பார்ப்பதே கிடையாது. மந்திரிகள் கூட 3 மாதங்களுக்கு ஒரு முறை, 6 மாதங்களுக்கு ஒரு முறை கிராமங்களைச் சுற்றிப் பார்க்கிறார்கள். ஆனால் நிர்வாக அதிகாரிகள் போவதே கிடையாது. யாராவது கவுன்சிலர் சாக்கடை ஓடுகிறது என்று சொன்னால், நிர்வாக அதிகாரி பார்க்கிறேன் என்று சொல்வார். ஆனால் மனமுவந்து பொறுப்பை நிறைவேற்றுகின்ற முறையில் நிர்வாக அதிகாரி நடந்து கொள்வதில்லை. அதை அரசு விசேஷமாக கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. பனிமவேல்) [1977 ஜூலை 23]

நகரசபை சானிட்டரி இன்ஸ்பெக்டர்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் நகரசபை வேலைகளைச் சுத்தமாகக் கவனிப்பதில்லையென்று சொல்வேன். காரணம், அவர்களுக்கு வேறு வேலை சரியாக இருக்கிறது. பால் கேஸ் பிடிப்பது, இலஞ்சம் வாங்குவது இந்த மாதிரி வேலைகள் சரியாக இருக்கின்றனவே தவிர, ஊர் வேலைகளை, வார்ட் வேலைகளைக் கவனிக்க முயற்சிப்பதில்லை. அவர்கள் பழகிய அதிகாரிகள்; தடிப்பேறிய அதிகாரிகள்; ஆகவே, அதில் தனிக் கவனம் செலுத்தி, என்னென்ன சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமோ அதற்கேற்ற வகையில் அந்த அதிகாரிகளைக் கண்காணிக்க வேண்டும்.

அமைச்சர்கள் பல திடீர் சோதனைகள் நடத்துகிறார்கள். இதையெல்லாம் கவனத்திலே கொண்டு அதிகாரிகள் லீவ் போட்டு போய் விடுகிறார்கள். ஆபிஸிலே யாருமே இல்லை. இந்த முறையை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ தப்பு பண்ணி இருக்கலாம், அல்லது இன்னொரு அதிகாரி தப்பு பண்ணியதற்கு சாட்சியாக போடலாம். இதிலே ஏன் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் லீவில் போகிறார்கள். ஆகவே, எந்த அதிகாரியும் சரியான காரணமின்றி லீவ் போடக் கூடாது என்ற உத்தரவை ஒவ்வொரு இலாகாவுக்கும் போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஒ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரியினுடைய காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற இந்த மசோதாவிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக, தனி அதிகாரிகள் ஆட்சியிலே உள்ள நகராட்சிகளிலே மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லாமல் போய் விடுகிறது. நகராட்சியைப் பொறுத்த வரையில் நகராட்சியிலே பெரிய கொள்கைகளை நிர்ணயம், பண்ணுவதில்லை. ரோடு போடுவது, சுகாதார வசதிகளைச் செய்வது போன்ற மக்களுடைய அன்றாட தேவைகளைச் செய்வதுதான் நகராட்சிகளுடைய கடமையாக இருக்கிறது.

ஆனால் இந்த வேலைகளைச் செய்யக்கூடிய சூழ்நிலையிலே நகராட்சியிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே கவுன்சில் உறுப்பினர்கள்தான் பாலமாக இருந்துக் இந்த வேலைகளை நேரடியாக கவனித்துக் கொண்டு வந்தார்கள். ஆகவே, இந்தக் கால நீட்டிப்பு மசோதா கடைசியாக இருக்க வண்டும். அடுத்து நாம் எதிர் பார்ப்பது நகராட்சியினுடைய தர்தல் பற்றித்தான்.

1977 ஜூலை 23] [திரு. ஒ. சோ. வேலுச்சாமி]

நகராட்சிகளிலே சொத்து வரியை நிர்ணயம் பண்ணுகின்ற சூழ்நிலையிலே, வாடகை வீடுகளுக்கு வீட்டு வாடகையை அடிப்படையாக வைத்து நிர்ணயம் செய்கிறார்கள். வாடகைக்கு விடாத வீடுகளுக்கு வீடுகளின் மதிப்பை வைத்து சொத்து வரி நிர்ணயம் செய்கிறார்கள். ஏழை மக்கள்—சாதாரண மக்கள் குடியிருக்கக்கூடிய வீடுகளுக்கு சாதாரண வீடுகளுக்கு அதிக வரியும், பெரிய பங்களாக்களுக்கு குறைந்த வரியும் விதிக்கப்படுவதை நாம் நகராட்சிகளிலே பார்க்கிறோம். ஏனென்றால் பெரிய பணக்காரர்களுக்கு வசதியுள்ளவர்களுக்குத் தனி அதிகாரிகள் சலுகை காட்டக்கூடிய சூழ் நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய அளவில் நகராட்சி மன்றங்கள் பணி புரிய வேண்டும்.

கோவில்பட்டியைப் பொறுத்த வரையில் $1\frac{3}{4}$ கோடி ரூபாயில் தண்ணீர் திட்டம் ஏற்படுத்தி இன்று தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய மக்கள் செலுத்தக்கூடிய வரி, எண்ணெய் வாங்குவதைப் போல இருக்கிறதே தவிர, தண்ணீருக்குக் கொடுப்பது போல இல்லை. வரி அதிகமாக இருக்கிறது. கோவில்பட்டி நகராட்சிக்கு $1\frac{3}{4}$ கோடி ரூபாய் கடனிலே இருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு நிவாரணம் அளிப்பது இந்த அரசினுடைய கடமை. அது மட்டுமல்ல. அதுபற்றி முடிவெடுத்துச் சொல்ல வேண்டிய கடமை நகராட்சி மன்றத்திற்கு இருக்கிறது. விரைவிலே அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதா மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கார்ப்பரேஷன்கள் உட்பட மொத்தம் 103 நகராட்சிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. மாண்புமிகு தலைவர் அவர்கள் கூட நகர் மன்றத் தலைவராக இருந்திருக்கிறார்கள். நகராட்சி மன்றங்களிலே தனி அதிகாரிகள் இருப்பதால் பொதுமக்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் ஏற்படும் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையில் பேசியதாகப் பத்திரிக்கையிலே பார்த்தேன். ஆகஸ்டு மாத இறுதிக்குள் நகராட்சித் தேர்தலை நடத்த முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவிலே 6 மாதம் என்று போட்டிருக்கிறார்கள். இந்த 6 மாத காலத்தை கூட 3 மாத காலமாக குறைக்கலாம் என்று குறிப்பு இக் மசோதாவிலே இருக்கிறது. நகராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துவது பொதுமக்களுக்கு ஜனநாயகத்திலே கொண்

டிருக்கிற நம்பிக்கையை வலுவாக்கும். பொது மக்களுடைய குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நகராட்சித் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க இந்த மசோதாவைக் கொண்டு வருகிற இந்த நேரத்தில் 6 மாத காலத்தில் நகராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

என்ன காரணத்தாலோ மதுரை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி பற்றி அமைச்சரவர்கள் இந்த மசோதாவிலே கொண்டு வரவில்லை. மாநகராட்சி தேர்தல் நடைபெறாததால் ஏற்படுகிற கஷ்டங்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள், குறிப்பாக சென்னை மாநகராட்சியினை ஒரு பகுதியிலே குடிதண்ணீர் பிரச்சினை, டிரெய்னேஜ் பிரச்சினை, மின்சார வசதி போன்றவைகள் சரியாக இல்லை. என்னுடைய பகுதியிலே கிரியப்பா சாலை, ஆலயம்மன் கோவில் சாலை, ரங்கூன் வீதி, ஹால்ஸ் கார்டன் சௌத் போக் ரோடு ஆகிய பகுதிகளுக்கு உடனடியாக பரிகாரம் காண முடியவில்லை. அதிகாரிகள் திறமையை நான் தவறாக சொல்ல மாட்டேன். திறமையான அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனாலும் கூட மக்களுடைய பிரதிநிதிகள் விரைவாக நடத்துவார்கள். எனவே, தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 6 மாத காலத்திற்கு நீட்டிக்கின்ற வகையில் வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஆய்வுரை தந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மசோதாவின் அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்லாவிட்டாலும் கூட, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற பகுதிகளைப் பற்றிய குறைபாடுகளை இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்ற உணர்வோடு தெரிவித்திருந்தாலும் அவைகளையும் அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 30--6-77 ஓடு முடிவு அடைகிறது. அதிலிருந்து 6 மாத காலத்திற்கு பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்ற வகையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த அரசு பதவியேற்றது 30-6-77 அன்றுதான். அதற்குள் தேர்தலை நடத்தியிருக்கவேண்டுமென்பது

1977 ஜூலை 23] [திரு. கா. காளிமுத்து]

இந்த அரசு செய்திருக்கக்கூடியது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த தேர்தலை 6 மாத காலத் திற்கு நீட்டித்திருக்கிறோம் என்றாலும், இந்த 3 மாத காலத்திற் குள்ளேயே தேவைப்பட்டால் அந்தப் பதவிக் காலத்தைக் குறைக் கவும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள்.

6 மாத காலத்திற்கு அவர்களது பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டியதின் காரணம் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பி னர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். வாக்காளர் பட்டியல் களில் பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற சட்டமன்ற வாக்காளர் பட்டியலோடு ஒப்பிட்டுப்பார்த்து குறை களை நீக்கவேண்டிய பணியினை நாம் மேற்கொள்ள வேண்டியிருக் கிறது. அதற்குக் கால அவகாசம் தேவைப்படுகிறது.

சென்னை நகர வாக்காளர் பட்டியலிலேயே பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப் படாமல் விடப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நிறையப் புகார்கள் வந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகமே கூட வாக்காளர் பட்டியலைத் திருத்த வேண்டுமென்ற கோரிக்கை யை எழுப்பியிருக்கிறது என்பதை நான் அறிவேன். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கும், தேர்தலை நடத்த வேண்டுமானால் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கும் கால நீட்டிப்புத் தேவைப்படு கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பணி வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் ஒரு ஐயத்தை—சந்தேகத்தை—பேசிய உறுப்பினர் கள் வெளியிட்டார்கள். இந்த 6 மாத காலத்திற்குள் தேர்தலை நடத்தாமல், மறுபடியும் 6 மாத காலத்திற்குத் தேர்தலைத் தள்ளி வைக்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டாம் என்று தெரிவித்தார் கள். அந்த அச்சம், ஏற்கனவே அப்படிப்பட்ட நடைமுறை இருந்த காரணத்தினால், முன்பு இருந்த அரசு பலமுறை அப்படித் தேர்தலை தள்ளிவிட்டுப் போன காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர்களுக் கேற்பட்டிருக்கக்கூடும். இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலை விரை வாக நடத்துவதற்கு, மக்கள் தீர்ப்பை உள்ளாட்சித் துறைக்குப் பெற்றுத்தருவதற்குரிய முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அருமை நண்பர்கள் பேசிய நேரத்தில் ஆவேசமாக குறிப்பிட்டார்கள். "ஜனநாயகத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் வெகு விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டும். இதற்கு முன்னால் இருந்த அரசு தேர்தலைத் தள்ளிவைப்பதாக அறிவித்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக அன்

றைக்கு எதிர்கட்சியில் இருந்த நீங்கள் அதை எதிர்த்துக் குரல் கொடுத்தீர்கள். நீங்கள் தேர்தலைச் சந்திக்கப் பயப்படுகிறீர்கள் மக்களைச் சந்திக்கப் பயப்படுகிறீர்கள் என்று குரல் கொடுத்தீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்துவிட்ட காரணத்தினால் தேர்தலை வெகு விரைவாக நடத்து வீர்கள் என்று நம்புவதாக'' அருமை திரு. சுப்பு போன்ற வர்கள் தெரிவித்தார்கள்.

நான் மிகத் தெளிவாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். எதிர்கட்சியில் இருந்து அன்றைக்கு நாங்கள் பேசிய நேரத்திலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சி யாக வரும் என்று தெரிந்துதான் நாங்கள் பேசியிருக்கிறோம். மாமியார் ஒரு வீட்டுக்கு மருமகளாக வந்தவள் தான். மருமகள் ஒரு நாள் மாமியாராக ஆகத்தான் போகிறாள் என்பது எங்களுக்கு தெரியும். அந்த அடிப்படையில் ஆளும் கட்சியாக நாங்கள் மாறி னாலும் அதே கொள்கையைப் பின்பற்றுகிற நிலையில்தான் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் குறிப்பிட்டோம். இன்றைக்கு அதில் சுருதி பேதம் நிச்சயமாக இல்லையென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகரசபைத் தேர்தலை, ஊராட்சித் தேர்தலை தள்ளி வைப்ப தற்கு என்ன காரணம் என்பதை முன்னே இருந்தவர்கள் அப் போது அச்சிட்டுக்கொடுத்தார்கள். வறட்சி நிலைமையினால் தள்ளி வைக்கிறோம், வறட்சி நிலைமையினால் தள்ளி வைக்கிறோம் என்பதாக தங்களுக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்ட செல்வாக்கு வறட்சியினால் தள்ளிவைத்தார்கள் என்பதை மன்ற உறுப்பினர் கள் மிக நன்றாக அறிவார்கள்.

ஆக, நான் அவர்கள் மனதைப் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. அடுக்களை நாற்றத்தைப் போக்க முடியாமல் அத்தர் வியாபாரம் செய்யப் புறப்படுகிறார்கள் என்று நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அடிக்கடி சொல் வார்கள். சோற்றில் இருக்கிற கல்லைப் பொறுக்க முடியாதவர் கள் சொக்கநாதர் கோவிலில் இருக்கிற வரிக்கல்லை எடுப்பதற்கு வரிந்து கட்டுகிறார்கள் என்று சொல்வார்கள்.

உள்ளாட்சித் துறையில் அடங்கிய மக்களின் தீர்ப்பைப் பெற தயங்கி, அஞ்சி, அதன் மூலம் தேர்தலைத் தள்ளி வைத்த கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ஜனநாய கத்திற்கு இன்றைக்காவது குரல் கொடுக்ககூடிய அளவில் இருக் கிறார்களே என்பதற்காகப் பாராட்டுகிறேன். அந்தக் கருத்தை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் இருந்து அந்தப் பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற உறுப்பினர்கள் இந்த மசோதாவை வாய்ப்பாக்கிக் கொண்டு சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஏன் சென்னை மாநகராட்சித் தேர்தலை மஸ்டர் ரோல் வழக்கு முடியும் வரையில் தள்ளிப் போட்டீர்கள் என்று கேட்டார்கள். மஸ்டர் ரோல் மோசடி காரணமாகத்தான், அந்தத் தவறு நடந்ததன் காரணமாகத்தான் அன்று சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு கலைக்கப்பட்டது. எந்தக் காரணத்திற்காக, எந்தத் தவறுக்காக, எந்த ஊழலுக்காக, எந்த லஞ்சலாவண்யத்திற்காக அந்தக் குழு கலைக்கப்பட்டதோ அதற்குரிய நடவடிக்கைகள், முறையான பரிகாரம் காணாமல் அவர்களைமேலும் உள்ளே நுழைய அனுமதிப்பது சரியாகுமா என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நடைபெற்றிருக்கிற தவறு சாதாரண தவறு அல்ல. மிகப்பெரிய தவறு. கோடிக்கணக்கான மக்களின் பணம் பாழ்படுத்தப் பட்டிருக்கிறது; ஊழல் பெருச்சாளிகளுக்கு தீனியாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் உறுப்பினர்களுக்கு அந்த அவச்சொல் வரக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அதில் ஏற்பட்டுள்ள ஊழல்களை முழுமையாகக் கண்டுபிடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுதான் வழக்கு தீரும் வரையில் தள்ளி வைக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். மஸ்டர் ரோல் வழக்கு விரைவில் முடிக்கப்படும் என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்து ஒன்றை வலியுறுத்த விரும்புவதற்காக ஏதோ இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இனிதான் நடைபெற வேண்டிய காரியம் என்பது போல் பேசுகிறார்கள். ஊழல் நடைபெற்றதாக அறிந்து அன்றைய அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. ஊழல் வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வழக்குகள் உள்ளே இப்போது புதிதாக யாரும் நுழைய, அதுபற்றி விளக்க நமக்கு சந்தர்ப்பம் இல்லை. அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கில் உட்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் எவ்வளவோ பேர்கள் தேர்தல் நாளைய தினம் நடைபெறுமானால் அதில் ஈடுபட்டு வெற்றி பெற்று வரக்கூடியவர்கள் இருப்பார்கள். வழக்கு முடிந்த பிறகு தான் தேர்தல் என்றால் சம்பந்தப்பட்ட 50 பேர்கள், 60 பேர்கள். அல்லது 100 பேர்கள் தவிர மிச்சமுள்ள பொதுமக்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய முறையில், நியாயம் வழங்காமல் நீட்டிப்பதாகாதா என்பதுதான் எதிர்க்கட்சி சார்பில் இருந்து சொல்லப்பட்டதே தவிர வழக்கோடு இதைச் சம்பந்தப்படுத்துவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இந்த வழக்கில் சம்பந்தப்படாதவர்கள் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வந்து சென்னை மாநகராட்சி நிர்வாகத்தை பொறுப்போடு நடத்த முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் கூட மறுபடியும் தேர்தலில் நிற்கக்கூடும். அதிலும் ஊழலை கலையாகப் பயின்ற சிலர் இனிமேல் இதில் சிக்கிக் கொள்ளாமல் எப்படித் தவறு செய்வது என்பதைப் பற்றிச் சிந்தித்து அவர்கள் செயல்படக்கூடும். அதனால் பொதுமக்களின் பணம் விரயமாக்கப்படும். அந்த நிலையைத் தவிர்க்கத்தான் இந்த அரசு கருதுகிறது.

இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். செலவைக் குறைப்போம் என்று வீர சபதம் எடுத்தீர்களே என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். ஆம். வீர சபதம் எடுத்திருக்கிறோம். ஊழல் செய்தவர்களை, ஊரை அடித்து உலையில் போட்டவர்களை, மக்களின் வரிப் பணத்தைச் சூறையாடியவர்களை, சுரண்டியவர்களை அவர்கள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்து அந்த ஊழல் பெருச்சாளிகளை நீதிக்கு முன்னால் கொண்டு வருவோம் என்று இந்த அரசு வீர சபதம் எடுத்திருக்கிறது, அதை நிறைவேற்றிக் காட்டும் என்பதையும் நான் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : இதே மன்றத்தில்—அதே மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அந்த ஊழலில் சம்பந்தப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதில் தொடர்பு கொண்டவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கோலத்தை மாற்றினாலும், கட்சி மாறினாலும், தப்பித்துக்கொள்ள எந்தெந்த முறைகளைக் கையாண்டாலும் அதை நிச்சயமாக இந்த அரசு அனுமதிக்காது. இந்த அரசை நடத்திச் செல்கிற புரட்சித் தலைவர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள், இரக்க குணம் கொண்டவர்கள் ; ஆனால், ஊழல் பேர்வழிகளின்மேல் கருணை காட்டுவதற்கு, தயவு காட்டுவதற்கு, தாட்சண்யம் காட்டுவதற்கு இந்த அரசு தயாராயில்லை என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-30]

திரு. க அன்பழகன் : வழக்குகள் இருப்பதால்தான் தேர்தலை தள்ளி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வழக்குகள் இருப்பது ஒன்று, தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்பது ஒன்று, இரண்டு பிரச்சினைகளுக்கும் வேறுபாடு உள்ளது.

வழக்குகளைப் பொறுத்தவரை திட்டவட்டமான வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றன. இதற்கு நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழங்கப்பட இருக்கின்றன. அவற்றை வரவேற்கவும் இருக்கிறோம். இன்னொன்று, தொடர்ந்து அதிகாரிகளை வைத்துக் கொண்டே தேர்தல் நடத்தலாமா என்று சொல்லப்படுவது. இவ் விதம் இரண்டு கருத்துக்களைச் சொல்லும்போது, நீதிமன்றத்தின் முன்னால் இருக்கின்ற வழக்குகளைக் காட்டி, அதனால் இப்போது தேர்தலை நடத்த மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது பொருத்தமல்ல, குற்றவாளிகள் எனப்படுவோர் தனியாக நிற்கிறார்கள். ஆகவே, தேர்தலை தள்ளிப் போடுவதற்கு அவர்களை இணைத்துச் சொல்வது பொருத்தமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்ததுபோல், வழக்குகள் போன்றவைகள் இருப்பதால், அதிகாரிகளின்கீழ் நகராட்சி நடைபெறும்போது, நல்லதொரு சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் தேர்தல் தள்ளிப்போட வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே தவிர, வழக்குகள் இருப்பதால் மட்டும் தேர்தலை தள்ளிப்போட வில்லை என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நேரத்தில், அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்துகின்ற பொழுது மக்களுடைய குறைகள் ஓரளவு புறக்கணிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம். ஆனால், பெரியதொரு தீங்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் வேறு வழியில்லாமல், இப்போது தேர்தலைத் தள்ளி வைக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தின் முன்பு உள்ளாட்சித்துறை இன்னும் நெருக்கமாக வேண்டும், ஊராட்சி மன்றத்தின், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்கள் இவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். ஆகவே, இவைகளின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''தமிழ் நாடு 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, மற்றும் பிரிவு 3, பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவை யின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதி காரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத் துக்கொள்ளப் பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் பிரிவு 3, பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும் எனக்கோருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். "ஸ்டேட்மென்ட் ஆப் ஆப் ஜெக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்" என்பதில்

*1977, ஜூலை 14ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1977 ஜுலை 23] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

As it was decided to convert the Coimbatore Municipal Council into a Municipal Corporation

முனிசிபல் கார்ப்பரேஷன் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

It may take some time to take a decision on the conversion of the Coimbatore Municipal Council into a Corporation.

மாநகராட்சி ஆவதற்கு காலதாமதம் ஆகலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. மாநகராட்சியாக ஆக்குகின்ற முடிவு கைவிடப் பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, இப்போது முனிசிபாலிட்டியாக இருப்பது

Before holding elections to Coimbatore Municipal Council, the electoral rolls of the municipality which were last prepared with the 1st January 1974, as qualifying date, will have to be updated by adopting the electoral rolls of the Coimbatore Assembly Constituency.

இதில் "அசெம்பிளி கான்ஸ்டிடீயூன்ஸி" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாநகராட்சி என்று எடுத்துக் கொண்டால், கோயம்புத்தூர் வெஸ்ட், கோயம்புத்தூர் ஈஸ்ட், என்ற இரண்டு பகுதிகளும் இருக்கின்றன. ஆகவே "கான்ஸ்டிடீயூயன்ஸிஸ்" என்று திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வோட்டர் லிஸ்ட்டை அப்டுடேட் ஆக்குவதற்குக் காலதாமதம் ஆகும் என்று சொல்ல முடியாது. இவ்வளவு காலதாமதத்திற்குத் தேவையில்லை. காரணம், சமீபத்தில் தான்பாராளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் இவைகள் நடந்தன. இவைகளில் எல்லாம் ஓரளவு வோட்டர்ஸ் லிஸ்ட் திருத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலுள்ள திருத்தங்களை எல்லாம் குறுகிய காலத்தில் அதாவது ஆகஸ்ட் இறுதியில் செய்து விடலாம் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நானும் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு மூன்று மாதத்திற்குள் இந்தத் திருத்தங்களை எல்லாம் செய்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், கோவை மாநகராட்சியாக ஆக்கப் படுமா? அல்லது முனிசிபாலிட்டியாக இறக்கப்படுமா? அந்த விவரங்களை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏற்கனவே, மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று முடிவு செய்யப் பட்டு, அதற்கான கருத்துக்கள் எல்லாம் கோரப்பட்டு, அதிகாரிகளும் அதற்கான குறிப்புகளையெல்லாம் தயாரித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்

அமைச்சர் அவர்களும் இக்கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு, உடனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, கோவை மாநகராட்சியாக ஆக்கப்படுமா அல்லது முனிசிபாலிடியாக இறக்கப்படுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி என்கிற அடிப்படையில் ஏற்கனவே, அந்த நகராட்சி கலைக்கப்பட்டு, அதற்குத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, அதற்கான வேலைகளும் நிறைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாநகராட்சி என்ற அடிப்படையில் நகராட்சி கலைக்கப்பட்ட காலத்தில், இம்மாதிரியாக ஆக்குவதற்காக அண்டையிலே இருக்கக்கூடிய சிங்காநல்லூர் முனிசிபாலிடியையும், அதற்குச் சுற்றிலும் இருக்கக்கூடிய கணபதிபுரம், சங்கனூர், குனியமுத்தூர், குறிச்சி ஆகியவைகளையும் சேர்த்துக்கொள்ளும் நிலை இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்றதாதலால், அந்த அடிப்படையில் கோவை நகராட்சி, மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேமாதிரி இப்போது தனி அதிகாரிகளின் நேரடியான நிர்வாகத்தில் பல பிரச்னைகள் இருக்கின்றன. குடிநீர் பிரச்னை, மற்றும் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதே நிலை நீடித்தால் அங்குள்ள மக்களுக்குக் கஷ்டங்கள் உருவாகும். அந்த அடிப்படையில், கோவை நகரத்தைச் சுற்றிலும் உள்ள சிங்காநல்லூர் முனிசிபாலிடியோடு, கணபதிபுரம், சங்கனூர், தெலுங்குப் பாளையம், குமரபாளையம், குறிச்சி, குனியமுத்தூர் ஆகிய பஞ்சாயத்துக்களையும் மற்றும் நகரத்தை ஒட்டியுள்ள பஞ்சாயத்துக்களையும் கோவை நகரத்தோடு சேர்த்து, மொத்தம் 12 லட்சம் மக்கள் கொண்ட கோவை மாநகராட்சியாக ஆக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே, கோவையை மாநகராட்சியாக அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவை நகரத்தை மாநகராட்சியாக மாற்றி அமைக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான், மற்ற நகராட்சிகளோடு சேர்க்காமல், தனியாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்கென தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். எந்தெந்த வகையிலே, எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்கான கருத்துக்கள், ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகள் நிறைவு பெற்றபின், கோவை மாநகராட்சியாக மாற்றப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஜூலை 23]

*திரு. துரை முருகன் : இப்போது, இந்தப் புறநகர்ப் பகுதிகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அதன் அடிப்படையிலே மாநகராட்சியாக மாற்றியமைக்கப்பட இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே தனி அதிகாரிகள் போட்டிருக்கிறார்கள். நகரசபைக்கு மட்டும் தேர்தல் நடக்குமானால் பிறகு மாநகராட்சியான பிறகு அதற்கும் ஒரு தேர்தல் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும். புறநகர்ப் பகுதிகளையும் சேர்த்துக் கொண்டு, மாநகராட்சியாக மாற்றிய பிறகு தேர்தல் நடத்தினால் நல்லது. அப்படிச் செய்தால், இன்னும் ஆறு மாதகாலம் ஆனாலும் பரவாயில்லை. அதனால் அரசாங்கத்திற்கும் செலவு கம்மி, மக்களுக்கும் சங்கடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் எந்தெந்தப் பஞ்சாயத்துக்களை அதிலே சேர்ப்பது, எந்தெந்தப் பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்து அவைகளைச் சேர்ப்பதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிவுற்ற உடன் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : கோவை மாநகராட்சியில் சேர்க்கவேண்டுமென்று சிங்காநல்லூர் நகராட்சி, கணபதி பஞ்சாயத்து, குமாரபாளையம், தெலுங்குபாளையம், குறிச்சி போன்ற பல பஞ்சாயத்துக்கள் முன்னாலேயே தீர்மானங்கள் போட்டு நிறைவேற்றியிருக்கின்றன. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் சேர்ந்து 12 லட்சம் மக்கள் இருக்கக்கூடிய மாநகராட்சி என்று ஆக்கினால்தான் அது மாநகராட்சி என்பதற்கு அர்த்தமே தவிர, இப்போது இருக்கக்கூடிய நகராட்சிப் பகுதியை வைத்துக்கொண்டு மாநகராட்சி என்று செய்வது சரியல்ல என்று கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உறுப்பினர் அவர்கள் முதலில் கூறியதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். அதற்கு நான் முதலில் சொன்ன பதிலையேதான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/77) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(இ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1977).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. கூத்தகுடி சு. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். தேர்தல் ஆறு மாதம் ஒத்திப் போடப் படுவதால் பல சிரமங்கள் இருக்கின்றன. அப்படி தேர்தலை நடத்துவதற்கு முன்னுல் சில நடவடிக்கைகளை அரசாங்கம் கவனித்து பரிசீலித்து அதையும் சேர்த்து தேர்தலை நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் பலவற்றைப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அது சம்பந்தமான பல ஆலோசனைகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதையும் மற்றும் புதிய யோசனைகளையும் கணக்கில் எடுத்துச் செய்ய வேண்டும். தேர்தலுக்கு முன்னுல் பெரிய ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக, மூன்ருகப் பிரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கிடையில் சபை முன்னவர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே, கிராமப் புறங்களில் குடி தண்ணீர்ப் பிரச்சினை, சாலை வசதி, சுகாதார வசதி போன்ற இந்தப் பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் அறிந்து எடுத்துச் சொல்ல ஒரு குழு அமைக்கப் போகிருர்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அதனை நடைமுறையில் கொண்டுவர வேண்டும்.

உணவுக் கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் கேட்டிருக்கிறோம். அதே போன்று குடிதண்ணீர்க் கலவரங்கள் தோன்றலாம் என்ற நிலைமை முற்றியிருக்கிறது. மதிப்பிற்குரிய

*1977 ஜூலை 15 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1977 ஜூலை 23] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நெற்குப்பை பேரூராட்சியிலுள்ள நிலை கொண்டு வரப்பட்டு உடனடியாக ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்ட முயற்சி செய்தார்கள். இன்னும் ஓடாத மோட்டார்கள் 75 சதம் இருக்கின்றன. நேற்றுக்கூட மாவட்ட கலெக்டரைச் சந்தித்து விட்டு வந்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்குமானால் அதுபற்றி ஆராய கட்டாயம் ஒரு குழு தேவை. இப்போது மாவட்ட அளவில் குழு அமைத்திருந்தாலும் கிராம அளவில் குழு அமைத்தால்தான் சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவற்றைப் பற்றி கவனித்து எடுத்துக் கூறமுடியும். ஒப்பலாம்பட்டி கிராமத்தில் கடந்த நான்கு மாத காலமாக குடிதண்ணீர் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சபையிலே சொன்னதற்கே இந்த அளவிற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் ஆங்காங்கே உள்ள குடிநீர் பிரச்னை எந்த அளவிற்குத் தீவிரமாக இருக்கும் என்பதைச் சொல்வதற்குத்தான் நான் இதை எடுத்துக் காட்டினேன். 6 மாதம் அவகாசம் வேண்டுமென்று அரசாங்கம் இதிலே சொல்லியிருந்தாலும்கூட இடைக்காலத்திலே ஜனநாயக முறையிலே நடக்கக்கூடிய அளவிற்குக் காரியங்களை ஆற்ற வேண்டும். அப்படிச் செய்தால், இந்த அரசாங்கத்திற்கும் குறை வராது, எல்லாக் கட்சிகளையும் கலந்துகொண்டு செயல்பட்டிருக்கிறோம் என்ற நல்ல எண்ணமும் ஏற்படும்.

இந்தக் கூட்டத் தொடரிலேயே மக்கள் நேரடி ஓட்டுமுறையைக் கொண்டு வருவதற்கான முறையில் ஒரு மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதுதான் கணக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த 6 மாதங்களுக்கு முன்னாலேயே இந்த மசோதா வரக்கூடிய அளவில் அதற்குமேல் நீடிக்காமல் இருக்கக்கூடிய வகையில் கொண்டுவரப்பட வேண்டும். நான் இங்கே பேசுகிற வரையில் என்னுடைய பேச்சில் குறுக்கீடு இல்லாமல் இருந்தது, யார் பேசினாலும் சில பேர்கள் குறுக்கிடுவார்கள். ஆனால் என்னுடைய பேச்சில் குறுக்கிடாமல் இருந்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையிலே குறுக்கீடுகளுக்கு எல்லையோ வரைமுறையோ இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். அந்த வகையில் என்னுடைய பேச்சிலே குறுக்கீடு இல்லாமல் இருந்தது, அதற்காக வழிகாட்டக்கூடிய முறையில் சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள், அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : ஒரு விளக்கம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கீடு இல்லை என்று சொன்னீர்கள், இதோ வருகிறது குறுக்கீடு. சொல்லுங்கள்.

திரு. துரை முருகன்: இங்கே உறுப்பினர் மசோதாவின்மீது பேசுகிறாரா அல்லது சபாநாயகருக்கு பாராட்டுக் கூட்டம் போடுகிறாரா?

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: இதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளாததற்கு வருந்துகிறேன். இந்தச் சபையிலே பேசுகின்றபோது தொடர்ந்து குறுக்கிடுகிற நிலைமையை சிலர் ஏற்படுத்துகிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களை குறுக்கிடுகிறபோது அப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தலாம், ஆனால் எங்களை—நாங்கள் பேசும்போது குறுக்கிட்டு—தடுத்து நிறுத்திவிடலாம் என்று யாராவது நினைப்பார்களானால் அவர்கள் நிச்சயமாகத் தோல்வி காண்பார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே நாங்கள் கருத்துக்களைச் சொல்கிறபோது தலையிடவேண்டாம். அந்த மாதிரியில்லாமல் ஆளுங்கட்சி உறுப்பினர்களை அணுகுவது போல எதிர்க்கட்சி உறுப்பினர்களை அணுகினால் வேறு முறையான நிகழ்ச்சிகள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்).

திரு. துரைமுருகன்: வேறு நிகழ்ச்சிகள் இந்தச் சபையில் உருவாகும் என்று சொல்கிறார்கள், சாதாரணமாக ஒரு உறுப்பினர் பேசும்போது இன்னொருவர் குறுக்கிடும்போது பேசுகின்ற உறுப்பினர் யீல்ட் ஆனால் அவர் குறுக்கிடலாம், அதுபோல் பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து குறுக்கிடலாம், இது எல்லாம் சட்டமன்ற நடைமுறைகள். ஆகவே குறுக்கிடக்கூடாது என்பது சட்டமல்ல. வேறு மாதிரியான நிகழ்ச்சிகள் உருவாகும் என்று பயமுறுத்துகிற நிலைமையில் அவர்களுடைய பேச்சு இருக்கிறது, கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு வழங்கவேண்டும்

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அவர்கள் கையாள்கிற முறையை நாங்கள் கையாள்வோம், நீங்கள் தலையிட்டால், நாங்களும் தலையிடுவோம் என்றுதான் சொன்னேனே தவிர, வேறுவிதமான நிகழ்ச்சிகள் என்று இதைத்தான் நான் சொன்னேன். ஆகவே இந்தக் குழு அமைத்து காரியங்களைச் செய்ய இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1977 ஜூலை 23]

திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதாவின் பேரில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது நாட்டிலே இருக்கக்கூடிய டவுன் பஞ்சாயத்துக்களிலே அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்கூட பணம் இல்லாமல் பற்றுக்குறை இருக்கிறது. வருமானம் சம்பளம் கொடுப்பதற்கே பற்றுகிறது, அபிவிருத்தி வேலைகளைச் செய்யக்கூடிய நிலைமையில் இல்லாத டவுன் பஞ்சாயத்துக்கள் பல இருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு வருவாய் இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு ஏதாவது அரசாங்கத்திலிருந்து ஒரு மானியம் கொடுக்கக்கூடிய அளவிலே வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல கிராமங்களிலே மின்சார விளக்கு எரிந்து கொண்டு இருக்கின்றது. ஆனால் பல இடங்களிலே எரிவதில்லை. ஆனால் பணம் கொடுக்கும்போது பூராவுக்கும் சேர்த்துத்தான் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, கிராமப் பகுதிகளிலே தனி மீட்டர்கள் ஏற்படுத்தி உண்மையிலேயே எவ்வளவு கரண்ட் செலவாகிறதோ அதற்கு மட்டும் பணம் வசூலிக்கவேண்டும்.

பல கிராமங்களிலே குடிநீர்த் திட்டம் இருக்கிறது. இருந்தாலும் அவை பழுதுபட்டுவிட்டால் சரி பார்ப்பதற்கு மெக்கானிக்குகள் இல்லை. பல கிராமங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு மெக்கானிக் தான் இருக்கிறார். அதனால் குடிநீர் திட்டங்கள் சரிவரச் செயல்படவில்லை.

(முற்பகல் 11-50)

ஆகவே, ஒவ்வொரு இடத்திலும், எந்தெந்த இடத்திலே, ரிப்பேர் ஏற்பட்டாலும் உடனடியாகச் சென்று செம்மைப்படுத்தத் தகுந்த மெக்கானிக்குகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, ஊராட்சிகள் பதவிக்கால நீட்டிப்பு திருத்த மசோதாவின்மீது ஒருசில கருத்துக்களை நான் கூற முற்படுகிறேன்.

அவற்றின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கின்ற காரணம் சரியாக இல்லை என்றுதான் கருதுகிறேன். ஏனென்றால் மூன்று மாத காலத்துக்குள்ளே அரசு நினைத்தால் தேர்தலை நிச்சயமாக நடத்த முடியும். ஆறு மாத காலம் என்று நீட்டித்திருப்பது பொருத்தமாக இல்லை. பொதுவாக மக்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கவர்னர் பெருமானுடைய உரையைப் படித்தவுடன் நிச்சயமாக ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் விரைவாக வரும் என்ற எண்ணத்தோடு இருக்கிறார்கள்.

ஆனால் நான் ஊருக்குப் போய்விட்டுத் திரும்பவும் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வந்தபொழுது இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆறு மாத காலம் என்று நீடித்திருப்பதைக் குறுக்கி மூன்று மாதங்களிலே தேர்தலை நடத்துவதற்கு முற்படுவதுதான் முறையாக இருக்கும். ஏனென்றால் ஊராட்சி ஒன்றியங்களின் கமிஷனர்கள் தனி அதிகாரிகளாக இருந்து பணியாற்றுகிறார்கள்.

பொது மக்களுடைய குறைகள் பல தீர்க்கப்படாமல் இருக்கின்றன. தனி அதிகாரிகள் தாங்கள் என்ன எண்ணுகிறார்களோ அதுதான் நடந்து கொண்டிருக்கிறதே தவிர, இந்த இடத்திலே கிணறு வேண்டும் என்று கேட்டால்கூட தருவதில்லை. அவர்களிடம் சென்று நேரில் ரோடு வேண்டும், தொட்டி கட்ட வேண்டும், கிணறுகளைத் தோண்ட வேண்டுமென்று பொது மக்கள் கேட்டால்கூட அவைகளெல்லாம் வருவதில்லை. தனி அதிகாரி என்ன நினைக்கிறாரோ அப்படித்தான் நடக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்னொரு பெரிய பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. முந்தைய அரசுக் காலத்திலேயே சட்டமன்றத்தில் இந்தப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறோம். அங்கே பஞ்சாயத்துக்களைப் பிரிவினை செய்யும்பொழுது ஒழுங்காக அவை பிரிக்கப்படவில்லை. வருமானத்தை அடிப்படையாக வைத்துப் பிரிக்கப்படாத காரணத்தால் பல பஞ்சாயத்துக்களின் வருமானத்தைக் கொண்டு, மின் கட்டணம்கூடச் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. நகரப் பஞ்சாயத்துக்களின் ஊழியர்களுக்குச் சம்பளம்கூடக் கொடுக்க முடியவில்லை. அந்த அளவிற்கு வருமானத்தை அடிப்படையாக வைத்துப் பஞ்சாயத்துக்கள் பிரிவினை செய்யப்படவில்லை.

சென்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்தின்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தெள்ளத் தெளிவாகச் சொன்னார். தச்சம்பறம்பு என்ற பஞ்சாயத்து தற்போது கிராமப் பஞ்சாயத்தாக இயங்குகிறது. அந்தப் பஞ்சாயத்திலே இருக்கின்ற தனி ஒருவரைக் கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக ஆக்கவேண்டுமென்ற காரணத்திற்காக நகர பஞ்சாயத்து ஆவதற்குள்ள எல்லாத் தகுதிகளும் அந்தப் பஞ்சாயத்துக்கு இருந்தாலும் அதையெல்லாம் கவனிக்காமல் இரண்டு தெருக்களை மையமாக வைத்து அந்தப் பஞ்சாயத்துப் பிரிவினை செய்யப்பட்டது. அங்கே சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஹைஸ்கூல்

1977 ஜூலை 23] [திரு. எ. சுவாமிதாஸ்]

இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் அலுவலகம் இருக்கிறது. பெரிய போஸ்டாபீஸ் இருக்கிறது. இன்னும், சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ் இருக்கிறது. இப்படி எந்தத் துறையிலே எடுத்தாலும் நகரப் பஞ்சாயத்தாக அன்றே பிரித்திருக்க வேண்டும். ஆனல் அப்படிச் செய்யவில்லை. அதற்கு நேர்மாருக எந்த வசதியும் இல்லாத, பள்ளிக்கூடம் கூட இல்லாத ஒரு பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்தாக மாற்றப் பட்டிருக்கிறது.

இப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தப் பகுதியாக இருந்தாலும் நகரப் பஞ்சாயத்தாக ஆவதற்குத் தகுதியுள்ளவை கிராமப் பஞ்சாயத்துக்களாகவும், கிராமப் பஞ்சாயத்தாக இருக்கத் தகுதியுள்ளவை நகரப் பஞ்சாயத்துக்களாகவும் மாற்றப்பட்டிருப்பதால் ' வயபில் ' ஆக இல்லை. அடுத்த தேர்தல் வருமுன் அரசு இதிலே கவனம் செலுத்தி பஞ்சாயத்துக்களைத் திருத்தியமைக்க வேண்டும் வருமானத்தின் அடிப்படையிலே. இப்பொழுது உடனடியாக அந்தப் பணியைத் தொடங்கினல்தான் முடியுமே தவிர தேர்தலை அறிவித்துவிட்டு மாற்றலாம் என்றல் முடியாது, முன்னலேயிருந்தபடியே தான் நடத்த வேண்டியிருக்கும். அப்படி நடத்தினல் பஞ்சாயத்து சரிவர வேலை செய்ய முடியாது. மற்ற இடங்களில் இருப்பதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. அங்கேயிருக்கின்ற பஞ்சாயத்துக்களை வருமானத்தின் அடிப்படையில் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நேரடித் தேர்தலைப் பற்றி சொன்னர்கள். நேரடித் தேர்தல், பஞ்சாயத்து ஒன்றிய தலைவருக்கோ அல்லது நகரசபை தலைவருக்கோ வருவதைப் பொதுமக்கள் வரவேற்கிறர்கள். ஏனென்றல் தற்போது இருக்கிற தேர்தல் முறைப்படி சாக்குப் போட்டு பிடிக்கிற வேலைகள் எல்லாம் நடக்கும். தலைவராக இருக்கிறவரை கட்சிக்காரர்கள் 10 பேர் ஒரு பக்கம், 15 பேர் ஒரு பக்கம் என்று குற்றலத்திற்கு அல்லது திருவனந்தபுரத்திற்கு அழைத்துக்கொண்டு போகிற முறைகள் இருக்கும். அந்த முறைகள் மாற்றப்பட்டு தேர்தலை நடத்த வேண்டுமென்று மக்கள் விரும்புகிறர்கள். சாக்குப் போட்டு பிடிக்கிறமுறை இருக்கக்கூடாது என்பதற்காக, இதிலே என்ன சட்டச் சிக்கல் இருந்தாலும், அவற்றைத் தீர்த்து, கவர்னர் உரையிலே குறிப்பிட்டதைப் போல் நேரடியாகத் தலைவர் தேர்தலை நடத்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தக்கலை ஒன்றியத்தைப் . பொறுத்தவரையில் அங்கே பணியாற்றுகிற கமிஷனரைப் பற்றி சொல்லப் போனல் கீழே இருக்கிற பஞ்சாயத்துத் தலைவராகட்டும், நகரப் பஞ்சாயத்துத்

தலைவராகட்டும் தங்கள், தங்கள் பகுதிகளுக்கு இன்னின்ன நன்மைகள் வேண்டும், அல்லது ஒரு கிணறு வேண்டும் என்று சொன்னால், கேட்பதே கிடையாது. எமர்ஜென்ஸியில் அதிகாரம் கொடுத்ததால், * * போல் பணியாற்றுகிறார். நான் வேதனையோடு சொல்கிறேன். யார் என்ன சொன்னாலும் செய்ய மாட்டார். மக்கள் என்ன நினைக்கிறார்கள், மக்களுடைய பிரதிநிதிகள் என்ன கருதுகிறார்கள், எந்த இடத்திலே எது அமைத்தால் நன்றாக இருக்கும் என்று பார்ப்பதில்லை.

அவர் * * * போல் பணியாற்றுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியே இருக்கிறவரை இங்கே உதாரணம் காட்டிப் பேசவேண்டாம். * * * போல் என்று உதாரணம் காட்ட வேண்டாம். கனம் உறுப்பினர் வெளியிலே இருக்கிற உறுப்பினரைப் பற்றி அவையிலே பேசக் கூடாது. * * * போல் என்று பேசியதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: பஞ்சாயத்துக்களுக்குக் கூடுதல் மானியம் ஒதுக்கி, குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. முதல் திட்டமாகக் குடிநீர் வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பஞ்சாயத்துக்களுக்கும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் அதிக நிதியை ஒதுக்கி, குடிநீர் அளிக்கவேண்டும். இப்பொழுது கூட குடிநீர் வாரியம் எல்லாம் அமைத்து குடிநீர் கொடுக்க முற்படுகிறோம். குழாய்க் கிணறு போடுவதாலே நடைமுறையிலே பார்த்தால் முழு வெற்றி கிடைக்காது என்றுதான் கருதுகிறேன். 100 குழாய்க் கிணறுகளைப் போடுவதால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வரும் நிதிநிலை அறிக்கை விவாதத்திலே நிறைய பேசலாம். ஒவ்வொரு பஞ்சாயத்தையும் எடுத்துக்கொண்டால் நிறையப் பேசலாம் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எ. சுவாமிதாஸ்: ஆகவே, 6 மாத காலம் என்று நீட்டிக்கொடுப்பதை 3 மாத காலம் என்று சுருக்கிக் கொடுத்து, விரைவிலே தேர்தலை நடத்த இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-55 நண்பகல் 12-00 மணிக்குள் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1977 ஜூலை 23]

* திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் 6 மாதம் நீட்டிப்புக் கொடுப்பதற்காக வந்திருக்கும் சட்டத் திருத்தத்தின் மீது சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், நம்முடைய தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபொழுது அவர்தான் அந்த அமைச்சர் பொறுப்பை வைத்திருந்தார். கிராமங்களுடைய பொறுப்பை முதலமைச்சர் வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் திறமைக் குறைவானவர் என்று சொல்கிறேன் என்று அர்த்தம் அல்ல. மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து முனிசிபாலிட்டிகளையாவது பிரித்துக் கொடுத்துவிடுவது நல்லது என்பது என்னுடைய கருத்து. 100 முனிசிபாலிடிகள் உள்ளன. கார்ப்பரேஷன்கள் எல்லாம் தொந்தரவு உள்ளவை. 13,000 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒரு அமைச்சர் முழுமையாகச் செயல்பட வேண்டுமானால் அவற்றிற்கு மட்டுமே அவர் அமைச்சராக இருக்கவேண்டும். அந்த ஆலோசனையை அமைச்சர் அவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தக் கிராமங்களுக்கான பொறுப்பை முதலமைச்சர் வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும், அல்லது நிதி அமைச்சர் வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால் பணம் வேண்டும் அருமை நண்பர் கூத்தங்குடி சண்முகம் அவர்கள் சொன்னபோது, எங்கள் மாவட்டத்தில் குடிதண்ணீருக்காக கிளர்ச்சி ஏற்பட்டு போராட்டம் நடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[(நண்பகல் 12-00.)

இந்த ஊராட்சி ஒன்றியங்களில் மக்களாட்சி நிர்வாகம் இல்லாததால் எந்த விதமான கேள்வி கேட்பார் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் முக்கியமான காரியம் என்னவென்றால் நம் நாடு Four pillar state என்று சொல்வார்கள். பாராளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றம் ஆகிய நான்கு தூண்களாகக் கட்டப்பட்டது நமது ஜனநாயகம். இப்போது மூன்று தூண்கள் தான் இருக்கின்றன. ஒரு தூண் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. இன்னும் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சியிலே ஒன்றியத் தலைவர்களை நீக்கினார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சி இருக்கும்போது பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஊழல் அதிகமாக இருக்கிறது என்று நீக்கினார்கள். அதை இவ்வளவு தள்ளிப் போட்டிருக்க வேண்டியதில்லை. இப்போது

அகில இந்திய அண்ணு தி.மு.க. ஆட்சி வந்த பிறகு இன்னும் ஒரு 6 மாதம் தள்ளிப் போடுவது ரொம்பத் தப்பு என்பது என்னுடைய கணிப்பு.

பிப்ரவரி 1ஆம் தேதிக்குள் எப்படித் தேர்தல் நடத்த முடியும்? இனிமேல் வரப்போவது மழை காலம். விவசாயிகள் இப்போதுதான் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இன்னும் 4, 5 மாதம் விவசாயிகளுக்கு மிகுந்த வேலை இருக்கும். இன்னும் ஒரு 6 மாதம் தள்ளிப் போட்டாலும் நடத்த முடியாது என்று கருதுகிறேன். தை மாதம் அறுவடை நேரம். விவசாயிகள் தயாராக இருக்க மாட்டார்கள். ஆகவே, நீங்களும் இன்னும் 6 மாதம் தள்ளிப் போடுவீர்கள். குறைந்த பட்சம் 3 மாதமாவது தள்ளிப் போடுவீர்கள் என்று சந்தேகப்படுகிறேன். ஆகவே தேர்தலை சீக்கிரத்தில் நடத்தினல் உங்களுக்கு நல்லது. ஏனென்றால் நீங்கள் கொஞ்சம் பேர், நாங்கள் கொஞ்சம் பேர், தி.மு.க. கொஞ்சம் பேர் பகிர்ந்து வருவோம். இல்லை என்றால் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நாங்களே ஆட்சிக்கு வரக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். அதற்கு வழி வகுக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியங்களில் இன்றைக்கு நடக்கின்ற கொடுமைகளைப் பார்க்கிறபோது—ஆசிரியப் பெருமக்கள் மிகுந்த அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் இல்லாததால் ஆசிரியர்களை அவர்கள் இஷ்டத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். பல ஆசிரியர்கள் வேதனையோடு சொன்னார்கள். கொஞ்சம் பொறுங்கள். தேர்தல் வரும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது நீங்கள் ஒரு உத்திரவு போட்டால் நலமாக இருக்கும். ஊராட்சி ஒன்றிய தலைவர் இல்லாத நிலையில் ஆசிரியர்களை கண்டிப்பாக மாற்றுமல் இருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டால் நல்லது.

என்னைப் போன்றவர்கள் எல்லாம் ஊராட்சி சேர்மனுக இருந்தவர்கள். ஆசிரியர்கள் நிலைமையை நன்றாக தெரிந்து முறையாக மாற்றி வந்திருக்கிறோம். இப்போது ஏகப்பட்ட ஊழல்கள் நடக்கின்றன. அதையெல்லாம் பார்த்து செயல்பட வேண்டியிருக்கிறது. டவுன் பஞ்சாயத்துக்களில் அதிகமான கொடுமைகள் நடக்கின்றன. கடை நிலை ஊழியர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு சம்பளம் கொடுப்பது இல்லை. 3 மாதம் 6 மாதம் கூட சம்பளம் கொடுப்பது இல்லை. அவர்களுக்கு சம்பளமும் குறைச்சல் அவர்கள் கொத்தடிமைகளைப் போல் இருக்கிறார்கள். வட்டிக்கு அவர்களை கசக்கிப் பிழிகிறார்கள். நகர சுத்தி தொழிலாளிகள் ரொம்பவும் வறுமையால் வாடுகிறார்கள். அதை உடனடியாக உத்தரவு போட்டு, எக்காரணத்தை முன்னிட்டும்

1977 ஜூலை 23] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

யார் சம்பளம் வாங்கினாலும், வாங்காவிட்டாலும், நகர சுத்தி தொழிலாளர்களுக்கு ஒண்ணும் தேதி சம்பளம் கொடுக்க உத்தரவிடவேண்டும்.

அதே மாதிரி, சலவைத் தொழிலாளிகள், அவர்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் பகுதியைச் சொல்லுகிறேன். அவர்களுக்கு உடனடியாக ஒரு 'புரொவிஷன்' ஏற்படுத்தி கிணறு தோண்டி மோட்டார் போட்டு தண்ணீர் கிடைக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் பெரியதாக இருக்கின்றன. உதாரணமாக, கடலாடி, கமுதி ஆகியவை இரண்டும் பெரிய ஒன்றியங்களாகும். 60-ம் 60-ம் 120 பஞ்சாயத்துக்கள் சேர்ந்துள்ளன. அதை மூன்றாகப் பிரிக்கவேண்டும்.

அதே மாதிரி புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் யூனியனில் 100 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதையும் பிரிக்கவேண்டும்.

அத்தோடு போகளூர் பஞ்சாயத்து யூனியன் 64 பஞ்சாயத்து கொண்டது. பஞ்சாயத்து யூனியன் கூட்டம் நடத்தும்போது பெரிய சட்டமன்றம் நடக்கின்ற மாதிரி இருக்கும். இந்த 6 மாதங்களில் மக்கள் ஆட்சி அமைப்பில் மாற்றம் கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறார்கள். இது நல்ல திட்டம்.

இந்த மாற்றத்தில் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களை அழைத்து என்னென்ன கஷ்டம் இருக்கிறது. அவற்றைத் தீர்க்க என்னென்ன வழி என்று தெரிந்து காரியங்களைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லை என்றால் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தை நடத்த முடியாமல் போய்விடும். சேர்மன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். அவருக்கு விரோதமானவர்கள் ஒன்றிய உறுப்பினர்களாக வந்திருப்பார்கள். ஆகவே, எங்களைப் போன்றவர்களோடு கலந்து பேசி முடிவெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்து என்னவென்றால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு அட்வைசரி கமிட்டி போடவேண்டும் திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள், கூத்தக்குடி சண்முகம் சொன்னார்கள். நீங்கள்தான் அதிக எம். எல். ஏக்களாக வந்திருக்கிறீர்கள். ஆகவே, ஒரு அட்வைசரி கமிட்டி போட்டு கிராம மக்களுக்கு நல்லது செய்யுமாறு கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பி. எஸ். திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்த மசோதாமீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் பாதிக்கபட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் வேளாண்மை, கால்நடை, கல்வி போன்ற துறைகளில் கிராம மக்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற வசதிகளைக்கூடச் செய்ய முடியாத நிலையில், 6 மாத காலமாக ஒன்றியக் குழுக்கள் இல்லாத காரணத்தினால் எந்தப் பணியும் செய்யவில்லை. ஆகவே, இவற்றுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பல்வேறு ஊராட்சி மன்றங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை அரசினிடத்தில் இருக்கின்றது. அவற்றை கவனித்து ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு முன்னால் ஊராட்சி மன்றங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருந்தும், தலைவர்கள் இருந்த காலத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வந்தன. பல்வேறு பிரச்சினைகள் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மாவட்ட அதிகாரிகளிடத்திம் எடுத்துச் சொல்லி, கலந்து உரையாடி, அவற்றை தீர்ப்பதற்கு முடிந்தது. இப்போது மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படவில்லை என்று சொன்னாலும், ஒன்றியப் பெருந்தலைவர்கள் வரும் வரையிலாவது அந்த அந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு வழி காணவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் ஊராட்சி மன்றங்களில் குடி தண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருந்து வருகின்றது. அதிகாரிகளைக் கலந்து பேசுகின்ற நேரத்தில் நிதி நிலை சரியில்லை என்று சொல்லுகிறார்கள். முன்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியைப் பெற்று, ஒன்றிய நிதியில் இருந்து இப்படிப்பட்ட அத்தியாவசியமான காரியங்களுக்குச் செலவு செய்து வந்தோம். குடி தண்ணீர் பிரச்சினையைப் போக்க பல காரியங்களைச் செய்துவந்தோம்.

1977 ஜூலை 23] [திரு. பி. எஸ். திருவேங்கடம்]

ஆனால் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது தமிழ் நாட்டிலுள்ள ஒன்றியங்களுக்கு ஒரு திடீர் உத்தரவைப் போட்டார்கள். ஒரு லட்சம் ரூபாய் வரையில் நிதியை எந்தக் காரணத்தை முன்னிட்டும் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடக் கூடாது என் உத்தரவு அளித்தார்கள். பிறகு, ஒரு வரா காலத்திற்குள் ஒரு லட்சம் என்பதை மாற்றி 3 லட்சம் வரையில் வளர்ச்சிப் பணிகளுக்காக ஒன்றிய நிதியை செலவு செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

ஏற்கனவே இப்படிப்பட்ட வறட்சிக் காலத்தில், அரசிடம் இருந்து நிதி உதவி வருவதற்குக் காலதாமதம் ஆகிற கரா ணத்தினால், ஒன்றிய நிதியில் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவ ரின் அனுமதியைப் பெற்று குடி தண்ணீர் வழங்குவதற்கு செலவு செய்து வந்தோம். கவர்னர் ஆட்சியில் இது போலச் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். தற்சமயம்கூட குடிதண்ணீர் திட்டங்களுக்காக அரசு ஒதுக்குகிற நிதி வருவதற்கு கால தாமதம் ஆகிறது. எனவே இடையில் போட்ட உத்தரவை நீக்கி, முன் போலவே ஒன்றிய நிதியில் இருந்து வளர்ச்சிப் பணிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் செலவு செய்ய உத்தரவிடவேண்டும். கிணறுகளை ஆழப்படுத் துவது, போட்டிருக்கின்ற ஹேண்ட் பம்ப் மின்சார மோட் டார்களை ரிப்பேர் செய்வது போன்ற அத்தியாவசியமான காரி யங்களுக்கு ஒன்றிய நிதியைப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. ரா. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒன்று உப்பிலியாபுரம் ஒன்றியம், மற்றொன்று துறையூர் ஒன்றியம், இந்த இரண்டு ஒன்றியங் களிலும் கடந்த ஐந்தாறு வருஷங்களாக மழை இல்லை. அங்கு போன வருஷமே வறட்சிப் பணிகள் எடுத்துக் கொள்ளப் பட்டது. இந்த வருஷமும் வறட்சிப் பகுதியாக அது ஆகியிருக் கிறது.

(பிற்பகல் 12-10)

ஏனென்றால் அங்குள்ள மக்களுக்கும் கஷ்டம், சாப்பாட் டுக்கும் கஷ்டம். அங்கு குடிப்பதற்கு தண்ணீர் வேண்டுமா னாலும் கிடைக்க கஷ்டமாகயிருக்கிறது. காரணம், சிறு சிறு பஞ்சாயத்துக்களில் போதிய அளவிற்கு வருவாய் இல்லை.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கீரம்பூர், செங் காட்டுப்பட்டி, , மருவத்தூர் பட்டி, முருங்கப்பட்டி போன்ற சிறு சிறு பஞ்சாயத்துக்களில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை.

[திரு. ரா. பெரியசாமி] [1977 ஜூலை 23

அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்களை மக்கள் அறுகி கிணறு கூட வெட்ட முடியவில்லையா என்று கேட்டால் அவர்கள் முழிக்கிறார்கள். ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஆணையர் தக்க பதில் சொல்வதில்லை.

எங்கள் பகுதியில் குழாய்க் கிணறுகள் இருக்கின்றன. தண்ணீர் இருந்தும், குழாய்க் கிணறுகள் ரிப்பேராகி இருப்பதால் தண்ணீர் கிடைப்பதில்லை. நான் வோட்டுக் கேட்கப் போனபோதும் தண்ணீர் கிடைக்கவில்லை. நன்றி சொல்ல 15 நாட்கள் கழித்து சென்றபோதும் அதே நிலைதான் இருக்கிறது. இது பற்றி திருச்சி மாவட்டத்திலுள்ள அதிகாரிகளை நேரில் அணுகியும் சொன்னேன், தபால் மூலமும் சொன்னேன். உடனடியாக செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர தண்ணீர் பிரச்னை தீருவதாக இல்லை.

பச்சபெருமாள்பட்டி, கீரம்பூர், செங்காட்டுப்பட்டி போன்ற ஊர்களில் தண்ணீர் பிரச்னை தீர்ந்தபாடில்லை. என் பஞ்சாயத்தில் நான் 1958-ல் இருந்து ஊராட்சித் தலைவராக இருந்து வருகிறேன். அது ஊராட்சியாக இருந்து பேரூராட்சியாக மாறியிருக்கிறது. எங்கள் ஊரில்—பாலகிருஷ்ணம்பட்டி, விசுவம்பால சமுத்திரத்தில் குழாய்க் கிணறு ரிப்பேராகி விட்டது. அங்குள்ள ஈ. ஓ. மற்றும் கிளார்க்கு இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்திக்கச் சொல்லி அவர்களும் சென்று நாலைந்து தடவை சந்தித்தும் பயனில்லை. அனுப்பிவிட்டோம் என்று சொல்கிறார்களே தவிர வேறொன்றும் செய்யவில்லை. சிறு ரிப்பேராக இருந்தால் அங்குள்ள மெக்கானிக் தெரிந்தவர்களை வைத்து செய்து விடுகிறோம். பெரிய ரிப்பேராக இருந்தால் வெளியில் இருந்து ஆள்கள் வந்துதான் செய்யவேண்டியிருக்கிறது.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், ஒவ்வொரு யூனியனுக்கும் குழாய்க் கிணறுகளில் எந்த ரிப்பேர் வந்தாலும் அதைச் சரிப்படுத்த ஒரு நபரை நியமித்து ஆணையரிடம் ஒப்படைக்கவேண்டும். குழாய்க் கிணறுகளை சரியான சமயத்தில் ரிப்பேர் செய்தால் இருக்கிற தண்ணீராவது மக்களுக்குக் கிடைக்கும். அதையாவது கண்ணீர் சிந்தாமல் குடிப்பார்கள்.

நம்முடைய அரசு ஏதேதோ செய்கிறது என்று பூரிப்போடு சொன்னாலும் எங்கள் பகுதியில் கேணி வெட்டினாலும், மக்களின் கண்ணில் தான் தண்ணீர் வருகிறதே தவிர கிணற்றில் ஊற்று வருவதில்லை.

1977 ஜூலை 23] [திரு. ரா. பெரியசாமி]

உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் வைரிசெட்டிபாளையம் பஞ்சாயத்தில்—இரவு பத்து மணிக்கு மேல்தான் கரெண்ட் கொடுக்கப்படுகிறது. தண்ணீருக்காக மக்கள் சாரிசாரியாக நிற்பதை பார்க்கலாம். அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தால் அது தெரியவரும். அங்குள்ள பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனால் கேணி வெட்டுவதற்கும் முடியவில்லை, இருக்கிற தண்ணீரையும் எடுத்துக்கொடுக்க முடியவில்லை.

எங்கள் பகுதி கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள பஞ்சாயத்து, இதுவரை தண்ணீர் பிரச்னையே கிடையாது. இப்போது என் பகுதியில் உள்ள சிறு சிறு ஊர்களில் கூட தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. ஆகவே, எங்கள் பகுதியில், வரட்சிப் பகுதியாக இருப்பதால், கிணறுகளை ஆழபடுத்தி மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அடுத்து, துறையூர் நகரப் பஞ்சாயத்தாக இருந்ததை முனிசிபாலிட்டியாக ஆக்கி விட்டது அதாவது இதற்கு முன்னால் இருந்த அரசு இருந்தபோதே முனிசிபாலிட்டியாக ஆக்கி விட்டது. அதன்பிறகு துறையூரில் உள்ள மக்கள் ஏறத்தாழ 20 ஆயிரம், 30 ஆயிரம் மக்கள் இருக்கின்ற இந்த நகரத்தில் இன்னும் சரியாக குடிதண்ணீர் வசதியில்லை. இதற்கு முன்னால் இருந்த அரசு எல். ஐ. சி. இடமிருந்து கடன் வாங்கி ஒரு வாட்டர் டாங்க் கட்டி திறப்பு விழாவும் நடத்தினார்கள். அவர்கள் திறப்பு விழா நடத்தினார்களே ஒழிய இன்னும் சரியாக தண்ணீர் வரவில்லை. துறையூர் பகுதியில் தண்ணீர் கஷ்டம் நீண்டகாலமாக அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. சுற்றுப்பக்கத்திலுள்ள பகுதிகளிலுள்ள குழாய்க் கிணறுகளில் தண்ணீர் கிடைக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு மூன்று குழாய்க் கிணறுகளில் தண்ணீர் வருகிறது. ஆகவே, சுற்றும் பக்கத்து பகுதிகளில் இன்னும் அதிகமாக குழாய்க் கிணறுகளை ஏற்படுத்தி அதன் மூலம் டாங்குக்கு தண்ணீர் எடுத்து விட்டால் அங்கு கூடிய விரைவில் தண்ணீர் கிடைக்கும்.

இதற்கு முன்னால் இருந்த அரசு கொல்லிமலையின் அடிவாரத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கு ஆய்வு எல்லாம் நடத்தினார்கள். ஆனால் இவை எல்லாம் இன்னும் நடைபெறவில்லை. இன்னும் அங்கு தண்ணீர் இல்லாமல்தான் இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலிருக்கின்ற காவேரி அருகில் குணசீலம் போன்ற இடங்களில் இரண்டு மூன்று கிணறுகளை ஏற்படுத்தினால், துறையூர் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ரா. பெரியசாமி] [1977 ஜூலை 23

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கொல்லிமலை அடிவாரத்திலும் ஆடி, ஆவணி மாதங்களில் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே காவேரி ஆற்றின் பக்கத்தில் ஆழ் குழாய் கிணறுகள் ஏற்படுத்தி அதன் மூலம், தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்தால், துறையூர் மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். துறையூரிலுள்ள மக்களும் பக்கத்திலுள்ள பட்டிக்காட்டு மக்கள் எல்லோரும் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், துறையூர் பகுதியில் நெசவாளர்கள் இருக்கக் கூடிய இடங்களில், நெசவாளர்கள் மிகவும் கஷடத்தோடு வேலை செய்து வருகிறார்கள். மாதம் 100, 150 ரூபாய்தான் அதன் மூலம் கிடைக்கிறது. இவர்கள் தங்கள் வேலை முடிந்த பின்னால் குளிப்பதற்கோ குடிப்பதற்கோ தண்ணீர் வசதியில்லாமல் பக்கத்தில் இரண்டு மூன்று மைல் தூரம் சென்றுதான் தண்ணீர் கொண்டு வரவேண்டும். அங்கு விவசாயத்திற்கு என்று இருக்கின்ற தண்ணீரை எடுக்கப்போனால் விவசாயிகள் சண்டை போடுகிறார்கள். இதனால் இவர்களுக்குள் ஏச்சும் பேச்சும் ஏற்படுகிறது. இப்படி அல்லல் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

குறிப்பாக, நெசவாளர்கள் காலை ஆறு மணிக்கு தங்கள் வேலையை ஆரம்பித்தால், மாலை ஆறு மணிக்குதான் அவர்கள் வேலை முடியும். ஒரு நூல் அறுந்து போனால் அதை சரி செய்வதற்கு ஒரு மணி நேரம் ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்கென்று இப்போது தனியாக மந்திரியே இருக்கிறார். அவர்களுடைய குறைகள் நிறைய இருக்கின்றன.

சீரம்பூர் நகர பஞ்சாயத்து, முசிறி யூனியனைச் சேர்ந்த த. புத்தூர் பஞ்சாயத்து, பாலகிருஷ்ணன்பட்டி பஞ்சாயத்து போன்ற பேரூராட்சி மன்றங்களில் ஆறு ஏழு மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. முன்னால் இருந்த அரசு, மக்களை அடிப்படையாக வைத்து, பஞ்சாயத்து பகுதிகளை பிரித்து தனித்தனியாக சிறு சிறு ஊராட்சி மன்றங்களாக மாற்றினார்களே தவிர வேறு எவ்வித மாற்றமும் ஏற்படுத்தவில்லை. இப்போது இந்தப் பகுதியில் ஆறு மாத காலமாக சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

குறிப்பாக, சீரம்பூர், முசிறி யூனியனில் த. புத்தூர், பாலகிருஷ்ணன்பட்டி, உப்பிலியபுரம் ஆகிய கிராமங்களிலே எந்த விதமான வசதியும் கிடையாது. குடி நீர் வசதி, ரோடு வசதி மற்ற எந்தவித வசதிகளும் இல்லாமல் சும்மா கிடக்கின்றன

1977 ஜூலை 23] [திரு. ரா. பெரியசாமி]

குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூன்று, ஊர்களுக்கு, நகர பஞ்சாயத்துக்களை ஊராட்சியாக மாற்றி, விரைவில் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையத் தினம் தமிழ் நாடு ஊராட்சிகளுடைய காலத்தை நீட்டிக்கக் கூடிய இந்த மசோதாவில் நானும் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஊராட்சியினுடைய பதவிக் காலத்தை 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு அளித்ததை இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதை நினைவிலே வைத்து, 6 மாத காலத்திற்கு நீட்டிக்கத் தேவையில்லை, தேர்தலை முன்னாலேயே நடத்தி விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவ்வாறு காலம் நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற காரணத்திலே ஒன்று, வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்பது, அந்த வேலை இன்னும் நடைபெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், ஊராட்சி வாக்காளர் இறுதி பட்டியல் 20-6-77 அன்றே ஊராட்சிகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஊராட்சி மன்றத்தின் தலைவர் என்கின்ற முறையிலே, என் போன்றவர்களுக்கு இந்தப் பட்டியல் கிடைத்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் சேர்க்கக்கூடிய பணி முடிவுபெற்றிருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல், இன்றையத் தினம் ஊராட்சி ஒன்றியங்களில் நடைமுறையில் நடக்க வேண்டிய வேலைகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதற்காக இரண்டு உதாரணங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில், குத்தாலம், குடவாசல் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு, பின்னாலே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்ட காலத்தில், வேலைகள் சரிவர நடைபெறவில்லை. அதிகாரிகள் யார் யார், என்னென்ன வேலைகளை நினைக்கிறார்களோ அந்த வேலைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. இராசமாணிக்கம்] [1977 ஜூலை 23

உதாரணமாக, குடவாசல் ஒன்றியத்தில் அச்சுதமங்கலம்—வயலூர் சாலை என்று ஒன்றிருக்கிறது. அதன் நீளம் சுமார் 6 கிலோ மீட்டர். அந்த 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு கப்பி போட வேண்டும். அப்படிப் போடுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தும் அதற்குப் பின்னாலே அது ரத்து செய்யப்பட்டு, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து அதற்கு அனுமதி அளித்து, அந்த வேலையை முடிப்பதாக முடிவு செய்தார்கள். அவ்வாறு முடிவு செய்யப்பட்டு, மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அவ்வாறு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டதற்குப் பின்னாலே, அரசாங்கத்திற்கு எழுதி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு பர்மிஷன் வாங்குவதற்கு அந்த ஒன்றிய அலுவலகத்திலிருந்து இதுவரையிலே எந்தவிதமான பேப்பரும், நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறார்களா, எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதுபோல், குத்தாலம் ஒன்றியத்தில், பொது நிதியிலிருந்து 7 பெரிய பாலங்கள் கட்டுவதற்கு நாங்கள் அனுமதித்தோம். அதற்குமேலே செலவு செய்வதற்கு, அரசாங்கத்திலிருந்து எஸ்டிமேட் எல்லாம் வாங்கியிருக்கிறார்கள்.

ஆனால் அந்தத் திட்டத்தை ஹைவேஸ் மூலமாகச் செய்ய வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்து அதற்கான முன் வைப்புத் தொகையைக் கூட ஹைவேஸ் இலாகாவிற்குச் செலுத்தியிருக்கிறோம். ஆனால் பல ஆண்டுகள் ஆகியும் அந்த வேலைகள் நடைபெறவில்லை, வேலை தாமதப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி நடைபெற வேண்டிய ஒன்றிய வேலைகள் நடைபெறுவதில்லை. தாமதம் இருக்கிறது. அதை எடுத்துச் சொல்ல இன்றைய தினம் ஒன்றியக் குழுக்கள் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றியங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தை நானும் உணருகிறேன். ஒன்றியங்கள்தான் கலைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, ஊராட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மாதம் ஒருமுறை கூப்பிட்டு தனி அதிகாரிகள் அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எவை எவை முக்கியமான திட்டங்கள், எதையெதை உடனடியாக செய்ய வேண்டுமென்று முடிவு செய்ய அவர்களை மாதம் ஒரு முறை அழைத்துப் பேச வேண்டும்.

1977 ஜூலை 23] [திரு. இரா. இராசமாணிக்கம்]

குடிதண்ணீர்ப் பிரச்சினை, சாலைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வில்லை. ஒரு ஊராட்சித் தலைவருக்குப் பிடிக்காத பகுதி என்றால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குழாய் கிணறுகளை அப்புறப் படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. தனக்குச் சாதகமாக வாக்களிக்காத பகுதிகளில் மின்சார விளக்குகள் எரியாமல் இருக் கின்றன. மேலதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் சரியாகக் கண்காணிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் விளக்குகள், குடிதண்ணீர் வசதிகள், சாலை வசதிகள் சரியான முறையில் இல்லையென்று சொல்லி கிராமத்திலிருந்து மனுக்கள் வருமேயானால் மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் உட னடியாகக் கவனித்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் சில பஞ்சாயத்துக்களில் வருமானங்கள் குறைந்திருக்கின்றன. அதற்கு ஒரு காரணம், சினிமாக் கொட்ட கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பகுதிகளில் இன்றைய தினம் நாடகங்கள் நடத்தி அந்த நாடகத்திற்குப் பிறகு பரிசு கொடுப்பது என்ற வகையில் ஒரு சூதாட்டம் போல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முன்னாலே ரெகார்டு டான்ஸ் நடத்தி வந்தது போல் இப்போது இந்த நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சினிமா பார்க்கக்கூடிய மக்கள் குறைந்து அவர்கள் பரிசு விழாதா என்று நாடகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு சினிமா மூலம் வரக்கூடிய வரி குறைந்து ஊராட்சிகளுக்குப் பங்கு குறைந்தி ருக்கிறது. பஞ்சாயத்துக்களுடைய வருமானம் குறைந்திருக்கி றது என்பதை அரசாங்கம் கவனத்தில் வைத்து அதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

மேலும் பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டி யவை நிறைய இருக்கின்றன. இரண்டு ரெவின்யூ வட்டத்தில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண் டும். காரணம், ஒரு ரெவின்யூ வட்டத்திலுள்ள ஒருவர் ஊராட் சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், அடுத்த ரெவின்யூ வட்டத்தில் இருக்கும் கிராமப் பகுதிகளைக் கவனிப்ப தில்லை. அங்கு வேலைகள் நடைபெறுவதில்லை, புறக்கணிக்கப்படு கின்றன. தலைவர் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கி றாரோ அந்த வட்டத்தில் வேலைகள் நடைபெறுகின்றன. இந்த நிலையைப் போக்க இரண்டு ரெவின்யூ வட்டங்கள் உள்ள பஞ்சா யத்துக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதை இந்த இடை வெளிக் காலத்தில் செய்து முடிக்க வேண்டும், என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. இராசமாணிக்கம்] [1977 ஜூலை 23

இன்னும் துரிதமாக ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அதை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னைப் போன்றவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கிறார்கள். நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும் ஊராட்சி மன்றத் தேர்தலைத் தள்ளிப் போடுவதில், விருப்பம் இல்லை யென்றும் கண்டிப்பாக ஜனநாயக முறைப்படி ஊராட்சி மன்றத் தேர்தலையும், ஒன்றியத் தேர்தலையும் நடத்த வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றியப் பெருந் தலைவர்கள் நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

[பிற்பகல் 12-30]

அப்படி ஒரு நல்ல திட்டம் கொண்டுவருவதை நான் மகிழ்ச்சி யோடு வரவேற்கிறேன். தனி அதிகாரிகள் கிராமப் பகுதி களிலே நல்ல திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும். அவர்கள் மாதந்தோறும் கூட்டம் போட்டு செயல்படக் கூடிய வகையில் அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த பில்லின் மீது பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் விருப்பப்படு கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது தாங்கள் தங்கள் சொந்தத் தொகுதிகளிலே உள்ள பிரச்னைகளையோ அல்லது சொந்த பஞ்சாயத்துக்களிலே உள்ள பிரச்சினைகளையோ நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலோ அல்லது மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திலோ சொல்வதற்கு வாய்ப்பு இருக் கின்ற காரணத்தால் இந்த பில்லுக்குத் தொடர்புடைய இது சம்பந்தப்பட்ட கருத்துக்களை மட்டும் சொன்னால் மற்றவர் களும் பேசுவதற்கான வாய்ப்பைப் பெறமுடியும். ஆகவே, மற்றவர்களும் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஊராட்சிகளின் பதவி நீடிப்பு சம்பந்தமான இந்த மசோ தாவையொட்டி என்னுடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத் திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் பேரூராட்சிகளும், சிற்று ராட்சிகளும் இன்றைய தினம் மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற நிர்வாகமாக இயங்கிக்கொண்டு வந்திருக்கின் றன. இன்றைய தினம் பொதுமக்களுடைய பிரதிநிதிகள் பிரச்

னைகளைத் தீர்க்க முடியும் என்பது இங்கே இருக்கின்ற அனைவருக்கும் தெரியும். இருப்பினும், ஊராட்சிகளில் இன்றைய தினம் குடிநீர்ப் பிரச்னை, சாலைப் பிரச்னை, மின் விளக்குப் பிரச்னை போன்ற பல பிரச்னைகள் இருந்தாலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதுமான அளவு நிதி வசதியில்லாத ஒன்றியங்களும் இருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும்.

அதே நேரத்திலே சில ஊராட்சி ஒன்றியங்களிலே தேவைக்கு மேலாக நிதி வசதி இருந்தும் ஊராட்சிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய முடியாத நிலைமை இன்றைய தினம் இருக்கக் கூடிய ஊராட்சிச் சட்டத்திலே இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒன்றியங்களில் ஏறத்தாழ 10 ஒன்றியங்களில் 25 லட்சம் ரூபாய்க்கும் மேலாக பொது நிதியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அப்படியிருந்தாலும் அந்தப் பொது நிதியை எந்த விதமான வளர்ச்சிக்கும் பயன்படுத்தக்கூடிய அளவிலே இல்லாமல் தேங்கிக் கிடக்கிறது. பொது நிதியை வைத்துக்கொண்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி என்பது குறிப்பாக விவசாயிகளிடமிருந்து வருகின்ற வருவாய் என்ற காரணத்தால்— அந்த நிதியை விவசாயிகளுக்கே செலவிடவேண்டுமென்ற அடிப்படையிலேதான் கம்யூனிட்டி போர் வெல், குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தை முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது.

அந்த அடிப்படையிலேதான் தஞ்சை மாவட்டத்திலே திருவிடைமருதூர் ஒன்றியத்திலே ஆடுதுறை பேரூராட்சியில், கம்யூனிட்டி போர் வெல், குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் போடப்பட்டு ஏறத்தாழ 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு அதன்மூலம் விவசாயிகள் அங்கே பயிர்செய்து இன்றைய தினம் நாற்று விடுகின்ற அளவிற்கு இருக்கிறது, இந்த வகையில் முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த நிதியைப் பயன்படுத்த ஏற்பாடுகளைச் செய்தது. அந்த முறையில் மீண்டும் இந்த அரசு கொண்டு வந்தால் விவசாயிகளுக்கு நன்மை தரும் திட்டங்கள் அமைய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் பொதுநிதியாக இருக்கிறது. விவசாயிகளுக்கு கம்யூனிட்டி போர் வெல் அமைத்துக் தருவதன் மூலம் விவசாயிகள் நாற்று விடும் காலத்தில் விவசாயம் செய்ய உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1977 ஜூலை 23

விவசாயிகளைப் பொறுத்தவரையில் தங்களுக்கு விளைச்சல் கிடைத்தாலும் அல்லது நஷ்டம் ஏற்பட்டாலும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை மட்டும் தவறாமல் செலுத்தி வருகிறார்கள். அந்த வகையிலே தான் இதுமாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் உபரி நிதியாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே கம்யூனிட்டி போர் வெல் அமைத்தோ அல்லது விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வர முடியாத நிலையில், பருவ மழை பொய்த்துப் போன நிலையில், விவசாயிகள் அல்லல்படும் நேரத்தில் ஆயில் எஞ்சின்கள், எலெக்ட்ரிக் மோட்டார் வாங்குவதற்கு இந்த ஊராட்சி ஒன்றிய பொது நிதியை மானியமாகக் கொடுத்தால் விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் கல்விக்கான பள்ளிகளைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியைப் பயன்படுத்துகிறார்கள். அந்த வகையிலே பள்ளிகளை அமைக்க ஊராட்சி ஒன்றியம் 40,000 ரூபாய்தான் உச்ச அளவாக, மாக்சிமம் லிமிட் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் இருக்கின்ற செலவினபடி 40,000 ரூபாய்க்குள் ஒரு பள்ளியைக் கட்ட முடியுமா என்றால் மிகவும் தேவைக்குக் குறைவாகவே அந்தக் கட்டிடம் அமைக்கப்படும் நிலையிருப்பதால் ஊராட்சி ஒன்றியங்கள் 40,000 ரூபாய்க்கு மேல் ஏறக்குறைய 70,000 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தி வருகிறார்கள். அந்தக் குழந்தைகள் காப்பகங்களில் மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளையும், கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகளையும் வளர்த்து வருகிறார்கள். அந்தக் குழந்தைகள் காப்பகத்தில் பணிபுரியும் பாலசேவிகாக்கள் 10, 15 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் கல்வித் தகுதி வேண்டுமென்று கேட்டு மூன்று மாத கால அவகாச நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 10, 15 ஆண்டுக்காலம் பாலசேவிகாக்களாகப் பணிபுரிந்தவர்கள் கல்வித் தகுதி இல்லாத காரணத்தால் ஒரு சிலர் தங்கள் வேலையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் கவனித்து குழந்தைகள் காப்பகத்தில் பணிபுரியும் பாலசேவிகாக்களின் கல்வித் தகுதியில் ஓரளவு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த ஆறு மாத காலமாக தனி அதிகாரிகள் பணிபுரிகிறார்கள். இந்தக் காலத்தில் அங்கே— ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த தலைவர்களுடைய படங்களும், முன்னாள் முதல்வர்களின் படங்களும் நீக்கப்பட்டிருக்கின்றன.

அதை இந்த அரசு கவனத்திற்கொண்டு மீண்டும் அந்தப் படங்களை ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சி மன்றங்களிலும் திறக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் வளர்ச்சித் துறையும், வருவாய்த் துறையும் இப்பொழுது எப்படி தனித்தனியே செயல்படுகிறதோ இதே நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். காரணம், வருவாய்த் துறையிலிருந்து வளர்ச்சித் துறை தனியாகப் பிரிந்த பிறகுதான் அங்கே பணிபுரியும் அலுவலர்கள் சிறப்பாகவும், தன்னிச்சையாகவும் செயல் பட முடிகிறது. வருவாய்த்துறையையும், வளர்ச்சித் துறையையும் எங்கே ஒன்றாக்கி விடுவார்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே, வருவாய்த் துறையும், வளர்ச்சித் துறையும் இப்பொழுது இருப்பது போலவே தனித்தனியாக இருக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து அவசர காலத்தில் வேலைவாய்ப்பை இழந்திருக்கின்ற இளைஞர் அணி போன்றவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். அதைப்போல வேலையற்ற ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாவின் படி ஆறு மாத காலம் இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆறு மாத காலம் என்பது மிகவும் அதிகப்படியாக இருப்பதால் ஆங்காங்கு கிராமங்களிலே இருக்கின்ற மக்களெல்லாம் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் விரைவிலே நடத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பதாலே, இந்த 6 மாத காலத்தைக் குறைத்து மூன்று மாதங்களுக்குள்ளோ அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளோ ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றால் பொதுமக்களின் அன்றாடப் பிரச்னைகள் எளிதாகத் தீரும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, ஊராட்சிகளுடைய பதவிக்காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பதற்கு வேண்டிய மசோதாவானது இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஆளுநர் அவர்கள் உரையிலே பஞ்சாயத்துத் தலைவர்களும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறை வரவேற்கப்பட்டிருந்த போதிலும் அதில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளதால், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னாலே அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டிய நிலைமையிலிருக்கிறது. அப்படி திருத்தப்படுகின்ற நிலையிலே அதிலே சட்ட சிக்கல் இல்லாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதிருக்கிற நடைமுறையின்படி பஞ்சாயத்துத் தலைவர்களை அந்தக்

[திரு. ரா. மார்க்கபந்து] [1977 ஜூலை 23

கிராமத்திலிருக்கிற வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு எம். எல். ஏ-வுக்கோ, எம். பிக்கோ இருக்கிற அதிகாரங்களை விட நேரடி அதிகாரம், கலெக்டருக்கு இருக்கிற அதிகாரத்தைவிட அதிக அதிகாரங்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடத்திலே ஒப்படைக்கப்படுகிறது.

அதே நேரத்தில் எல்லாவிதமான பொருளாதாரமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளுக்கு என்னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டுமோ அந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அபரிமிதமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தவறாகச் செல்கின்றபொழுது, அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலே சட்டங்களிலே திருத்தம் தேவைப்படுகிறது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்கள் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரலாம். உங்களைத் தேர்ந்தெடுக்க நாங்கள் ஓட்டு போட்டதனால், நீங்கள் எங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் இல்லை, ஆகவே, உங்களைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்று இப்பொழுது இருக்கிற பஞ்சாயத்துக்களுக்குப் பாதுகாப்புகள் இருக்கின்றன. நேரடியாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைத் தேர்தெடுக்கும்போது, அந்தப் பாதுகாப்புகள் இருக்க முடியுமா? தலைவர்களைத் திரும்பப் பெறுகிற உரிமை இருக்குமா? நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எப்படி அமுல்படுத்துவது என்பதைக் கவனிக்க வேண்டும். அதிலே சட்ட சிக்கல் இருக்கிறது. அதையும் கவனித்து அந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்துகின்ற வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்திலே ஒரு கமிஷனர் வைப்பது தான் சட்டம் என்கிற நிலைமையிருக்கிறது. அதற்கு ஒத்தாற் போல் பஞ்சாயத்து தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களானால் அவர்கள் கூட எதுவும் செய்யமுடியாத அளவுக்கு, அதிகாரங்கள் தற்போது கமிஷனரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களும் நாட்டு மக்களாலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். யூனியன் தலைவர்களும் அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரண்டு பேரலல் எலெக்‌ஷன்ஸ்—அந்த இரண்டு தேர்தல்களிலும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுடைய பிரச்னைகளை அணுகும்போது பஞ்சாயத்து யூனியனுடைய நிர்வாகத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் சொல்லத்தான் முடியும். It is merely recommondatory. அந்த யூனியன் தலைவருடைய அளவிலேதான் அவர்கள் சொல்கின்ற பரிந்துரைகள் இருக்க முடியும் என்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற

1977 ஜூலை 23] [திரு. ரா. மார்க்கபந்து]

உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்கள் நடக்கின்றபொழுது பிரத்தியேகமான ஓட்டிங் பவர் அவர்களுக்கும் இருக்கின்ற வகையிலே சட்டத்திலே திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கல்வித் துறையைப் பார்க்கின்ற நேரத்தில் அரசாங்கக் கல்வி நிலையங்களிலே பணியாற்றுகிறவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் தரப்படுகின்ற சலுகைகளிலே கூட வித்தியாசங்கள், மாற்றங்கள் இருப்பதாகத் தெரியவருகிறது.

பஞ்சாயத்து யூனியனிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றவர்களுக்கு எந்த விதமான புரமோஷன் ஆப்பர்சூனிடியும் இருப்பதாகத் தெரியவில்லை. '' ஏ '' விங் '' பி '' விங் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்கள் '' பி '' விங்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் '' பி '' விங்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் ரிட்டையர்மன்ட் ஆகிற வரையில் ஆசிரியர்களாக இருந்து ரிட்டையர் ஆகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த விதமான சிக்கல்களை மாற்றுகின்ற வகையில் பஞ்சாயத்து சட்டத்தை நீட்டிக்கின்ற நேரத்திலே உரிய திருத்தங்கள் கொண்டு வந்து எந்தவிதமான சிக்கல்களுக்கும் இடம் தராது ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன் வணக்கம்.

*திரு. நா. சுந்தரராஜ்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலும், ஒன்றியங்களைப் பொறுத்தவரையிலும் உள்ள நிலைமை இன்றையதினம் மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. காரணம், ஊராட்சி ஒன்றியங்களில் அதிகாரிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடிய அதிகாரிகள் மிகவும் வேதனை அடைந்திருக்கிறார்கள். காரணம், அவர்களுக்கும் வருவாய்த் துறையில் பணி புரியும் அதிகாரிகளுக்கும் உள்ள வேறுபாட்டை பார்க்கும்போது மிகவும் சிக்கலிலே பணி புரிவதாக அவர்கள் சொல்லுகிறார்கள்.

பதினைந்து ஆண்டுகளாகப் பணிபுரியும் ஆணையர் ஆணையராகவே பணிபுரிகிறார். ஒரு மேலாளர் 15 ஆண்டுகள் ஆகியும் புரமோஷன் இல்லாமல் மேலாளராகவே பணி புரிகிறார். கிராம சேவக்குகள் நிலைமையும் அதுதான். ஆகவே, பதவி உயர்வு என்பது அவர்கள் காலத்திலே சிந்திக்க முடியாத அளவிலே பணி புரிவதாக சொல்லு

கிறார்கள். இந்தச் சிரமங்களை அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனித்துத் தீர்க்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் நிம்மதியாக வேலை செய்தால்தான் கிராம மக்களுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு நிலையான தாக இருக்கும். வேறு வேறு அதிகாரிகள் வந்து வந்து போகலாம் என்ற அளவில்தான் செயல்படுவார்கள். ஆனால் மக்களிடம் நெருங்கி தொடர்பு கொள்ளக்கூடிய அளவில் இவர்கள் பணி யாற்றுகிறார்கள். அவர்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைத்தால் தான் மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

தனி அதிகாரிகளாக யார் இருக்கிறார்கள்? டி. டி. ஓ. தான் அவர் ஒருவர்தான் இன்றைய தினம் 40 ஊராட்சித் தலைவர்கள் ஒரு பெருந் தலைவர் பணியாற்றிய இடத்திலே தனி அதிகாரியாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார். புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 ஒன்றியங்களுக்கு ஒரு தனி அதிகாரி இருக்கிறார். அந்த அளவுக்கு அவர் தன்னுடைய வேலையையும் பார்த்துக் கொண்டு மற்ற ஒன்றி யங்களுடைய வேலைகளையும் எப்படிப் பார்ப்பது, எப்படி செயல் படுத்த முடியும் என்பது சந்தேகமாக இருக்கிறது. வேலைப்பளு அபரிமிதமாக இருப்பதால் நிச்சயமாக அவரால் வேலை செய்ய முடியாது. அவர் மீது குறை சொல்லவில்லை.

மக்களோடு நெருங்கிப் பழகும் உறுப்பினர்கள் ஒன்றியக் குழுவிலே பேசக்கூடிய கருத்துக்களின் பிரதிபலிப்புத்தான் ஒன்றியத் தீர்மானங்களாக அமைந்திருக்கின்றன. அதன் மூலமாக வேலைகள் நடைபெறுகின்றன. இன்றைய தினம் என்ன வேலை நடக்கிறது? எங்கே நடைபெறுகிறது, என்பது தெரியாத சூழ் நிலையிலே பல்வேறு இடங்களிலே—40, 50 ஊராட்சித் தலைவர் கள் ஒன்றியங்களில் இருந்தாலும் கூட ஊழல் நடைபெற்றது. ஆனால் இன்றையதினம் ஒரு சில அதிகாரிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்கள் நடந்தால் ஊழல் நடக்க சாத்தியக் கூறு இருக்கிறது.

நான் ஊராட்சித் தலைவராக பணி புரிந்த காலத்தில் 1970-ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் கொண்டு வந்தோம். ஊராட்சிக்கு ஒரு பெடஸ்டல் ஃபேன் வேண்டுமென்று. ஒன்றியக் குழு உறுப்பினர் பதவி விலகும் வரையிலும் இந்த ஆண்டு வரையிலும் வாங்கப் படவில்லை. டி. ஆர். டி. தான் சாங்ஷன் செய்யவேண்டும். 300, 400 ரூபாய் அளவிலே பொருள்கள் வாங்கவேண்டுமென்றால் டி. ஆர். டி. தான் சாங்ஷன் செய்யவேண்டும். இன்று வரையிலும் அந்த பெடஸ்டல் ஃபேன் வாங்கப் படவில்லை. காரணம் 'ரெட் டேப்பிசம்'. ஆகவே சிகப்புநாடா முறை ஒழிக்கப்படவேண்டும்.

முப்பது ஆயிரம் ரூபாய்க்கு பெருமான டிராக்டர், அன்றைய தினம் ஒன்றியகுழு தீர்மானம் இல்லாமல் வாங்கப்பட்டது. ஆட்சித் தலைவர் அன்றைய குழுவிற்கு டிராக்டரை அனுப்பிவிட்டு அதற்குப்

1977 ஜூலை 23] [திரு. நா. சுந்தரராஜ்]

பிறகு ஒன்றியக் குழு தீர்மானம் வாங்கி, ஒரு முறையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த டிராக்டர் சரியாக பயன்படுத்தப்படாத நிலையிலே 4 ஆண்டு காலம் ரிப்பேராகி, பிறகு மழையிலும் வெயிலிலும் காய்ந்து இன்றைய தினம் 100 ரூபாய்க்கு கூட யாரும் அதை வாங்கமுடியாத மோசமான நிலையிலே அந்த டிராக்டர் இருக்கிறது.

(பிற்பகல் 12-50)

இதுபோன்ற நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும். இவை அரசாங்கத்தின் சொத்து. அரசாங்கத்தின் சொத்து என்பது மக்கள் சொத்தே தவிர யாருடைய தனிப்பட்ட சொத்துமல்ல. இந்த எண்ணம் ஏற்படுத்தப்பட்டு அங்கங்கே வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றால்தான் சமுதாயத்திற்குப்பயனுடையதாக இருக்கும். திரு காமராஜ், காந்தியடிகள் வற்புறுத்திய கிராம வளர்ச்சி உண்மையிலேயே ஏற்படும். இல்லையென்றால் கடந்த காலத்தில் இருப்பதுபோல ஒரு அரசாங்கத்தின் மெஷினரி—இலாக்காவாகத் தான் இது இருக்குமே தவிர கடைசி வரையில் ஒரு வேலையும் நடைபெறாமல் போகும். எனவே, ரெட் டேபிசத்தைக் குறைத்து கிராம வளர்ச்சிப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு வேண்டிய ஒரு நல்ல நிலைமையை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில பேரூராட்சிகள், நகராட்சியாக மாறக் கூடிய சூழ்நிலை இருந்தும் கூட, அதைத் தடுத்து நிறுத்தபேரூராட்சிகளை இரண்டு மூன்றாக, தங்களுடைய சொந்த நலன் கருதிப் பிரிக்கலாமா என்கிற அடிப்படையில் தான் காரியங்கள் நடைபெறுகின்றன.

உதாரணமாக, எங்கள் பகுதியில் பொன்னமராவதி நகரம்—இரண்டாவது பெரிய நகரம். அறந்தாங்கியைப்போல நகராட்சியாக ஆவதற்கு பெரு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பொன்னமராவதி நகரத்தில் சில பகுதிகளை அதனோடு சம்பந்தப்படாத வேறு சில பகுதிகளுடன் சேர்த்து—கடந்த காலத்தில் தங்கள் சுயநலம் காரணமாக அவற்றோடு சம்பந்தம் இல்லாத ஊராட்சிகளோடு சேர்த்து—அதன் காரணமாக இங்கே ஜனத்தொகை குறைந்துவிடுகிற காரணத்தினால் இது நகராட்சியாக ஆக முடியாத சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். நகரத்தை ஒட்டியே இருக்கக்கூடிய பகுதி அந்த நகரத்திற்குள் சேரவில்லை. இதோடு சம்பந்தப்படாத கிராம ஊராட்சியில் இருக்கிறது. இதன் காரணமாக பல நல்ல பணிகள் நடைபெற முடியவில்லை. இந்த அரசாங்கம் அவற்றை எல்லாம் கவனித்து நகராட்சியாக மாறக் கூடிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றி, அங்கே திட்டப் பணிகள் செம்மையாக நடைபெற வசதி, வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1977 ஜூலை 23

இன்றைக்கு ஒன்றியத்தில் பணியாற்றுகிற அதிகாரிகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு இரண்டு எஜமானர்கள் இருக்கிறார்கள். கமிஷனருக்கும் கட்டுப்பட வேண்டும். அவர்களது துறைத் தலைவர்களுக்கும் கட்டுப்பட்டு செயல்பட வேண்டியிருக்கிறது. பொதுப்பணித் துறை, கால்நடை என்று இப்படி ஒவ்வொரு பிரிவிலும் இந்த இரண்டு நிலைதான். ஆகவே, இந்த அதிகாரிகளின் நிலைமை மிகவும் சங்கடமாக இருக்கிறது. யார் சொல்லைக் கேட்பது, யார் சொல்லைக் கேட்காமல் இருப்பது என்று தெரிவதில்லை. இந்த விசித்திரமான அமைப்பை மாற்றியே தீரவேண்டும்.

இன்னும் சில கிராமங்களை எடுத்துக்கொண்டால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பே 40 ஆயிரம் ரூபாய் செலவில் என் பகுதியிலேயே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. இன்றுவரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்கவில்லை. ஒருவர் ஒருவரைக் கைகாட்டுகிறார்கள். மின்சாரத் துறையைக் கேட்டால் வாட்டர் போர்டைக் கேட்கவேண்டும் என்கிறார்கள். வாட்டர் போர்டைக் கேட்டால் மின்சாரத் துறையிடம் கேட்கச் சொல்கிறார்கள். 40 ஆயிரம் ரூபாய் செலவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டும் 3 வருஷமாக எந்தவிதப் பயனும் அங்கே ஏற்படவில்லை. இதற்கெல்லாம் ஒரு தீர்வைக் கண்டால்தான் மக்களுக்கு உண்மையிலேயே நன்மை ஏற்படும்.

கிராமத்திலுள்ள மக்கள் வாக்களிப்பதைத் தவிர எங்களுக்கு என்ன நன்மை என்று சலித்துப்போகும் நிலையில் இருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களின் சதவிகிதத்தைப் பார்த்தால் சட்டமன்றத் தேர்தலில் அது குறைந்திருக்கிறது. தேர்தல் தேர்தல் என்று வாக்களிப்பதே எங்கள் கடமையாகிவிட்டது, வேலை எதுவும் நடைபெறவில்லை என்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளை அனுப்பவே வெறுப்படைகிறார்கள். எனவே, உடனடியாக இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கவேண்டும்.

ஒருசில கிராமங்களில் என்னுடைய பகுதியிலேயே 3 ஊராட்சிக்குச் சொந்தமான பகுதிகள் இருக்கின்றன. அந்த ஊராட்சிகளுக்கும் சங்கடமாக இருக்கிறது. அந்த ஊரில் உள்ளவர்களுக்கும் சங்கடமாக இருக்கிறது. யார் எந்தப் பணியை எந்தப் பகுதியில் செய்வது என்றே புரியாமல் இருக்கிறது.

உடனடியாக எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதியைச் செய்துகொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1977 ஜூலை 23] [திரு. நா. சுந்தரராஜ்]

அவற்றின் தேர்தலை 6 மாதங்களுக்கு நாம் ஒத்திவைக்க இப்போது திருத்தச் சட்டம் கொண்டுவந்தாலும், தேர்தலை விரைவாக நடத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமே தவிர தேர்தல்கள் வைப்பதை மட்டும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது

பொன்னமராவதியில் இதுவரை தண்ணீர் வசதி கிடைக்காமல் இருக்கிறது. பல்வேறு திட்டங்கள் போட்டும் தண்ணீர் கிடைக்கவில்லை. பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட அந்த பேரூராட்சியில் தண்ணீர் கஷ்டம் என்பது ஒரு பெரிய கொடுமையாக இருக்கிறது. மழை பெய்தாலும் கஷ்டம், மழை பெய்யாவிட்டாலும் கஷ்டம். குடி நீர் கொண்டுவர இரண்டு மைல்கள் நடந்து போகவேண்டியிருக்கிறது. அந்நிலையை மாற்றியமைத்து, அரசாங்க அதிகாரிகளும் சரி அல்லது அமைச்சர்களும் சரி இங்குள்ள கருத்துக்களை மட்டும் கேட்காமல் நேரடியாக அல்லது மாறுவேடம் போட்டுக்கொண்டாவது கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்னைகளை அறிந்து, ஊராட்சி நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, நிர்வாகத்தை எப்படி நடத்தினால் மக்களுக்கு அது நன்மைபயப்பதாக இருக்கும், ஊராட்சி ஒன்றியத்தை எப்படி நடத்துவது என்று ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர்களைக் கேட்டு, சட்டம் கொண்டு வந்து மக்கள் பிரச்னையைத் தீர்ப்பதை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவிற்குப் பேச அனுமதித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிடங்களுக்குள்ளாக முடித்துக்கொண்டால் இன்னும் பலர் பேச வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. துரை. கலியமூர்த்தி</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு வந்து பேச வாய்ப்பளித்தமைக்கு சிதம்பரம் தொகுதி வாக்காளர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து என் பேச்சைத் துவங்குகிறேன்.

இன்று பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர்கள் இல்லாத காரணத்தால் பஞ்சாயத்துக்கள் செயல்படாமல் இருக்கின்றன. பஞ்சாயத்துத் தீர்மானங்களை எடுத்துச் சென்று யூனியனில் வைத்து விவாதித்து நல்ல காரியங்களைச் செயல்படுத்த ஏதுவாக இருந்தது. ஆனால் அந்த வாய்ப்பு இன்று இல்லாமல் இருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்கள் செய்ய வேண்டிய காரியங்களில் குடிநீர், பள்ளிக்கூடங்கள், ரோடு வசதிகள், மின்வசதி இவை முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும்.

குடிதண்ணீரைப் பொறுத்தவரையில் யூனியனுக்கு ஒரு மெக்கானிக் என்று போட்டு வேலை செய்கிறார்கள். அது திருப்திகரமாக நடைபெறவில்லை. அதனால் சரியானமுறையில் நடவடிக்கைகள் எடுக்க முடிவதில்லை.

குடிதண்ணீரை எடுத்துக்கொண்டால் கஷ்ட நிலைதான் இருக்கிறது. கிராமங்களில் தண்ணீர் வசதி மிகக் குறைவான அளவில் இருக்கிறது. ஆகவே சிறப்பான சலுகைகளைக் கொடுத்தாவது கிராமங்களில் உள்ள குடிநீர் பிரச்னையைத் தீர்க்கவேண்டும்.

பின்னர், பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் அவை மிகவும் பிற்போக்கான நிலையில்தான் இருக்கின்றன. கிராமங்களில் பஞ்சாயத்து பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடிய கட்டடங்கள் சரியாக அமையவில்லை. ஒருசில ஊர்களில் கீற்றுக்கொட்டகைகள் தான் இருக்கின்றன. பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் 21–7–77-ல் நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுராமன் அவர்களும் வடக்கு பிச்சாவரம் சென்று அங்குள்ள பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டபோது அங்கு இரண்டு ஆசிரியர்களும், 43 ஆண் பிள்ளைகளும், 19 பெண் பிள்ளைகளும் இருந்தனர். மொத்தம் பிள்ளைகளின் எண்ணிக்கை 74. அந்தக் கீற்றுக் கொட்டகையில் கீற்றுக்கூட இல்லாமல் வாரைகள் விழுந்து சுற்று அடைப்பு இல்லாமல் இருக்கிறது. எப்படி அந்தப் பள்ளியை நடத்தமுடியும் என்று தெரியவில்லை. அந்த பக்கத்திலுள்ள யூனியன் சேர்மன் அவ்வப்போது கீற்றுக்கொட்டகையைப் புதுப்பித்துக்கொண்டிருந்தார். அந்நிலை கூட இன்று இல்லாமல் இருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டும்.

பஞ்சாயத்து ரோடுகளைக் கவனிக்கவேண்டும். யூனியன் மூலம் கவனிக்கப்பட வேண்டிய ரோடுகள் எல்லாம் பாழ்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துப் பேச மன்ற அமைப்பில் இடம் இல்லாமலிருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டும்.

(பிற்பகல் 1–00)

அதே நேரத்தில் பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் அண்ணா படம் எடுக்கப்பட்டிருந்தது. பின்னால் கடைசியாக நடைபெற்ற கூட்டத்திலும் ஏன் இதுவரை வைக்கப்படவில்லை என்று கேட்டதற்கு யூனியன் ஆணையர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக சொன்னார்கள். ஆனால் இதுவரை வைக்கப்படவில்லை. இதைப்பற்றி பின்னால் கேட்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

1977 ஜூலை 23] [திரு. துரைகலியமூர்த்தி]

அதே போன்று நான் தலைவராகவுள்ள பு. ஆதிவராகநல்லூர் பஞ்சாயத்தில் பள்ளிக்கூடம் ஒன்று கட்டுவதற்கு 75-ல் முடிவு செய்யப்பட்டு பஞ்சாயத்திலிருந்து அதற்குரிய பங்குத் தொகை கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதற்கு அப்போதிருந்த கமிஷனர் இடையூறாக இருந்து கொண்டிருந்தார். இதுபற்றி பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திலும் பேசப்பட்டது. பின்னால் இதுபற்றிப் பேசுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

இதைப்போல பல வேலைகள் நல்ல முறையில் நடைபெறாமல் இருந்து வருகிறது. ஆகவே உடனடியாகத் தேர்தல் வைத்தால் இவைகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரை மேற்படி நிலை, கீரப்பாளையம், காட்டுமன்னார்குடி பஞ்சாயத்துக்கள் உட்பட சிதம்பரம் தாலுகாவில் ஐந்து பஞ்சாயத்து யூனியன்கள் இயங்கிவருகின்றன. காட்டுமன்னார்குடி யூனியனில் 18 பஞ்சாயத்துகள் ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் இருக்கின்றன. கீரப்பாளையத்தில் 60 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இவற்றில் 40 பஞ்சாயத்துக்கள் ஒரு பகுதியாக இருக்கிறது. பாக்கியுள்ள 20 பஞ்சாயத்துக்கள் திருமுட்டம் பகுதியில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்து ஸ்ரீமுஷ்ணம் பஞ்சாயத்து யூனியனாக அமைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது. குறிப்பாக கீரபாளையம் யூனியனைச் சேர்ந்த கந்தகுமாரன்-கலியமலை தனித்தனி ரெவின்யூ கிராமங்களாக உள்ளன. சில இடங்களில் வசதியில்லாமல் உள்ள இந்த இரண்டு இடங்களையும் சேர்த்து ஒரே பஞ்சாயத்தாக வைத்திருக்கிறார்கள். இதை ஒன்றாக வைத்துக்கொள்ளாமல் தனித்தனியாகப் பிரித்து வைத்தால் நல்லதாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலை எவ்வளவு சீக்கிரம் வைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலை நடத்தி, மக்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துத்தேர்தலை ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைத்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராம ராஜ்யம்தான் இந்த நாட்டினுடைய ஜீவன் என்று தேச பிதா காந்தி அடிகள் கூறி வந்தார்கள். கிராமம் நன்றாக இருந்தால்தான் நாடும் நகரமும் நன்றாக இருக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டும். பல வருடங்களாக பஞ்சாயத்துகளில் அதிகாரிகள் இருந்து வருவதால் மக்களுடைய குறைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை இருந்து

கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அதிகாரிகளிடத்தில் சென்று கிராம மக்கள் தங்கள் குறைகளை தெரிவிக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிராம மக்கள் அவர்களுக்கென்று ஒரு தலைமையை தேர்ந்தெடுத்து, வைத்திருந்தால் தங்களுடைய தேவைகளை எடுத்துச் சொல்ல முடியும்.

உதாரணமாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். குடிநீர் வாரியத்திலிருந்து, கிராமம் தோறும், குழாய்க் கிணறுகள் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஓரிடத்தில் அந்தக் கிணறு வேலை செய்யவில்லை என்றால் அது அப்படியே இருக்கும். காரணம், அதைப்பராமரிக்கக்கூடிய எண்ணம் அங்குள்ள அதிகாரிகளிடத்தில் வருவதில்லை. அதே நேரத்தில் அதிகாரிகள் தங்கள் சொந்த வீட்டில் இப்படிப்பட்ட கஷ்டம் வந்தால் எப்படி உணருவார்களோ அதேபோன்று இதையும் உணருவார்களேயானால், இது போன்ற கிணறுகள் எல்லாம் நல்ல முறையில் இருக்கும். ஆனால் அதிகாரிகள் அந்த அளவுக்குக் கவலைப்படுவதில்லை. கிராம மக்களும் தங்கள் குறைகளைச் சொல்லிச் சொல்லி அயர்ந்து போய் உட்கார்ந்து விடுகிறார்கள். பஞ்சாயத்து தலைவராக இருந்தால் கடமை உணர்வோடு பணியாற்றுவார்கள்.

இப்போது நீடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஆறு மாதங்கள் கழித்து இன்னும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பு வருமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. மத்திய சர்க்காரால் அவசர கால பிரகடனம் செய்யப்பட்ட போது, கிராமங்களில் ரோடு வேலைகள், இதுபோன்ற பல வேலைகளுக்கு பணம் இல்லை என்று சொல்லி வேலைகள் எல்லாம் அப்படி அப்படியே நிறுத்தி வைத்திருந்தார்கள். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்த்து எங்கெந்த ரோடுகளுக்கு எங்கெங்கு பணம் ஒதுக்கப் பட்டது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோ அவற்றை தெளிவாக தெரிந்துகொண்டு, அந்த இடங்களில் எல்லாம் வேலைகளை ஆரம்பிக்க உத்தரவிட வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களை நல்ல முறையில் நிர்வகிப்பதற்கு, முன்னேடியாக கிராமப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் நான்கைந்து சிறுசிறு துண்டுகளாக ஒன்றாக எங்கெல்லாமோ சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓட்டுச் சாவடிக்குச் செல்ல வேண்டுமானால், ஆடு மாடுகளைப்போல் எங்கெல்லாமோ செல்ல வேண்டிய நிலைமை இன்றிருக்கிறது. இந்த நிலைமை மாறியாக வேண்டும். அவர்கள் ஓட்டுச் சாவடிக்குச் செல்லவேண்டுமானால், 3, 4 மைல்கள் நடந்து செல்ல வேண்டிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இதுவும் மாறியாக வேண்டும். உழைப்பவர்கள் இப்படி 3, 4 மைல்கள்

1967 ஜூலை 23] [திரு. ர. ஜெபமணி]

நடந்து செல்லக் கூடாது. பணக்காரர்கள் நினைத்தால், அவர்களையெல்லாம் ஒரு வண்டியில் கொண்டுபோய் ஓட்டு வாங்கிவிடக் கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

என்னுடைய சாத்தாங்குளம் தொகுதியை எடுத்துக்கொண்டால், அங்கே மூன்று யூனியனகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஓட்டுச் சாவடிக்கும் செல்லவேண்டுமானல், மூன்று மைல்கள் நடந்து வரவேண்டும். பெரிய பணக்காரர்களால்தான் அங்கு தேர்தலிலே போட்டி போட முடியுமே தவிர, என்னைப் போன்ற சாதாரண ஏழைகள் போட்டி போடுவதென்றால் கடினம். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயம் செய்வார்கள்; செய்யும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

நகரத்திலே உள்ளவர்களுக்கு ஓட்டுப் போடுவதற்கு எப்படி வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதை மனதிலே கொண்டு, கிராமத்திலே உள்ளவர்களுக்கும் அதுமாதிரி வசதிகள் செய்து தரவேண்டும். கிராமத்திலே உள்ளவர்கள் அந்த கிராமத்தை விட்டு, அடுத்த கிராமத்திற்குச் சென்று ஓட்டுப் போட வேண்டிய நிலைமை இன்றிருக்கிறது. அப்படி ஓட்டுப் போடச் செல்லும் போது, அந்த ஊர்க்காரர்கள் எங்கள் ஊருக்கு வந்து ஓட்டுப் போடுகிறீர்களே என்று சொல்லும்போது, அவர்களுக்கு அது அவமானமாகக் கூட இருக்கிறது. இதை அவர்கள் அவமானமாகக் கருதுவதால், அதையும் உடனடியாக நிவர்த்திக்க வேண்டும்.

இன்றைக்கு அதிகாரிகள் அவர்கள் இஷ்டத்திற்குச் செயல்படுகின்றார்கள். தங்கள் மனைவி, மக்களுக்கு இப்படிக் கஷ்டங்கள் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதை யோசித்துப் பார்த்து, அவர்கள் செயல்பட்டால் நல்லது. மக்களைப் பற்றி அவர்கள் நினைப்பதில்லை. ஆகவே, ஆங்காங்கே மக்கள் கமிட்டி உடனடியாக அமைக்கப்பட்டு, ஆராய்ந்து ஓட்டுச் சாவடிகளை அமைக்கவேண்டும்.

அதோடு, கிராமங்களிலே ஓட்டர் லிஸ்டில் பெயர்கள் விடப்பட்டிருக்கின்றன. இந்த லிஸ்டைப் பார்க்கும்போது, சில தெருக்களேகூட மொத்தமாக விடப்பட்டிருக்கின்றன. சிலர் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுடைய பெயர்கள் ஓட்டர் லிஸ்டில் இருக்கின்றது. ஆகவே, இவைகளையெல்லாம் பார்த்து, விட வேண்டியவைகளை விட்டு, சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்து ஓட்டர் லிஸ்டும் உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

கிராமங்களிலே உள்ளவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்தால்தான், நகரத்திலே இருக்கின்றவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். எனவே, நாம் அவர்களுடைய வாழ்க்கைத்

தரத்தை உயர்த்த உடனடியாக ஆவன செய்யவேண்டும். இந்த வாக்காளர் லிஸ்டை உடனடியாக திருத்தங்கள் செய்வதற்கும், கிராமங்களிலே கிராம ராஜ்யம் ஏற்படுவதற்கும், கிராமங்களின் நிர்வாகத்தை அங்குள்ள மக்கள் கையிலேயே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பயனுள்ள கருத்துக்களை வழங்கியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கூறிய கருத்துக்கள் இந்த மசோதாவோடு தொடர்புடையனவாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவைகள் எல்லாம் இந்த அரசின் கவனத்திற்குரிய கருத்துக்கள் என்ற வகையில், அவைகளைத் தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

ஆறு மாத காலத்திற்கு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்கள் தள்ளி வைக்கப்படுகின்ற அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக உணருவார்கள், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அண்ணன் கூத்தங்குடி சண்முகம் அவர்களும், பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்களும் வலியுறுத்திச் சொன்னார்கள். அதேபோல் மற்றைய உறுப்பினர்களும் வலியுறுத்திப் பேசினார்கள். சில ஊராட்சிகள் பிரிக்கப்பட வேண்டும்; சில ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டும்; சில ஊராட்சி எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கருத்து தெரிவித்தார்கள். அவைகளை வரையறுப்பதற்கான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அதற்குள் நாடாளு மன்றத் தேர்தல், சட்டசபைத் தேர்தல் நடந்த காரணத்தால், உள்ளாட்சித் துறை நிர்வாகத்திலிருந்து, இந்தத் தேர்தல்கள் நடந்து முடியும்வரை எந்த மாற்றமும் கூடாது, ஊராட்சி மன்றங்களின் எல்லைகள் வரையறுக்கக் கூடாது என்று தமிழக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அதனால்தான் இந்தப் பணி விரைவாக மேற்கொள்ளப்படவில்லை.

(பிற்பகல் 1-10)

அதே போல், இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுபோல் வாக்காளர் பட்டியலைத் திருத்தியமைக்கும் பணியையும் நாம் செய்தாக வேண்டியிருக்கிறது. அதனை நிறைவேற்ற கால அவகாசம் தேவை. இனி வாக்குச் சீட்டுக்களை, ஊராட்சி மன்றங்களின் தேர்தல்களைப் பொறுத்த அளவில் மிகப் பெருமளவில் அச்சடிக்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 4½ கோடி வாக்குச்சீட்டுகளை அச்சடித்தாக வேண்டும். அதற்கு கால அவகாசம் தேவை.

1977 ஜூலை 23] [திரு. கா. காளிமுத்து]

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், வழக்கறிஞர் மார்க்கபந்து ஆகியோர் குறிப்பிட்டதைப் போன்று ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் நேரடியாக நடத்த வேண்டுமென்று இந்த அரசு அறிவித்திருப்பதைப் பற்றி ஊராட்சி மன்றங்களின் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யப்படுகிற மாறுதலின் மூலமாக எத்தகைய சட்டச் சிக்கலும் ஏற்படாதவாறு நிலைமைகளைப் பரிசீலித்து அதை மேற்கொள்ள வேண்டும். ஆக, இப்படிப்பட்ட காரணங்களால் இந்தக் கால அவகாசத்தை அரசு கேட்கிறதே தவிர, எத்தகைய ஜனநாயக சோதனைக்கும், எந்த நேரத்திலும் தயாராக இருக்கும் வகையில் இந்த அரசு இருக்கிறது என்பதை நீங்கள் நிச்சயமாக உணருவீர்கள். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குடிதண்ணீர் தருவதில், சாலைகள் அமைப்பதில் இருக்கிற பல சிக்கல்களை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். பல இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன; ஆனால் அவை பழுதடைகின்றன; பழுது பார்ப்பதில் உரிய பலன் இன்று கிடைக்கவில்லை என்பதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்போது இருக்கும் சூழ்நிலையில் அதைப் பழுது பார்ப்பதற்கு உண்டான பணியைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டு அதை மேலும் விருவிருப்பாகச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற பாலசேவிகாக்கள் கல்வித் தகுதியில் குறைந்திருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி வேலை நீக்க உத்தரவு இந்த அரசு அமைவதற்கு முன்னால் அனுப்பப்பட்டது. சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த உத்தரவை ரத்துச் செய்து தொடர்ந்து அவர்கள் பணியாற்றலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கால அவகாசத்தை அரசு கேட்பதற்குரிய நல்ல நோக்கத்தை உணர்ந்து இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டும், நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் அமைகின்றேன்.

(திரு எம். ஏ. லத்தீப் பேச எழுந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிமுடித்து விட்டார்கள். நீங்கள் பேசுவதாக இருந்தால் முதலிலேயே பேசியிருக்க வேண்டும்.

திரு எம். ஏ. லத்தீப் : நீங்கள் அல்லவா கூப்பிட்டிருக்க வேண்டும் / நீங்கள் கூப்பிட்டிருந்தால் நான் பேசியிருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் இல்லாத காரணத்தால் கூப்பிடவில்லை.

திரு எம். ஏ. லத்தீப் : நேரம் இல்லையென்று சொல்லியிருக்கலாம். ஆயிரம் தடவை சொன்னேன் நான்.

I have been sitting here for the past one hour, You could have told me. If you do not want, I will not speak.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கு வந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் யாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கம் இங்கு இல்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் உங்களைக் கூப்பிடவில்லை. உங்களைப் பொறுத்தவரை ஏற்கனவே நீங்கள் இதற்கு முன்னால் பில்லில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் காரணத்தாலும், நேரம் இல்லாத காரணத்தாலும் அமைச்சர் பேச அழைக்கப்பட்டார். உங்களுடைய விருப்பம் நீங்கள் கண்டிப்பாக பேசித்தான் ஆகவேண்டுமென்று சொல்லியிருந்தால் அமைச்சர் பேசுவதற்கு முன்னாலேயே கருத்தைத் தெரிவித்திருக்கலாம். உங்களுக்கு ஐந்து நிமிஷம் கொடுத்து அதற்குப் பின்னால் அமைச்சர் அவர்களை அழைத்திருக்கலாம். அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசுவது மரபுக்கு ஒவ்வாதது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் தயவு செய்து பின்னால் வருகிற சந்தர்ப்பங்களில் பேசலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நேரம் இல்லையென்று சொன்னால் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பேசித்தான் ஆகவேண்டுமென்ற அவசியமில்லை. எனக்காக வெளியே ஒருமணி நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களிடத்தில் கையைக் காட்டி ஒரு மணிநேரமாகிறது. இதிலே பேசவேண்டுமென்பதற்காக என்னுடைய மற்றக் காரியங்களை விட்டுவிட்டு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். என்னைப் பார்த்துக் கொண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தாங்கள் அழைத்தீர்கள். என்மீது தனிப்பட்ட முறையில் இந்தச் சேருக்கு ஏதோ இருக்கிறது என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தங்களுடைய பெயரை அழைக்காததிலிருந்தே நேரம் இல்லாததால் அழைக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த பில்லின் அடுத்த கட்டத்திலே வேண்டுமானால் நீங்கள் பேசுங்கள்.

1977 ஜுலை 23]

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார், நான் ஆலோசனைக்குழு அமைப்பது பற்றி கருத்துக்களைச் சொன்னேன், அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்கள் மேலான ஆலோசனைகள் அந்தந்தப் பகுதிகளுக்குரிய வகையிலே பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அண்ணன் கூத்தகுடி சண்முகம் அவர்கள் தெரிவித்த ஆலோசனைக் குழு அமைக்கப்படவேண்டுமென்ற கருத்தை அரசு ஆலோசனை செய்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு பில்லின் மேல் வாக்கெடுப்பு நடக்கிறபோது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது என்பது நடைமுறையில் இல்லாதது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள்

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I submit that this Bill suffers from imperfections because the Bill that has been brought forth.

MR. DEPUTY SPEAKER: Extremely sorry. Please sit down.

THIRU M. A. LATHEEF: Continuously I am being educated as if I am a new member of this House. This sort of education I do not expect from the Chair as to how I should behave.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் மூவ் பண்ணிய பிறகு நீங்கள் பேசுங்கள் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/77) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்". என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. லத்தீப் தயவு செய்து பேசுங்கள்.

திரு. எம்.ஏ. லத்தீப்: தயவு செய்து என்று சொல்ல வேண்டியதில்லை.

If the Chair desires that I should not speak, I am not going to speak. I will not take part in the further proceedings of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. நான் கற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். இந்தச் சபையின் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையிலேதான் நான் சொல்கிறேன். உங்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதில்லை, நீங்கள் சொல்லுங்கள், கற்றுக்கொள்கிறேன். இந்த அவையிலே நான் கற்றுக்கொள்ளவேண்டுமென்று-மன்றத்திற்குப் புதியவன் ஆதலால்—விரும்புகிறேன், ஆகவே தாங்கள் தயவு செய்து அதுமாதிரிச் சொல்லாதீர்கள்.

திரு. எம்.ஏ. லத்தீப்: இந்த சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் முழுமையும் நிறைவேறாத வகையில் அந்த நோக்கம் முழு வடிவைப் பெறாமல் இருக்கக்கூடிய வகையில் கொண்டுவரப்பட்டிருப்பதால் இதை நான் எதிர்க்கிறேன். பஞ்சாயத்துக்களின் பதவிக்காலத்தை நீடிக்கவேண்டுமென்பது சட்டம். பஞ்சாயத்து என்பது உறுப்பினர்களையும் தலைவரையும் கொண்டதுதான் பஞ்சாயத்து. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் என்பது ஒன்று, பஞ்சாயத்து தலைவர் என்பது மற்றொன்று. பஞ்சாயத்துத் தலைவர் இரண்டு உரிமைகளைப் பெற்றிருக்கிறார். ஒன்று தலைவராக இருப்பது. அந்தப் பஞ்சாயத்தினுடைய நிர்வாகத்தை நடத்துவது ஒன்று. இன்னொன்று, நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதால் அந்தப் பஞ்சாயத்துக்குத் தலைமை வகிப்பதோடு பஞ்சாயத்து யூனியனிலே உறுப்பினராகப் பதவி வகிப்பது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்ட நிலையிலே ஓர் உரிமைதான் பாதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பஞ்சாயத்துத் தலைவருக்கு இருக்

1977 ஜூலை 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

(பிற்பகல் 1-20)

கின்ற மற்றொரு உரிமையான Ipso facto he becomes a member of the Panchayat Union என்று இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்ட நிலையிலே சாத்தியம் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்தக் குறை இருக்கும்பொழுது நீங்கள் ஏற்கனவே நிறைவேற்றிய ஒரு சட்டத்தில் பதவி என்பது பஞ்சாயத்துத் தலைவரைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துக்குத் தலைமை வகிப்பது, நிர்வகிப்பது, உறுப்பினராக இருப்பது ஆகிய இந்த மூன்றையும் கொண்டது அந்தப் பதவி. இப்பொழுது பதவியை நீடிப்போமானால் ஒரு நிலை விட்டுப்போகிறது. அந்த நிலையைப் பற்றி இந்தச் சட்டத்தில் எதையும் சொல்லவில்லை. அந்த நிலையைச் சொல்லாமல் இருந்தால் பொருளற்றதாகிவிடுகிறது. இதைப்பற்றியும் இதில் சொல்லியிருந்தால் முழுமை கிடைத்திருக்கும்.

அப்படிச் செய்தால்தான் அது பஞ்சாயத்துத் தலைவருக்குள்ள முழு உரிமையும் பயன்படுத்தக்கூடிய சட்டமாக, ஏற்கனவே பெற்றிருக்கின்ற உரிமைகளைப் பயன்படுத்தும் சட்டமாக அமையுமே தவிர, இப்பொழுது இருக்கின்ற அடிப்படையில் நிறைவேற்றினால் பஞ்சாயத்துத் தலைவருக்கு இருக்கும் உரிமைக்கு இடமில்லாமலா போகிறது, பொருளற்றதாகிவிடுகிறது. இதைக் கவனித்து இப்பொழுது இதை வாபஸ் பெற்று மீண்டும் இந்தக் குறையை நீக்கும் வகையில் கொண்டு வருவது நல்லது. இல்லையென்றால் பஞ்சாயத்து யூனியனை எப்படிக் கலைத்தார்களோ அதைப்போல பஞ்சாயத்துக்களையும் கலைத்து விட்டு, தேர்தல் நடத்தும்பொழுது இரண்டுக்கும் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டும்.

பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு நீட்டிப்பு கிடைக்கிறது, பஞ்சாயத்து தலைவருக்கு கிடைக்கவில்லை அவருடைய உரிமை பாதுகாக்கப்படவில்லை, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் இது முழுச் சட்டமாக இருக்காது, எனவே இதனை வாபஸ் பெற்று இந்தக் குறைகளை நீக்கும் முறையிலே சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறிக்கொண்டு எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஊராட்சித் தேர்தல் எப்பொழுதோ நடந்திருக்க வேண்டும் அவர்களுடைய பதவிக்காலத்தை மேலும் மேலும் நாம் நீடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஆறு மாதங்களில் நடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்த உள்நோக்கமும் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப் புரிந்து கொண்டு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: My problem is the Panchayat Chairman is not only to administer the affairs of the Panchayat for which he is President and also preside over the meeting of the Panchayat but also be a member of the Panchayat Union. All these aspects are composed together. Then only it becomes complete. One aspect is not incorporated in this Bill. What happens to his right and privilege to be a member of the Panchayat Union. You must say "excepting his privilege of being a member of the Panchayat Union". You must clarify that. Unless you clarify that, this becomes incomplete.

மாண்புமிகு க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே பஞ்சாயத்துச் சட்டத்திலே அப்படி இல்லை. ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றவர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியை வகித்துக்கொண்டிருப்பதால் பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர் ஆவார் என்று சட்டத்தில் இல்லை.

THIRU M. A. LATHEEF: Then what about his office as member of Panchayat Union?

மாண்புமிகு க. உரொ. எட்மண்ட்: ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்கனவே கலைக்கப்பட்டிருக்கின்றன.

The *status quo* must continue.

THIRU M. A. LATHEEF: If it is said that this has continued in the past year and this Government also wants to continue that practice, I have nothing to say.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1977-ம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/77) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 25-7-77 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and other papers.*

@7. Annexure to the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1977 (L.A. Bill No. 2 of 1977).

@8. Annexure to the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1977 (L.A. Bill No. 3 of 1977).

%9. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1977 (L.A. Bill No. 2 of 1977).

%10. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1977 (L.A. Bill No. 3 of 1977).

%11. Annexure to the Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Bill, 1977 (L.A. Bill No. 4 of 1977).

†12. The Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1977 (L.A. Bill No. 4 of 1977).

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

@ Despatched to members on 13th July 1977.
% Despatched to members on 14th July 1977.
† Despatched to members on 20th July 1977.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

7. Annexure to the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1977 (L.A. Bill No. 2 of 1977).

8. Annexure [illegible] Council (Appointment of Special O[illegible] Amen[illegible] L.A. Bill No. 3 of 1977).

*9. The Tamil Nadu [illegible] Councils (Appointment of Special Officers) [illegible] L.A. Bill No. 2 of 1977).

*10. The [illegible] Corporation [illegible] (Appointment of Special Officer) Amendment [illegible] Bill No. 3 of 1977).

*11. Annexure to the Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Bill, 1977 (L.A. [illegible] 1977).

†12. The Tamil Nadu [illegible] Term of Office) Amendment Bill, [illegible]

† [illegible]d to members on 13th July 1977.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS